உ

கணபதி துணை.

# பெருந்தோட்டத்து

# அத்திச்சுரபுராணம்.

இஃது

## ஸ்ரீ வன்றொண்டரவர்கள்

மாணாக்கருளொருவராகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச்செட்டியாரவர்களால்

இயற்றப்பெற்று

ஷையார் மாணாக்கருளொருவராகிய

ஷையூர்

ராம. உ. ராமசாமி செட்டியாரால்

ஷையூர்

“ஞானம்பிகா” ப்ரின்டிங் வொர்க்ஸில்

அச்சிடப்பெற்றது.

பிங்கள-வருஷம் ஆடி-மீ

1917.

உ

# குறிப்பு.

இத்திருப் பெருந்தோட்டத்து அத்தீச்சுரமென்னுஞ் சிவக்ஷேத்திரம், ஸ்ரீவாகீசத்திருவடிகள் திருவாய்மலர்ந்தருளிய பொதுத்திருப்பதிகங்களிலொன்றாகிய அடைவுதிருத்தாண்டகத்திருப்பதிகத்தில் எட்டாவது திருவிருத்தமாகிய,

நாடகமாடிட நந்திகேச்சுர மாகாளேச்சுர நாகேச்சுர நாகளேச் சுரநன்கான
கோடீச்சுரங் கொண்டீச்சுரந் திண்டீச்சுரங்குக்குடேச்சுரமக்கீ சுரங்கூறுங்கா
லாடகேச்சுர மகத்தீச்சுர மயனீச்சுர மத்தீச்சுரஞ் சித்தீச்சுர மந்தண்கான
லீடுதிரையிராமேச்சுர மென்றென்றேத்தி யிறைவனுறை சுரம்பலவுமியம்பு
[வோமே.

என்னுந் திருப்பாசுரத்திலே, நந்தீச்சுர முதலிய பன்னிரண்டு திருத்தலங்களுக்கு மேலிருத்தலால், இது, துவாதசாந்த ஸ்தலமாகிய மதுராபுரியேயென்றுலகெலாம் வியந்து பாராட்டும்படி விளங்குகின்றது.

இத்தலம், காசிநல்லிய பொன்பதுபசாரமாகாமல், மணிகர்ணிகைத்தீர்த்தம வடவிருக்ஷமாதிகளாலும் உண்மையென்றே விளக்குகின்ற தெக்ஷிணகாசியாகிய திருவெண்காட்டினது எண்டிசைகளுட் சிறந்த ஈசானதிசையில் ஒருகுரோச தூரத்திலுள்ளது. திருவெண்காட்டின் பஞ்சக்குரோச ஸ்தலங்கள்பலவற்றுள்ளுஞ் சிறந்ததாய்த் திருவெண்காட்டீசர் நம் இங்கெழுந்தருளித்தீர்த்தோற்சவங்கொண்டருளுகின்ற திவ்விய மகிமைவாய்ந்தது.

இத்தலத்திலுள்ள கார்காத்தவேளாளர்மரபினரில், கல்வியறிவொழுக்கங் குருலிங்கசங்கமபத்தியிற்சிறந்தசிவபூசகராகிய துரைச்சாமிபிள்ளையவர்கள், எனது ஆசிரியராகிய ஸ்ரீ சொக்கலிங்கதேசிகரவர்களிடத்தில், இத்தலபுராணத்தை வடமொழியினின்றுந் தமிழ்மொழிபெயர்த்துச் செய்யுள்வடிவாக்கித்தரல்வேண்டுமென்று மிகுந்தஆசைவயத்தராய்விரைவுகாட்டினர். அவர்விரைவுக்குறிப்புநோக்கித் திருவருளை முன்னிட்டுத்தமது சிவபூஜாதி நியமங்களினின்று மிஞ்சிய நேரயாத்திரையே தொடங்கிஒருமாசத்துக்குள்முடித்துக் கொடுத்தார்கள். அங்ஙனமாகவும், இப்புராணத்தைஅச்சிடுவிக்கும்படி கேட்டுக்கொண்ட ஷை பிள்ளையவர்களுக்குச்சம்மதங்கொடுத்தவராற் காலதாமசமாகிவருஷமூன்றுகழிந்தமையால், அவர்சாவகாசமின்னும்நோக்கி இதனை லோகோபகாரமாக வெளியிடாமல் மேலுந் தாமசமாகவைப்பது நன்மையன்றெனக்கருதியே ஈண்டுஇச்சிவபுராணத்தை அச்சிடுவித்தேன்.

இங்ஙனம், ராம. உ. ராம.

# சிறப்புப் பாயிரம்.

தேவிகோட்டை

**வெ. ஆதி. மா. சிதம்பரச் செட்டியாரவர்கள்.**

இயற்றியது.

---

பொன்பூத்த நிறச்சடிலர் புழைபூத்த கரச்சுமுகர் புராண போதர்
மன்பூத்த விநாயகனூர் மலர்பூத்த வடிப்பரிச மகிமை வாய்ந்து
கொன்பூத்த தமிழ்முனிகைக் குளிர்பூத்த குண்டிகையிற் குலாவிச் சையத்
தென்பூத்த வரையுதித்துத் திசைபூத்த விசைப்பொன்னிச் சென்னிநாட்டில்

தொன்மைபெறு சுத்தாதது விதசைவ சித்தாந்தத் துறைப்பு குத்தி
நம்மையெலா முய்விக்க வடமொழியின் மேயசிவ ஞான போதச் [செய்த
செம்மைபெறுங் நதநூலைத் தமிழ்மொழியின் மொழிபெயர்த்துத் தியாகஞ்
திண்மைபெறு மெய்கண்ட சிவாசாரி யாருதித்த சிறப்பின் பொம்மல் (உ)

முக்குளநீர் மூவர்தமிழ் முன்னுளவெண் காட்டினுக்கு மொழியீ சாந
திக்கதனிற் றிகழ்பதியாய்த் தேவார வைப்பொன்றாய்ச் செநநியான
மிக்கருளொப் பிலாமுலையாம் விமலையுட னத்தீசர் மேவி வாழ்சீர் [ன்மை
தொக்கபெருந் தோட்டமெனத் தொல்லுலகில் வழங்குமத்தீச் சுரத்தின் மே
[யேற்
வடமொழியின் மேயதனைத் தென்மொழியின் மொழிபெயர்த்து வழங்கு வா
றிடமுறக்கற் றுய்வேமென் றந்நகர்வாழ் சிவனன்பர் செப்பக்கேட்டுக்
குடமுனியுங் கலைமகளு மதிசயிப்பக் குற்றமறக் குணங்கண் மல்கப் [தான்
புடமுயர்செம் பொன்னேபுத் தமுதோவென் றுலகுவப்பப் புராணஞ் செய்

மற்றவன்யா ரெனிற்பாண்டி வளநாட்டிற் காரைநகர் மன்னி வாழுங்
குற்றமிலா வசியகுலத் திராமநா தக்குரிசில் குயிற்று மேலை
நற்றவத்தா லுற்றபொருள் வன்றொண்டர் மாணுக்கன் ஞான நூல்கள் [ன்
கற்றுணர்ந்தந் நெறிநிற்போன் கவின்செயிலக் கணமைந்துங் கைவந்துள்ளா

பாலருமோர்ந் தெளிதுயுமா பொதுவேத நெறிச்சார பால பாட
மேலசிவா கமத்துறையே விளக்குசைவ வினாவிடைமுன் வியனூ றந்துஞ்
சீலவருட் செயன்மேலுஞ் செயற்கரிய செய்வரென நிகழ்த்துஞ் சீர்த்தி
ஞாலமலி யாறுமுக நாவலர்கோன் றிருவடிக்கு நவிற்றுந் தொண்டன். (சு)

விஞ்சையனூ ரம்மிலக்கு நிருவாண தீக்கைபெற்று விமலன் றாளைப்
பஞ்சசுத்தி செய்துதினம் பாவிப்போன் பிள்ளையார் பட்டி யென்னுங்
குஞ்சரவ தனப்பெருமான் கோயிலினன் 'மாணவருட் கொள்ள நூலோ
தஞ்சலியாப் புகழ்படைத்தோன் சொக்கலிங்க தேசிகனுந் தூயன் மாதோ.

---

# பிழை திருத்தம்.

| பக்கம் | பாட்டு | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|---|
| ௧ | ௬ | ௫ | துய்து | துய்த்து |
| ௧௨ | ௪௨ | ௬ | ொழுத்தி | தொழுத்தி |
| ௧௫ | ௧ | ௪ | பொருகண் | பொருள்கண் |
| ௧௮ | ௧௯ | ௩ | வீழ்ரித் | வீழ்விரித் |
| ௨௨ | ௫௧ | ௩ | விச்சக | லிச்சக |
| ௨௬ | ௯௮ | ௪ | ண்ண ணு | னண் ணு |
| ௨௮ | ௧௧௩ | ௨ | புந்து | புகுந்து |
| ௩௧ | ௧௨ | ௧ | ஞுண்மை | ஞுண்மை |
| ௩௫ | ௮ | ௨ | தவததார் | தவத்தார் |
| ௩௯ | ௧௧ | ௪ | பொறுதி | பொறுத்தி |
| ௪௰ | ௧௯ | ௧ | கடவள் | கடவுள் |
| ௫௰ | ௧௰௯ | ௨ | லதர்வா | லதர்வந் |
| ,, | ,, | ௩ | துணரந் | துணரா |
| ௫௩ | ௧௩௪ | ௪ | தூயனெஞ் | தூயநெஞ் |
| ,, | ௧௬௯ | ௪ | றிருக்குல | திருக்குல |
| ௫௫ | ௧௫௧ | ௩ | கொணட | கொண்ட |
| ,, | ,, | ,, | ிருபா | ிருப |
| ௬௪ | ௫௪ | ௪ | படிஇ | படீஇ |
| ௭௨ | ௬ | ௪ | திவவிய | திவ்விய |
| ௭௯ | ௪௰ | ௧ | மிங்மர் | மிங்கமர் |
| ,, | ௪௪ | ௨ | தருனூல் | தருனூல் |
| ௮௰ | ௩௪ | ௨ | வல்லுண | வல்லுந |
| ௮௧ | ௪௪ | ௩ | பொகுத்து | பொருத்து |
| ௮௨ | ௪௯ | ௪ | செயிலி | செயலி |
| ௮௯ | ௬௰ | ௧ | பொறுட் | பொருட் |

☞ இப் புராணத்திற் சில இடங்களில் எதுகைநோக்கி நகரம் ணகரமாயிருக்கும் இடம் நோக்கி நகரமாகவேகோள்க.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பெருந்தோட்டத்து

# அத்தீச்சுரபுராணம்.

## காப்பு.

மாமேவு பிரணவத்தின் மாண்பொருடா னேயென்னும் வாய்மை யாருந்
தாமேதேர்ந் துயவருள்வ தனத்தகர வுகரமக ரங்கள் காட்டித்
தேமேவு மாபூதத் திருவுருவான் யேலுமது திகழத் தேற்றும்
வாமேவத் தீச்சுரத்து வாதாடு கணபதிதாள் வணங்கி வாழ்வாம். (௧)

கங்கை மதியிதழி தும்பை வனியறுகு கந்த படர்சடில கணநாதா
புங்க வரைமுனைவ ருஞ்செய் வினைமுடிபுமன்ற மறையுமெதிர் புரிபோதா
துங்க பிரணவமன் முன்பு களிறுபிடி துன்ற வருநிமல சுகசாதா
வைங்கையிபமுகநினம்பொனடிபரவுமென்றன்வினைநிறையவருணீதா. (௨)

### நூற்பயன். (வேறு.)

மதிவதன வதுலகுசாம் பிகைபான் மேவி வழங்கருளத் தீச்சுரன்றன்
மாண்ப 'தாய, நதிபலசேர் பயோததியி னருள்விலாச நவில்சரிதம் பல
விளங்கு நயங்கொள் காதை, விதிவழிசொல் பவர்கேட்போர் சொல்விப்
போர்கள் வியனுலகி னரேந்திராய் மிக்கு வாழ்ந்து, துதிதருவிண் சுரேந்திர
ராய்த் துய்துச் சைவ சுத்தாத்து விதானந்த தோய்ந்து வாழ்வார். (௩)

### வாழ்த்து. (வேறு.)

வேதநெறி மகம்வளர்க மிகுசைவத் துறைவிளங்க மேகம் பெய்க
சீதவளம் பலபெருக சீவரெலா மின்பநலந் திளைத்து வாழ்க
பூதபரம் பரைபொலிக பூதிசா தனமலிக புரவ லன்கோ
லோதநெடுங் கடலுடுத்த வுலகமெலா மநுமுறையே யோங்கி வாழ்க. (௪)

### கடவுள் வாழ்த்து. (அத்தீச்சுரர்.)

மதிவளர்பொன்முடியானைமலந்தெறுவெண்பொடியானைவல்லா னேற்றுத்
துதிவளர்திண்கொடியானைத்தூமறைசொனடியானைத்துழாய்மால்காணுக்
கதிவளர்சே வடியானைக் கரமலிசீர்த் துடியானைக் கடலசூழ் வைப்பி
னிதிவளர்சீர்ப் பெருந்தோட்டத் தத்தீசன் றனைத்தினமு நினைந்துவாழ்வாம்

### அதுலகுசாம்பிகை.

ஒன்றுமிலா மௌனமணிவா சகசுருதி மூதனூல்சொ லொருவந் கம்ம
நன்றுருவா கியதானே நல்கியுமாங் கவன்பாக நல்கப் பெற்றாங்
கொன்றிருநா ழியநெற்கொண் டுலகமெலாம் வளர்த்தருங்கற் புரிமைகாட்டி
நன்றருளும் பெருந்தோட்டத் ததுலகுசாம் பிகையாகமெமக்கு வாழ்வாம். (௫)

## நடேசர்.

பரவுநடம் பகர்பொதுநூற் பாதமுமாபதியேமெய்ப் பதியென்றம்ம, விரவுநம
முத்திரையால் விளம்பிநம சேடியனென் மெய்ந்நூல் வாய்மை, யுரைவிளக்க
வதற்கிலக்கா மொருவனுயிர்க் கைந்தொழில்செய் துய்விப்பான்பொன்,வரை
புரைமன்றகத்தசையாதருணடஞ்செய் குஞ்சிதத்தாள் வழுத்திவாழ்வாம்.(எ)

## சிவகாமி யம்மையார். (வேறு.)

துடியினி லமைப்பி லங்கிச் சுடரிலூன் றியவெ டுத்த
வடியினி லெழுத்தைந் தாக வைந்தெழுத் திலங்கச் செய்யுங்
கொடியினி லேறு யர்த்தோன் கூத்துக்கண் டுயிர்நோய் நீங்க
மடியினிற் சேயிேனோம்பு மன்னைதாள் சென்னி வைப்பாம் (அ)

## சோமாஸ்கந்தர். (வேறு.)

அத்தனருட் சிவனேசத் தவனிடப்பா லுமாம்பிகையே
சித்திவர்யோ கத்தின்பே திகழ்கந்த னெனுமுண்மை
சத்துசித்தா னந்தபதந் தனிேனோர்த னோர்விளக்கு
மெய்த்தருசோ மாக்கந்தர் விரைமலர்ச்சே வடிபணிவாம். (கூ)

## தக்ஷிணாமூர்த்தி. (வேறு.)

கைவிரனுன் கொருசேரப் பெருவிரல்வே றுயுயிர்தன் கழல்சே ராத
வெவ்வியமும் மலச்சார்பு விளக்கவவை விலக்கிவணங் கென்னு மெய்ந்நூற்
செவ்விதெரித் திருவிரன்முன் பின்வளைத்து முத்திநிலை தேற்றி யாளுந்
திவ்வியசின் முத்திரைப்பூஞ் செங்கரத்தான்பங்கயத்தாள்சென்னிசேர்ப்பாம்

## வாதாடு விநாயகர். (வேறு.)

மாதானத் தமரர் வேந்து மாதான வெள்ளி பத்தை
நீதாவிங் கடிய னேற்கு நீதாவென் றிரந்து வேண்ட
வாதாடி யருள்பு ரிந்த வாதாடு விநாய கன்பொற்
பாதார விந்த மேதப் பாதார வுளங்கொண் டுய்வாம். (கக)

## முருகக்கடவுள். (வேறு.)

அமர நாயக நலனுமி லேனையும் மடிமைத்
தமர னுயக னிரங்கியாட் கொண்டநந் தலைவன்
சமர னுயகன் மனத்தவன் சூர்முத றடிந்த
குமர நாயகன் சேவடித் துணைமலர் குறிப்பாம். (கஉ)

## திருநந்திதேவர். (வேறு.)

முன்னவ னுணை சென்னியிற் கொண்டு முன்புகப் பெருப்புறத் தவருட்
டுன்னுருக் காப்புஞ் சிவாகமத் தெளிவாந் தூச்சிவ ஞானபோ தகனு
லின்னுப தேச முளங்கொடெம் மவர்கட் கிசைத்துயர் சைவத்துட் புகுத்து
மன்னகக் காப்பும் வகித்தரு ணந்தி மலர்க்கழன் மலக்கழ லாமே. (கங)

## துர்க்காதேவி. (வேறு.)

உமைத னாருட் சத்தியே வடிவுகொண் டுலகத்
தமர ராகியர்க் கிடர்புரி மகிடனை யட்டாங்

திமிர்சி ரத்தடி யூன்றினின் றன்புமிக் கிறைஞ்சு
நமர்க ளுய்யநற் பயன்றரு கன்னிதா ணமப்பாம். (௧௭)

வயிரவர்.

அயன கந்தவிர்த் தருளுற வுகிரினு லவன்றன்
வியன கந்தனைக் கிள்ளியக் கபாலத்தின் மிசைவெண்
பய † ன கந்தனிப் பள்ளிமால் சோணிதப் பயிக்கம்
பெயன கந்தணம் வயிரவற் பணிகுதும் பேணி. (௧௮)

இலக்குமி சரஸ்வதி ஞானசக்தி. (வேறு.)

திருவரு ளுருக்கொண் டுலகுயிர்யாவுந் திருவுயிர்த் தருளுமா தேவி
பொருளுமெய்ப் பொருளு ஞானமுந் தருமப் புனிதமுந் நயனநோக் கெய்தி
வருபெருஞ் செல்வி வாணிமெய்ஞ் ஞான மாதெனு மூவர்பொன் மலர்த்தா
ளொருமையினிருமைமும்மையினிறைஞ்சியுறத்துதித்துன்னிவாழ்வுறுவாம்

ஆளுடைய பிள்ளையார். (வேறு.)

தன்னைச் சேர்ந்த தாத்தாலோர் தைய லுருவென் படலையதா
முன்னைச் சேர்ந்த மால்வெள்க முதல்வன் கபாலீ சன்கோயி
றன்னைச் சேர்ந்த நாட்குடத்திற் சாரென் படலை பெண்மணியாய்
முன்னைச் சேர்ந்துய் வுறவளித்தோன் முளரித் துணையெம் முடிக்கணியாம்

ஆளுடையவரசு.

கல்லை வகித்தி யெனவருணன் கழல்பூ சித்து வரங்கிடந்தாங்
கொல்லை யடுக்கி நெறியாக்கி யுததி கடந்த மால்வெள்கக்
கல்லை மிதக்க முயலாது கடந்தேழ் பிறவிக் கடல்கடப்பித்
தொல்லை யடிக்கீ ழெமைப்புகுத்து மொருவன் கமல முளக்கமலம்

ஆளுடையநம்பி.

எந்தை யருளா லாழியிற்கா லீர்த்த காரங்கொன் றிரந்தழைத்த
தந்த வேழ மோம்பியமால் சமழ்ப்ப வாவி நீர்முதலை
வந்து தோன்ற விழுங்கியசேய் வளர்ந்து தோன்ற வழுதொழுகு
கந்த மலர்வாய் மலர்ந்தருணங் கண்ணின் மணியை யுண்ணினைவாம். (௨௧)

ஆளுடைய வடிகள்.

வேத சிரசிற் சுத்தாத்து விதா சாங்கத் தமூர்சைவ
போதம் விலக்கிப் புத்தநெறிப் புகுத்து சிவத்து ரோகங் கொண
டேத முறுமா லுட்கவலை திரித்துச் சைவ நெறிபரப்பி
வேத மொழிமூ கந்தாச்செய் விமலன் கமலத் துணைவிழைவாம். (௨௦)

திருத்தொண்டத் தொகையடியார். (வேறு.)

நவந்தரு பேத மாகி நடித்தரு ளுத னெங்கள்
சிவன்றனி வருக்கத் தாரித் திருத்தொண்ட ரென்னும் வாய்மை
யிவர்ந்தவே ழொன்பா னெண்ணெண் பானெனு மெண்ணுங் காட்ட
நிவந்தசீர்த் தொண்டர் பாத நெஞ்சினு ளிருத்தி வாழ்வாம். (௨௧)

† நகம்- குறுக்கல் விகாரம்.

### சேக்கிழார்.

சீரண பாயன் கேள்வி மூன்றிற்குஞ் சிறபி ராயத்
தோரனு யாசத் தோதி யிறைமகிழ்ந் தேற்பச் சென்றக்
காரணை யானை யுய்வித் தாட்கொளுங் கருணை ஞான
வீரனைக் குன்றைச் சைவ வேந்தனைச் சேர்ந்து வாழ்வாம். (உஉ)

### மெய்கண்டசிவாசாரியர். (வேறு.)

அருளே மறையே புரிந்தாவி யளிக்குங் குகனே யம்மறைநீத்
தருளே புரிவான் காழியில்வந் தருள்கா லமணர் தம்வாயா
லருளே தின்றி யழிந்தமையி னதுவுமிலதா வெண்ணெயில்வந்
தருளே புரியு மெய்கண்டா னமலக் கமலத் தாளடைவாம். (உ௩)

### அருணந்திசிவாசாரியர்.

சகலா கமபண் டிதரெனுங்கா ரணப்பேர் தாங்கித் தமையடைந்தாங்
ககலா வாறெண் மர்க்கதிப ராயு மடுத்தா ணவம்வினவிப்
புகலா மெய்கண் டான்பதமே பூண்ட தலைமை யருணந்தி
நிகமா கமசி வாசிரியர் நிழல்வண் கழல்க ணினைந் துய்வாம். (உ௪)

### மறைஞானசம்பந்தசிவாசாரியர்.

அத்த னருளா லருணந்தி யடிக ளடைந்தாங் குமாபதிக்குச்
செத்த கட்டை யூர்ந்துபகற் குருடு செல்கின் றதுவெனத்தேற்
றொத்த வுரையே திருமந்தி ரோப தேச மாகவருள்
சத்த னமலன் மறைஞான சம்பந் தாசான் றுடொழுவாம். (உ௫)

### உமாபதிசிவாசாரியர்.

நிலவு திருக்கை யொழுகமுத நிகம ஞான சம்பந்தன்
குலவ வருள வுட்கொண்டு கொற்றன் குடிவீற் றிருந்தருளம்
பலவன் பணிவு காட்டியருள் பாக்கொண் டனைய சாம்பானுக்
குலவின் முத்தி யளித்தவுமா பதிபொற் றுணம் முளத்தமைப்பாம். (உ௬)

### பட்டினத்தடிகள் அரதத்தாசாரியர். (றுவ.)

பல்லுயிர் களுக்குந் தந்தையாய் மகவாப் பவித்திடாப் பான்ம கவாகி
யல்லொழித்தெண்ணீ ராண்டமர்ந்தருள்வானருந்தவம்புரிந்தவெண்காடர்
கல்லுரு நந்தி புல்லுண வூட்டிக் கவின்சிவ நாமத்தின் பெருமை
தொல்லுல கெல்லாம் விளக்கரதத்தர் தூயசே வடித்துணை தொழுவாம்.

### செந்தமிழ்ப்பரமாசாரியர். (வேறு.)

தமிழே யாண்டு முயிர்க்கிதமன் றுருவதலது கற்கசத்தா
லமிழ்தே வரினும் பின்முனித மன்றால் யாரும் யாவும் விழை
தமிழே யாண்டும் பரவுகெனத் தந்தாங் கனைய வியலெனுமா
ரமிழ்தே யருளு மகத்தியப்பே ராசா னடிகண் முடிக்கணிவாம் (உ௮)

### திருவணக்கம். (வேறு.)

பலபலமுறையினுணர்த்தினுமுணராப்பான்மையேன்றனையுமாட்கொண்டு
வலிதினா லுணர்த்த வன்றொண்ட மணியை வாதமெய் யப்பமா மணியை
மலமுழு தொழித்தா ளாறுமா முகநா வலகுரு சிகாமணி யென்றே
யுலகெலாம்பரவுமொருகுருமணியையுளத்தினுஞ்சிரத்தும்வைத்துவப்பாம்.

கடவுள் வணக்க முற்றிற்று.

---

## பாயிரம்.

சிவனருள் வாக்கி னூற்றெழுந் துயர்நந் தித்தடத் திற்சனற் குமாரத்
திவள்பெருங் காலிற் செல்லுபு வியாசத் திண்மத கிற்புகூச் சூதத்
தவன்மடை நெறியா லுயிர்ப்பயிர் ஞானத் தண்பலம் பல்குற வளமா
மவிர்தரு நிலம்புக் குலகெலாம் புரக்கு மணியநீர்ப் புராணமு வாறே. (க)

பானுலகவர்க்குப்பொதுவெனமுதலிற்பகர்ந்தநான்மறைப்பொருள்பலவாய்
விரிபுகற் கசகூத் திரவடி வாகி விரவலி னுண்மையோர் வரிதல், வருமறை
வாய்மை துணிந்துல குய்வா னதற்குப் பிருங்கண மாய்நின், றொருவின்
மெய் விளக்க லாற்சிறப் புடைமை யொளிருமிப் புராணங்கட் குரைப்ப(உ)

வேறு.

அனைய வொன்பதிற் றிரட்டியாம் புராணத்து ளரிசீ
ரினிது ரைப்பது நான்கயன் சீர்சொலு மிரண்டே
வனியின் மாக்கதை யொன்றுவிண் மணியின் மாண் பொன்றே
புனித நீள்சிவ புராணமீ ரைந்தெனப் புகல்ப. (ங)

இன்ன வைந்திரு புராணத்து ளிலக்கமாங் கிரந்த
மன்னி யாவரு மதிப்பருங் காந்தமா புராணந்
தன்னின் மூவிரு சங்கிதை தமின்முதற் றகைத்தாய்ச்
சொன்ன தங்கரன் சங்கர தூங்கசங் கிதையே. (ச)

இத்த குஞ்சிவ சங்கர சங்கிதை யிடத்தே
மைத்த கண்டனெம் பசுபதி மறைபுகல் கண்டன்
சித்த கண்டனெம் மானயி ராவதே சன்சீர்
மெய்த்த கண்டன் வாழ் பிரகதுத் தியான மான்மியமே. (ரு)

இனிதி லங்குமச் சிவபரன் மான்மிய மிம்பர்
மனி விளங்கிட வடமொழிக் கடலினும் வாங்கிக்
கனிசி றந்ததேன் கண்டுபாற் சுவையினுங் கவிஞர்
நனியு கந்தசெந் தமிழினிற் றருகென நவின்றான். (சு)

இத்த லந்திலோர் குரிசில்யா ரெனிற்சிவ னன்பே
சித்த மிக்குளா னோர்வளந் தோக்குளா னிலேயுஞ்
சித்த நெக்குளான் வாசமெண் டிக்குளா னிதழிக்
கொத்த லர்ச்சடை யினிற்றிகழ் கங்கையின் குலத்தான் (எ)

திங்கள் வேணியன் சிவார்ச்சனை நியதியிற் சிறந்தோ
னெங்கி யற்றமிழ் நூல்பல தெளிதர வுணர்ந்தோன்
றங்கள் வங்கிய வழிக்கிலை சைவசித் தாந்தி
துங்க மார்துரைச் சாமியென் றுரைபெயர்த் தோன்றல். (அ)

அவனு ரைப்படி மறுதுசெய் வழியலே தமலன்
சிவனு தற்கணுன் வாய்மைமான் மியஞ்சொலுந் திறத்தாற்
றவமி குத்தழுக் ககற்றுபு தூய்மையே தந்து
பவமி ரித்தருண் மெனமனம் பற்றினே னெனினும். (௯)

அவையடக்கம்.

அவையடக்க மாமரபென் றதுபுரிந்த வான்றோர்த மாணை பேணி
யவையடக்கம் பின்னுரைத்தா ரதன்மகிமை யறிந்துடன்சா ரறிஞர் பல்லோ
ரவையடற்சீ ரறியேனு லாற்றுதற்கோ ரறிவுமிலே னாத லாலே
யவையடக்கம் புகன்றிடுகோவதுவிடுகோ வுளந்துணியா தஞ்சி னேனே (௰)

ஆயினுமோர் படிதுணிந்தே னணிமணிவா சகப்பெருமா னண்ணு லென்னைக்
கூயருளா விடினுமொறுத் தாலொன்றும் போதுமெனக் கூறி யாங்குத்
தூயறிஞ ரின்னூலிற் சொற்றொடையா தியிற்பழுது சொற்றா ரேனுந்
தீயண நீத்தெனைத்திருத்தித் திருவருட்கே சேர்ப்பரெனுந் திடத்தி னாலே.

அன்றிடையாரிகழ்ந்தாலென்புகழ்ந்தாலென்னடியேற்கொன்றுவதின்று,
மின்றுடையான்றிருவருளேவாய்ப்புடையார் காப்புடையார் மலர்ப்பாதங்கள்,
சென்றுடையீரருள்கவெனத்தெளிந்திரத்தலென்னியல்பாற்சிவஞானச்சீர்த்
தொன்றுடையார்யாவருக்குந் தூவணக்கஞ்செய்தனன்மேற்றொடங்கினே
னே.

தொடங்கியவிந் நூற்பெயரா துலகுசாம் பிகைபாக சுந்த ரேச
னிடங்கொடுவீற் றிருந்தருளும் பெருந்தோட்டத் தத்தீச புராணமென்க
தடங்கொளிதன் றொகை கடவு டம்வாழ்த்துப் பாயிரமே சாற்றுநாடு
திடங்கொடிரு நகர்ச்சீர்நை மிசச்சிறப்புத் திருத்தலமே தீர்த்தமூர்த்தி. (௰௨)

இந்திரசுந் தரசருக்க மிலங்கயிரா வதசருக்க மியோகநாதன்
வந்தனைசெய் மாண்புகலா வதிசருக்கந் திருநீற்று மாண்ச ருக்கந்
தந்திரமோர் மூககவி சருக்கம்வா ரணேசசரு க்கந்தா னென்க
விந்திதழி முடியருளி னிருநான்கேழ் வகையாகி யிலங்குமன்றே. (௰௪)

இன்னவகை பதினைந்து மின்றமிழின் விருத்தப்பா வெழுநூற் றின்மேற்
றுன்னியதொண் ணூற்றொன்றாய்த் துலங்கியசொற் றேன்ஞான சுகுணசீலர்
மன்னருளொப் பிலாமுலைபான் மருவிவீற் றிருந்தருளும் வள்ளன் மாண்பே
நன்னருளத் துறநோக்கி நகைச்சுவைமிக் குறுவரொறு நயப்பான் மாதோ.

## தற்சிறப்புப் பாயிரம். (வேறு.)

ஆய முதல்வன் பெருந்தோட்டத் தத்தீச் சுரமான் மியமுலகம்
பாய வன்பிற் கொண்டுவப்பான் பரிவிற் புரிந்தான் றேலைநகர்
மேய புனித வன்றொண்ட விமல குரவன் மாணாக்கன்
றூய காரை நகர்வாழுஞ் சொக்க லிங்க தேசிகனே. (கக)

பாயிரம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் (சரு)

---

# திருநாட்டுச் சருக்கம்.

## பொது வளம்.

மணிகொண்ட திருமார்பன் முதலாய வமரரெலாம் வந்து வந்தெம்
பணிகொண்டிங் கருளுகெனப் பரவுதிருக் கோயின் முதற் பதிகளோங்குந்
திணிகொண்ட பூவுலகிற் றிருவளங்க ளெவற்றானுஞ் சிறந்த தென்றே
துணிகொண்டு புலவரெலாந் துதிவாய்மை நேர்காட்டுஞ் சோழ நாடு. (க)

உம்பரார்க் கும்மருஞ்சொ லுலகெலாஅம் பெற்றுலகெ லாமுய் காதை,
யன்பினு லருள்சேக்கி ழாரமைச்சாய்ப் போற்றுறுமான் பார்ந்த தொன்றோ
நம்பிரா னயந்தாண்ட நம்பிபெரு நம்பியென நமக்கு நன்மை [சோணாடு.
யெம்பிரான் குலச்சிறைமுன் னியற்றமைச்சின் மாண்புமுடைத் தெழிற்

வேறு.

தாருக வனத்தின் முன்னாட் டனிப்பெருங் கூத்தி யற்றம்
போருக குஞ்சி தத்தாட் புனிதனுந் தன்பால் வந்து
பேருகங் களினு மாறாப் பெற்றியி னின்றெஞ் ஞான்றுஞ்
சீருகந் தின்புற் றாடச் செய்வதித் தெய்வ நாடு. (௩)

வேறு.

பூமியிற் புனித பூமிமே லதன்மேற் புண்ணியந் தைவிக மதன்மேற்
றேமலி யதன்மேல் விண்டுகேத் திரநந் திருப்பதி சைவகேத் திரமே
லாமவற் றதிகந் தமிழ்மறைத் தலமென் றறைவரத் திராவிட சுருதிப்
பாமரு தலங்கண் மற்றவற் றதிகப் பண்பதிச் செம்பியர் நாடு. (௪)

வேறு.

சேர சோழ பாண்டிநடு தொண்டை துளுவங் கொங்குதீசி
யீழநா டொன் பானிடத்து மிருநூற் றெழுபா னன்காகும்
வாழி மூவர் தமிழ்ச்சுருதி மன்னு தலங்கண் மற்றவற்றுட்
சூழ விளங்கு மொருநூற்றுத் தொண்ணூ றுடைத்தோர் சோணாடு. (௫)

முன்னம் பலவர் திருவருளின் முறையான் மறைசீர்ப் பதிகமெலாம்
பன்னுந் தலம்பல் லாயிரமேற் பல்கு மளவோ கோவையுறத்
துன்னும் பதிகத் தலமத்தீச் சுரஞ்சார் பெருந்தோட் டம்முதலா
மன்னுந் தலமு மளப்பின்றி வயங்குஞ் சீர்த்திவ் வளநாடு. (சு)

வேறு.

திருமுறை கண்ட சோழர் திருமகற் றேர்க்கா லூர்ந்த
வருமுறை நீதிச் சோழ ரனபாய ராதிச் சோழர்
பெருமுறைத் தெய்வச் செங்கோல் பிஞ்ஞக னருள்வி ளக்கந்
தருமுறைச் சைவ மோங்கத் தழைப்பதிச் சென்னி நாடு. (எ)

தமிழ்மறை தந்த செல்வர் தாம்பல நாடுஞ் சார்ந்தத்
தமிழ்மறை தந்தா ரேனுந் தன்னிடை முழுதும் வைத்தே
தமிழ்மகி ழிறைகை யொப்பஞ் சார்தர வெளியிட் டெல்லாத்
தமிழ்மறைத் தலமுஞ் சீர்ப்பத் தந்ததிவ் வந்தண் ணாடு. (அ)

பொன்னிமா நதியின் சார்பாற் பொன்னிநா டென்ப தொன்றோ
பொன்னெலாம் புவன மெல்லாம் பொருவறப் பொலித லானும்
பொன்னிநா டரிநி றத்தும் பூவினும் விழைந்தெஞ் ஞான்றும்
பொன்னிவா சத்தி னானும் பொன்னிநா டின்ன நாடு. (கூ)

இப்புவி நாட்டிற் கெல்லா மிடையமர்ந் துயிரீ தென்னு
மப்பரி சறலோர்ந் தந்நா டனைத்துந்தன் சென்னி மேற்கொ
டிப்பிய மகிமை வாய்ந்த திண்மையாற் சென்னி நாடென்
றெப்புவ னங்க ளும்போற் றிருஞ்சிறப் புடைத்திந் நாடு (கo)

எத்திசை நோக்கி னுங்கட் கிதமுஞ்செய் பைங்கூ ழீட்ட
நித்திய நதிக ளோட்ட நிறைமலர்ப் பொழில்க ளீட்டஞ்
சத்தியப் பொருட்டே வாரஞ் சாற்றுநந் தேவ கோட்ட
மெத்திய பொலிவு காட்ட விளங்குமிவ் வளங்கொ ணாடு. (கக)

தேட்டமன் சீவா தாரஞ் சீவன மதனா லேனை
நாட்டக நாணச் சீவ நதிகள்பற் பலவெஞ் ஞான்று
மோட்டமன் னுயிர்நி லைப்பண் புற்றிடு குறிகொ லென்ன
வீட்டமன் னீர்நா டென்பே ரெங்கணுந் திகழ்மிந் நாடு. (கஉ)

எங்கணுங் கழனி மல்கு மெங்கணுந் துழனி பல்கு
மெங்கணு நெற்போர் நல்கு மெங்கணும் பொற்பே புல்கு
மெங்கணும் பாவ னங்க ளெங்கணும் பாவ னங்க
ளெங்கணும் பாவ னங்க ளெங்கணும் பாவ னங்கள். (கங)

எங்கணு மருவி யோடு மெங்கணு மருவி நீடு
மெங்கணும் பண்ணை சாலை யெங்கணு மன்ன சாலை
யெங்கணு முழவ ரங்க மெங்கணு முழவ ரங்க
மெங்கணு மான்மீகோட் டங்க ளெங்கணு மான்கோட் டங்கள். (௧௪)

மலைவளம் பரவு முல்லை மலிவளம் விரவும் பண்ணைத்
தலைவளம் பொலியு நெய்தற் றருவள மலியு மோதுங்
கலைவள முழங்குஞ் சைவக் கவின்வளந் தழங்கு ஞான
நிலைவளம் பேரின் பூட்டு நிறைவள நீர்நா டெங்கும். (௧௫)

போற்றுமிப் பெருஞ்சீர் நாட்டுப் பொதுவளம் விரித்துக் கூறு
மாற்றலின் றெனக்கிங் கென்பா லறைகமற் றதற்கு நாணே
னேற்றுமுற் றிசைக்கப் பெற்ற வெத்தகை யோர்க்கு முற்ற
மேற்றுணை மழைச்சீ ராந்தி தெரிந்தவா றிளம்ப லுற்றேன். (௧௬)

## மழைவளம்.

வானிறச் சத்து வான்மா மாறுற வானி மேலி
நீனிற வுவரி யுண்டு நிலையுயிர் தமச மெத்தாற்
போனிற மாகி றத்தாய்ப் போந்திரா சதஞ்சார்ந் தாங்குத்
தானிறஞ் சேந்த சம்பை சார்ந்துவிண் படர்ந்த கொண்டல். (௧௭)

படர்முகி னிலையிற் செல்வப் பற்றின சகத்தை கூறு
மடமிகு குணத்தி னொந்து மாண்பினர் முன்பெற் றையத்
துவரை சார்ந்தன் மேறயு தகவகழுன் றனைமந்து பண்ணைத்
திநாடர்மலங் கழன்று தூய்மை துன்னுயி ரென்ன மன்னும். (௧௮)

மலைச்சிரஞ் சார்ந்த மேக மலினமற் றொளிர்த லன்பர்
மலைக தனைக் குருவான் முன்னை மாசுநீங் கொளிர்தன் மானு
மலைக்கொங்கானி றேற்றும் வெற்பிற் களித்துத் தாங் குருச்சிப் போர்க
ளலைக்கொடற் போத முற்று மாற்றினி தளித்தன் மானும். (௧௯)

சென்னிமிர் சைய வெற்பிற் செல்லுங்கா லிறுமாந் தெய்தி
யன்னதை யடுத்துப் பெய்தாங் கமைந்து வீழ்ந் திலகு தோற்ற
மின்னருண் மெய்கண் டான்பா லெய்தரு ணூர்கி யானை
வந்நிலை விழைய டிக்கீழ் வணங்கிய நிலைமை காட்டும். (௨௦)

மேகத்தின் றாநீர் சைய மேவிப்பல் லருவி யாறென்
றாகித்தொல் லுலகம் போற்ற வாங்குற லருமறைக்கு
மேகத்தன் றன்பாற் சத்தி யியைபிற்பல் லுருவா யாவி
சோகத்தை நீங்கி யுய்யான் றோன்றுதல் போலு மன்றே. (௨௧)

## வேறு.

சைய கிரியின் றெழுகருவி தளவத் தொடைய ணிரைபுரையு
முய்ய வியலா துடனெழுகே ணங்க ளொலிவண் டினமுறழும்
பைய மயில்க ளமர்வேய்கை பரவிந் திரபூ சகன்றுணையுஞ்
செய்ய வத்திச் சரலிங்கஞ் சிவனு மனைய திருமலையே. (௨௨)

## வேறு.

கொங்கைநின் றிழிபால் கண்டு தெவிட்டுறக் குடிப்பா ரூர்வ
மங்கண்மிக் கோடிச் செல்சே யாமென வாங்காங் குள்ளார்
தங்களுண் மகிழ்ந்து சென்று சையவெற் புச்சி நின்று
மிங்குல குய்யப் போது நீத்தங்கண் டின்பு கூர்வார். (உங)

இராவணன் கயிலை மாண்போர்ந் திற்கொணர்ந் துய்ப்பான் சென்றான்
பராவுமிந் நாட்டார் சையம் பல்வடஞ் சேர்த்தொன் றாக்கி
விராவியீர்க் கின்றா றென்ன மேற்பல வருவி யொன்றித்
தராதலத் தேகு பொன்னித் தண்கரைச் செறிவர் பல்லோர். (உச)

சிவனிடத் தகில மீன்ற சிவையுறு மியலா லாவி
யெவைகளு முய்வான் போது மின்னருள் வெள்ள மென்னச்
சிவனுறு சைய வெற்பிற் செல்லுறு செயலா லாவி
யெவைகளு முய்வான் போது மினியகா விரியி னீத்தம். (உரு)

வாலநத் தூர்சி றப்பால் மறைமல ரயனை மானும்
பாலனத் தபிவி ருத்தி பயிற்றலான் முகுந்த னேருங்
காலனத் துறச்சென் மாண்பாற் கண்ணுதல் விழையுந் தென்சொற்
சீலநற் றவங்க மண்ட லோதகந் தேக்கு பொன்னி. (உசு)

## வேறு.

அயனகரமர்ந்தோரரசுவேண்டுறச்சென்றவிர்சடைத்துஞ்சியோர்முனிவாய்த்
துயருறப் புகுந்து மிச்சிலாய்க் காதிற் றோன்றியென் படலைசேர் கங்கை
மயலுறச் சிவன்பால் வைகியோர் முனிக மண்டலத் துற்றொரு கோட்டுக்
கயமுவந் தெழுக்க நந்தனம் புகுந்த கவின்மிகு சிறப்பதுப் பொன்னி. (உஎ)

இயல்பினிற்பளிங்கொத்துறுமலைத்தேனையெழின்முலைப்பாறயிர்நெய்யை
வயலினிற் கருப்பஞ் சாற்றினை யீர்த்தவ் வண்ணமா யேழெனக் கடல்சார்ந்
தயர்வகன் றதுவா யகமகிழ் பொன்னி யைம்மலஞ் சார்ந்தவை யாய்ப்பின்
னுயவருள் சிவன்றா ளுறீஇச்சிவ மயமா யுடங்குவாழ் புற்கல.ரொக்கும் (உஅ)

## குறிஞ்சி.

குன்றுறழ் புயமேல் வள்ளிமென் கொடிமுன் குலவிய தருநலங் குறித்தோ
குன்றுறழ்நாற்கோட்டிபந்தனதிடப்பூங்கொடியினைவளர்த்தமைகுறித்தோ
குன்றுவந் தன்னை வந்ததுந் தந்தை குன்றவிற் கொண்டதுங் குறித்தோ
குன்றுதோ றாடுங் குமரனக் குறவர் குலந்தொழ வமர்வது குறிஞ்சி. (உகூ)

உயர்பொரு ளெனமே வாதிற வுள்ளோ ளொளிமணி யாகிக ளொ
யுயர்வெனத்தினைமுன்விதைத்துறுபயன்கொண்டுதுபெரிதெனநுகர்ந்துவ
ருயர்மறைமுடிமேலரசுவீற்றிருந்தாங்கொளிர்சைவமேற்கொளுழின்றி[ப்பா
யுயர்வெனக் கொடுதத் தம்மத மேற்சென் றுண்மைநோக் குரனிலார் போல

காளத்தி யனுக விருண்மல வலியைக் கடிந்தெனத் தடிந்தெறு ழியைமுன்
வாளிற்கண் ணப்பர் வதக்கித்தற் போதம் வழங்குதல் விளங்குற வவ்வூ
ஞாத்தற் களித்தாங் கிறவுளர் வேட்டத் தாதியிற் பட்டவே னத்து
ஞாத்தண்மலர்ச்சேவடிக்குகன்றிருமுனலம்பெறப்படைத்தனர்நம்பார்.

குன்றவர் மகளி ருடுப்பன குழைகள் குலவுகா தடுப்பன குழைகள்
வென்றிகொள் விழிகண் டிரிவவு முழைகள் வியாக்கிர மடுப்பவு முழைக
ளொன்றொளிர் தரள முகுப்பன கழைக ணங்கையர் மொழிகளுங் கழைக
ளொன்றுபல் லருவி தருவன மழைக ளும்பரின் றிழிவன மழைகள். (௬௨)

இறவுள ருழையி னுழையுரி நாக மேழைய ரல்குல்பைந் நாகம்
பொறைதரு மொண்பூண் முலையிணை நாகம் புயலெதி ரொலிப்பது நாகஞ்
சிறுமிய ருதைப்ப மலர்வது மசோகஞ் செயல்வகை யெவைகளு மசோகம்
விறன்மயி லூர்தி விழாக்கொளு ளர் விசாக மிசையவை வனத்தவி சாகம் †

அழகிய திருச்சிற் றம்பல முடையா ரென்றருட் கையெழுத்த மைத்தாங்
கெழுதிய சுருதி யருளிய மணிவா கீசர்வா கீசர்சுந் தரர்நங்
கழுமல மணிமுற் பெரியர்தஞ் சுருதிக் கண்ணெடுத் தேத்துகண் ணப்ப
முழுமணி தருமிவ்வனசர குலச்சீர்மொழியின் முற்று றுங்கொல்பல் லுகங்கள்.

தங்குலமுதலென்றெருங்குபோரார்வந்தழைத்தெழக்கண்ணப்பரிணைத்தாட்
பங்கயம் பரம்ப ரைப்பணி புளிந்தர் பரவுமக் குறிஞ்சியீங் கொயுத், தங்க
வெற்பெறும்பீச் சுரஞ்சிரா மலையே தூயவாட் போக்கிரத் தின்முன், னெங்
கணு யகன்வாழ் மலைத்தலம்பலகொண் டிலங்கு மலிசைப்பதங்கி தன்சீர்.

முல்லை.

அண்டர்தம்பொருட்டேபாற்கடல்கடைந்தாங்காலத்தாலாலமிட்டலைந்தவ்
வண்டரோ டமல னருளிறு லமுத மளித்தன மவர்க்கவணா றன்றிவ்
வண்டர்தம் பெண்டிர் பாற்குடங் கடைந்தா ரமுதெமக் களிப்பரா தலினிவ்
வண்டர்வாழ்நிலமேற் றம்புத லகடனெமக்கென் றுழிமாலளிப்பதுமுல்லை. (௬௬)

பன்னெறிகளையுந் தழுவும்பொதுச்சைவபசுபதியண்டன்பொற்பொதுவன்
றுன்னுயி ருடனு யியக்குபு கருமந் துய்ப்பித்தாங் கிதம்புரி தொழில்போ
லின்னிலத்தண்டர்பொதுவர்பல்லான்மேய்த்தியக்கலாற்பசுபதிப்பெயர்பெற்
றங்கிரைமேய்த மிடந்தொறு முடன்சென்றவை புசிப்பித்திதம்புரிவார். (௬௭)

குடத்தியர் கொங்கைக் குடத்தியர் துத்தக் குடத்தியர்கடத்தியற் குடத்தன்
குடத்தியல்பான்முன்னெடுத்தியல்கரந்துகுடித்தனனடித்தனர்முன்னோர்
குடத்தியல்பான்முற்குடத்தமனோர்நாமகொடுத்தருள்பெறுதுமென்றுங்குக்
குடத்தியல்பான்முற்கொண்டுயர்பூவைகுலவுறுமெறியினருவரால். (௬௮)

கிடத்துறு விறகிற் றீயெனப் பாலிற் றிகழ்தரா நெய்யென மறைந்தெவ்
விடத்தினு நிறைந்த சிவனைநாங் காணே திதுவென வாசுசொல் சுருதித்
தடப்பொரு ணோர்காட் டுநெரெனப் பொதுவர் தாரணியைக்கடைந் தும்பால்
குடத்தியர் கடைந்து மாயராய்ச் சியரென் குறிப்பொரு ணளிவிளக்குவரால்.

பூவைதன் னடிமே லரவினஞ் சூழப் புடையிருல் வெண்மதி பொருந்த
வாவினம் பொழிபா னிலனெலாம் பரவ வாயிடை நிற்றலவ் வாழி
தூவளை பரித்த கரன்பயோ ததிமேற் றுலங்கர வணையுற றுணையு
மோவற வங்கண் மேவுபல் லண்ட ருவன்பரி சனங்களை யுறழ்வார். (௭௦)

† ஐவனத்து அவி—மலைநெற் சோறு. சாகம்—காய்வகை.

பூவையர்மலர்ப்பூங்குழல்கள்பைம்பூவைபுகன்றிடுமொழிகண்மென்பூவை
தாவற நாளும் வளர்ப்பர் நம்பாவைச் சாற்றரும் வடிவு செம் பாவை
கோவமென் றுயிர்க்கு மதரவாய் கோவை கூடியின் புறுவர்தங் கோவை
மூவரி னிடைய ஞயதங் தேவை முன்னிவாழ் வுறலவர் தேவை. (௪௧)

சைவமந்திரமென் றுலகெலாமுணர்ந் துதலைமிசைக்கொண்டுவந்திறைஞ்சுந்
தெய்வமந் திரமூ வாயிர முலகர் திருந்திய மொழிந்தருண் மூல
ரெய்வமந் திரங்கட் குள்ளுயி ராமைந் தெழுத்திசை பரப்பிவெள் ளொளியே
செய்வமந் திரனை § யழைத்தவா ளுயர் திருக்குலத் தவரிவ ரம்ம. (௪௨)

உலகெலா முயத்தென் மறையமு தூட்டி யோம்புவா ரிசை மாதாவுக்
கலகிலாப் பொதிசோ றளித்தபைஞ் ஞீலி யாங்கிடர் களைகென வுமைபொன்
முலைநிலா வமுதுண் டருண் மணி பதிக முழுதரு ளெண்டுங்கள முதலா
நலனுலாந் தலம்பற் பலதனில் வாய்ப்ப நற்றவம் புரிந்தது முல்லை. (௪௩)

மருதம்.

இந்நிலத் துதித்த தெங்குபூ காதி யாவுமொண் சாலிவண் பயிரு
மெந்நிலத் தணியாய் விழிக்கெலா மின்பா யியன்மகா திகட்குத வியுமா
நந்நிலத் தருக்க ளாலுமிந் நலங்க ணமக்கிலை யெனச்சுரா திபனிச்
செந்நிலம் வளர்க்குங் கடனெமக் கென்றே சிறப்புறப் புரப்பது மருதம் (௪௪)

வேறு.

உயிரென வெழுத்தோ ரைந்தை யுடைமையா னைசுர்வே தம்மே
யுயிரென நான்கு வேதத் துட்சிறந் தொளிரு மாபோ
லுயிருடற் குயிர்நி லைத்தா மோதன முதவு நீரா
லுயிரென நானிலத்து ளொளிர்வது மருத மொன்றே. (௪௫)

பூவணமணம்போல் யாண்டும் புணர்சிவ சத்தி யின்பாற்
பாவன வருளின் வெள்ளம் படர்ந்துறு பான்மை போல
மாவன முகில்சூழ் வெற்பின் வந்தொழு கருவிப் பொன்னிச்
சீவன வெள்ளம் பல்காற் றேக்குபு செல்லு மெங்கும். (௪௬)

தாயர்தம் முலைக்கு டத்துத் தந்நசைஇ யுண்ண வோடுஞ்
சேயர்க ளென்னப் பொன்னித் திருநதி நீத்தங் காலிற்
பாயவந் தூர்க டோறும் பல்குபல் லுழவ ரன்ன
தூயவா ரமுத மாங்குச் சூழ்வயல் வாய்மடுப்பார். (௪௭)

சைவரைக் கண்டு முட்டுச் சாற்றயான் கேட்டு முட்டேன்
றிவ்வுரை புகல்வேந் துள்ள மெனக்குழை யாவ யற்கட்
செவ்விநீர் புகலுங் காழிச்சேயருள் வெள்ளம் புக்க
வவ்வர சுளநெ கிழ்ந்தாங் கணிநிலங் குழைந்த தன்றே. (௪௮)

எத்துணை மாறு பாட்டி னிளகுருக் கொடிய வன்மைச்
சித்தரே யென்னி லும்போ தித்திடு சிவாசான் சர்வ
சத்திமா னென்னில் யாரே தப்புவா ரொப்புறும
வித்திறங் காழிவாழ்வா லிளகிய வரசாற் கண்டாம். (௪௯)

§ வெள்ளொளியே செய்வதாகிய மந்திரம்—சயிவசம்

காழிவாழ் வருட்கை நீண்டக் காவலன் குழைந்த நெஞ்சி
லாழு மவ வினைமுன் போழுற் றறிவொளி யெழத்தீர்ந் தாங்கு
மேழிகொண் டுழவர் பல்கால் வியனில முழுத சாலில்
வீழ்மணி யெழப்ப ரம்பு மீதுகைத் தொப்புச் செய்வார். (௫௰)

கவுணியர் குலதீ பம்பால் கமழ்திரு வாய்ம லர்ந்து
சிவமணி மந்தி ரச்சொற் றெளிப்பவத் தென்னர் கோமா
னவிருளத் துறீஇமு ளைத்தாங் கந்நிலத் துழவர் சொற்க
ளுவகைமிக் குறத்தெ ளிப்ப வுடன்முளைத் தெழுந்து பல்கும். (௫௧)

வழுதியர் கோனு ளஞ்சார் மந்திரச் சொன்மு ளைத்தாங்
கெழுசிவத் துமையின் பைங்கே ழிலங்குத லென்ன வித்து
முழுவர் சொன் முளைப சப்புற் றோங்கின் றுலகெ லாமுந்
தொழுசிவம் பணியா தியார்க்கு மெனுமறைத் துணிபு ணர்த்தும். (௫௨)

அகத்தொளிர் சிவம்ப ரார்த்த மாப்புறத் தினுந்தா பித்துச்
செகத்துயப் பேணுஞ் சைவா சிரியர்போ லுற்றங் காலி
னகத்துறு நாறு கைக்கொண் டப்புற நிலந்தா பித்துச்
செகத்துய வுழவர் தத்தஞ் சீவனிற் பேணல் செய்வார். (௫௩)

தெளிபரி பாகர் நெஞ்சிற் சிவமுதல் விளக்கம் வாய்ப்ப
விளை புமின் பமுதுண் டன்ன வசத்தராய் விளங்கல் போல
வளநிறை சொலவி ளம்பி மள்ளர்மங் கையர்கண் மாந்தி
யளவறு சொல்வி ளம்பி யவசரா யிவையு ரைப்பார். (௫௪)

நெருநல்யான் வருவீர் நாளை நீவங்கோ மவன்றான் சென்றா
னொருவன்வந் தார்கண் மற்றோ ருற்றன னெருது நின்றான்
வருகளை வளர்ந்தார் சாலி மள்ளர்கள் பிடுங்கிற் றென்பார்
மருவிடந் திணைபால் கால வழுக்கற்பார்க் குணர்த்து வார்போல். (௫௫)

வருகவென் பாரை யெம்மைப் போகென வழங்கிற் றென்னென்
றருகுறீஇச் சினப்பார் மேல்பா லழைத்தல்கேட் டெழிர் பிராசி
விரைபொரு சூத நேர்நீர் விளித்ததென் பழந்தா வென்பார்
பரியமாங் கனியெனு த்தென் பழமுதிர்ந் தனசு வைப்பார். (௫௬)

கோதறு வெண்க டற்கட் குடியன்காப் புறுமா லன்றான்
காதலன் பிரமன் போதின் கட்குடி யன்மற் றெங்கள்
சாதியே தால மேலாத் தலைக்கொளு நீர தாகுந்
தீதினஞ் சாதிபோணஞ் சாதியார் திறத்தின் றென்பார். (௫௭)

சிவமுத லொளிரு ளத்து வாசனு மலஞ்சேர்ந் தாலைந்
தவிரொழுத் தறைந்து சேட மறக்களைந் தப்ப யன்கொள்
பவரென விடையி டைச்சார் பல்களை கட்டுச் சாலி
யுவகையி னுயிரின் மேலு முழவரின் புறவ ளர்ப்பார். (௫௮)

தன்னருண் மந்தி ரச்சொல் சார்நெடு மாற ருள்ளத்
தின்னருட் சைவப் பைங்கூ ழெழிலுறச் சண்பை வள்ளல்
பின்னரும் பதிகத் தெண்ணீர் பெய்தலி னுழவர் சாலி
நன்னிலை யுறநீர் செவவி நாடினின் றுய்ப்பர் பின்னும். (௫௯

மேனிமிர்ந் தெழுபைஞ் சாலி வெண்கதி ரீன்று முற்றி
வானிறம் பசந்து பொனமை மரீஇப்பழுத் தவ்வி யத்த
மானின்முக் குணவி யத்த மற்றவற் றுலீசன்பா
லானம ருருத்தி ரன்மா லயன்வருந் தோற்றங் காட்டும். (௬0)

பணியுமா பணியே யென்று பகர்தரு சுருதி வாய்மைத்
துணிபுநேர் காட்டி யாங்குச் சொல்கதிர்ப் பரம்பொ ருறு
மணிநெடுந் தலைவ ணங்கி வயங்கல்கண் டுழவ ரன்ன
வணிநிலம் புரக்கும் வேந்த னருணினைந் திறைஞ்சிச் சூழ்வார். (௬௧)

கதிர்விசும் பிறைவ னேகண் காணமா கம்மே லோங்கக்
கதிரரிந் தரிகி டத்திக்கனவரை யெனவு யர்த்தி
மதியணி புனிதன் சொன்ன மலைவளைத் தாங்கந் நெற்போர்
மதியணி மலைகள் சாய்த்து மாடெலாம் விரிப்பார் மள்ளர். (௬௨)

## வேறு.

எனதுபுன்மொழியென்றிகழ்ந்திடாதுள்ளமியைத்தயிராவதநாதன், புனித
மான்மியங்கொண்டின்புறும்பெரியர்போலரிப்பரப்பிலேற்றினங்க, ளினிது
கைத்தொதுக்கிப்பலாலம்போக்கிக்காற்றினினனி தூற்றிநென்மணிகொண்
டனையமான்மியம்பகுவர்க்குஞ்சொல்லவர்போலறுவகைபாத்தளித்துவப்
[பார்

கனிகளின் மூன்றே சிறந்தன வவைமுற் கருதுபல் சிறப்புடைப்பொருள்க
ணனிமிகு வளனும் பொலியுமிப் பணையே நால்வர்சொற் பதிகங்க ணனிசா
ரனகவண் புகலி கமலைவீ ழியை யாறிடை மருதுபொற் கோயி
லினையன தலம்பற் பலவுள வம்மா விந்நிலப் பெருமையா ரிசைப்பார்.(௬௪

## நெய்தல் வேறு.

வினை நிலங்கட்க சதிபருரித் தியல்பன் றெனு மினித ளிப்பார்
யானை நிலமின் னதற்குரிமை யியல்பி னுடையே னீதல தூஉ
மேனை தனையை யீண்டுதித்தாள் விழைந்து மருகா யிஃண்ம ணந்தா
ஞனை யுடையா னெனவருண ஞர்வ மிகப்போற் றுவநெய்தல். (௬௫

புறவ முகந்து போற்றினன்கான் முளைபோற் றியமுந் நீர்த்தேவை
நறவ முகந்தன் னுறுமலர்ப்புன் னைக மூல நறுநிழலிற்
சுறவ முகந்து லங்குமருப் பூன்றித் தொழுது முன்படைத்த
நறவ முகந்துண் பரதர்பரத் தியர்க ளொரு நனிகளிப்பார். (௬௬)

கலைநீர்க் கடலு ளாழ்பொருளுட் கண்ணு ளோக்கி யெடுக்குநர்போ
லலைநீர்க் கடலு ளாழ்துவர்சங் கார மாதி குளித்தெடுப்பார்
கலைநீர்க் கடலு ளாழ்பொருளுட் கரைசீ டர்க்கு விரிக்குநர்போ
லலைநீர்க் கடலுட் பொருள்வாரிக் கரையின் விரிப்பா ரப்பரதர். (௬௭)

இனைய நிலக்கோ னிறைமகன்சோங் கிருநீ ரியக்கிச் செறருடன்போய்க்
கனைமீன் படுத்துப் பொருள்கொணர்தல் கலனூர்ந் தருள்வெண் காட்டடிக
டனைய ராய மகாலிங்கர் சாரு மகாரோ டுற்றொருமின்
முனைய வடிவைத் ததிற்பொருகண் முதிரக் கொணர்ந்த செயல்காட்டும்.

பிரிவி னிரங்கு நரைநோக்கிப் பெரிது மிரங்கு முதுகிழவன்.
முரச மாயு மவன்றுவச முழுமீன் குயால்கண் மிகக்களித்துத்
திரித லெவனு மெனவலைஞர் செருட்ப * வாரி னிலையெனப்போழ்ந்
தரிவை மாரெங் கண்ணிணைநே ரகமெங் கேகிற் றெனச்சிரிப்பார். (௬௯)

வெள்ளி மலையொன் றேவடபான் மேவுந் தென்பாற் காளத்தி
யுள்ளிட் டோங்குஞ் சிலநூல்கொண் டுணர்வ வீண்டோ வாயிரமா
வெள்ளி மலைநேர் காண்டுமென வியந்து நினைந்தில் வுலகுய்வா
னுள்ளி யோபல் லுப்போங்க லுமண் ரமைக்கு மிடம்பலவால். (௭௦)

எனைய சுவைய் பொருள்களுமீ தின்றி யமையா தெனச்சிறந்து
மனைய வுப்போங் கலைத்தலைசாய்த் தறலிற் சரைப்பார்க் களிப்பாரும்
தெனைய பொருளோங் கினுந்தாழா திறுமாப் புறுவார்க் கறிகுறியே
லனைய நிறைவொன் றிலாதிறுமாப் படைவார்க் கந்தோ வறைவாரார். (௭௧)

அமல னமலைக் கந்தரங்கத் தருள வதன்பி னவனருளா
னிமல னுஞ்சுந் தரனுபமன் னியன்கும் போற்ப வன்றுணை
யுமைசேய் நம்பி சேக்கிழா ருமாப திமுன் னோர்புகழ்ந்த
விமல வதிபத் தரின்குலத்தோ ரிவரே லினிநாம் விளம்புவதென். (௭௨)

அனக னுடனு யகஞ்செவிகண் ணவன்பா லாக்கிச் செல்பொழுதுந்
தனகன் றனைத்தன் வசத்தீர்த்த தண்பு கார்ச்சாய்க் காடுபல்ல
வனமா முல்லை வாயினெய்தல் வாயில் கலிகை யத்தீச
மனவாழ் பெருந்தோட் டம்முதற்றே வார தலங்கள வயங்குமிவண். (௭௩)

பாலை.

குறிஞ்சி முல்லை திரிந்திடைநற் குணமாண் டுச்சிப் பொழுதுளதா
யிறந்து படினுஞ் சுரநிலப்பே ரியைந்தம் பணத்தி கோட்டமரீஇச்
செறிந்து வாகை யீந்துபஃறுத் துரிகு ராநிம் பாதிகளால்
விறந்த பயன்பற் பலவார்க்கு மேவ வளிக்கும் விறற்பாலை. (௭௪)

**திணைமயக்கம் வேறு.**

வரைவெடிமுத் தினமுறவா மலகபல மான்கனறின் வந்துதாக்க
நிரையினிரிந் தோடுறமா னிறமேதி வயல்புகமே னிமிர்பாய் வாளை
திரையுழக்க வளைகழைமோ திடத்தரளம் விளமோதத் தீம்பழங்கள்[காட்டும்
விரைபுகம்போதகமுதைப்பவெரீஇத்தினைமேய்ந்தைந்திணைகள்விரவல். (௭௫)

வேறு.

பத்திநல னறிவுதுணை விசேட சேடப் பள்ளியின்மேற் பாற்கடலிற் பள்ளி
கொண்டோன், பத்தினியாய்ப் பாணமா யூர்தி முன்னுப் பண்புறுமாலூரத்தா
சற் பயில்வும் வேண்டா, தத்தருவா னிதிமணிமுன் னுய வெல்லா மவிரு
வனை யரசும்வெறுத் தருட்டியா கேச,னித்தரைபுக் சானூர்வீற் றிருத்த லிந்
நாட் டின்னசையே விதன்பெருமை யிசைப்பார் யாரே. (௭௬)

ஆ திருவிருத்தம் (௧௨௧)

திருநாட்டுச்சருக்கம் முற்றிற்று.

---

* ஆரினிலை—ஆத்தியிலை

## திருநகரச் சருக்கம்.

உலகமெலாம் பற்பலவுண் டெய்யான மெவையுமிதற் கொவ்வா தென்பான்
பலவளநீள் வகலமெலாம் பன்முறையு நனிபார்த்துப் பார்த்திவ் வூரை
யுலகமெலாம் புகழ்பிரக துத்தியா னம்மெனமுன் னுரைத்தா னம்ம
பலவளனுஞ் செறிசுவர்க்கபதியாஞ்சுந்தரனெனில் யாம்பகர்வதென்னே (௧)

### பொதுநகர் வேறு.

பொன்மை சான்றபன் மாடங்கண் மிசையெலாம் பொற்ப
வின்மை சான்றவச் சிரமணி பதித்தொளிர் விதத்தான்
முன்மை சான்றகண் ணுதலரு ளருளென மொழியு
நன்மை சான்றது திருப்பெருந் தோட்டமா நகரம். (௨)

துங்க நீண்மணி மாடங்கண் மரகதச் சுடர்ப்பொற்
பைங்கண் மாடஞ்சொற் பயிர்களெஞ் ஞான்றும்வாழ் பழன
மெங்க ணும்பசுந் தொளிர்தலா னிமாசல மீன்ற
நங்கை போல்வதத் தீச்சுரப் பெருந்திரு நகரம். (௩)

கயமு கத்தன வாடலை வளைத்தவக் கவிஞற்
கயமு கத்தன வாடலை வளைத்தவக் கவிஞ
னயமி குத்தவா தாடிய கணேசன்போ ளுடு
நயமி குத்தது திருப்பெருந் தோட்டமா நகரம். (௪)

இச்செய்யுளின் முதலடியை, "கயமுகத்தன் அவ் ஆடலை வளைத்த" என்றும், "கயம் முகத்து அன ஆடு அலை வளைத்த" என்றும் பிரித்து, முறையே கயமுகாசுரனது அந்த வெற்றியை மடக்கிய எனவும், வாவிகளிடத்துள்ள அந்த ஆடுகின்ற அலைகள் வளைகளை யுடையனவாகிய எனவும் இரண்டாமடியை, கயமுகத்தன் ஆள் தலை வளைத்த என்றும் கயம் உகதன வாள் தலை வளைத்த என்றும் பிரித்து, யானை முகவிறையகனுடைய ஆளுந்தலைத் தன்னிடத்துக் கொண்ட எனவும், இழிவுகெடப் பொன்வெளியை இடந்தோறுஞ் சூழ்வித்த எனவும் பொருள்கொள்க.

மலைவி லார்நுதல் பார்ப்பதி கண்மணி யெனலாற்
கலைபி லங்குமா கரவான் காதல மாண்பா
லுலகெ லாம் § தனி மொழியினோர் குமரனை யொக்கு
நலனி றைந்தபல் வளத்ததத் தீச்சுர நகரம். (௫)

இச்செய்யுளின் முதலடியில், மலைவில்லார் நுதற்கண்மணி பார்ப்பதிகண்மணி யெனத் தனித்தனி கூட்டி முருகனுக்கும், மலைவு இல்லாதவர்கள் நுதலுகின்ற பாரிலுள்ள பதிகளுக்குமணி எனலால் என்று நகருக்கும், இரண்டாமடியில், மான் விளங்கும் மா கர அரனது புத்திர மாண்பாலென முருகனுக்கும் கலைகள் விளங்கும் ஆகர மேன்மையை யாவருங்காதலிக்கின்ற மாண்பாலென நகருக்கும் பொருள்கொள்க.

வீதி யெங்கணும் விழாவணி நாடொறும் விளங்கும்
வேதி யெங்கணும் வீதிகோத் திரநலன் விரவும்
பூதி யெங்கணும் புறத்தகத் திருளறப் பொலியுஞ்
சோதி யெங்கணுந் துதைதரு திருப்பெருந் தோட்டம். (௬)

---

§ தனிமொழி—திருபபதம்

வேத னாவினும் பாரதி வீற்றிருந் தருளும்
மாத வன்னித யத்தினுந் திருமகள் வாழும்
போதை யார்கணின் ஞானவண் மகண்மிகப் பொலியு
நாதன் வீற்றிருந் தருளுமத் தீச்சுர நகரம். (௭)

இந்தி ரன்னய னிந்திரை கேள்வன்முன் னிமையோர்
வந்து வந்தயி ராவத நாதனை வணங்கித்
தந்த மிட்டகா மியம்பெறீஇ வாழ்பெருந் தகைத்தா
னந்தி நாயக னமர்பெருந் தோட்டமா நகரம். (௮)

உம்ப ராதியா வருந்தினம் புகுதலா னுமைசே
ரும்ப ராதிப னருள்கொடு போதலா னுலக
நம்பு நூ*லந்த மாதியென் சொற்பொரு ணவிலு
நம்பி ரானமர்ந் தருளுமத் தீச்சுர நகரம். (௯)

நெறியி னீங்குவ கதிர்களே மாடநீ ணிரையா†
லறிவி னீங்குவ முலைகளே யறப்பணைத் திடலாற்
செறிவி னீங்குவ கழறரு காய்களே செலுத்துங்
குறியி னீங்குவ யாங்கணும் பூங்கணைக் குலமே. (௰)

மெலிந்தி ரங்குவ மணிக்கலை மெல்லியர் நுசுப்பே
கலந்து நீரது காவிரிப் புதுப்புனற் கதிப்பே
விலங்கி யோடுவ வடைந்தவர் மிடைந்ததீ வினையே
கலங்கு லாவிய திருப்பெருந் தோட்டமா நகரம். (௧௧)

வேறு.

பொழில்கள் கீழ்ப்பெய் புதுநற வாறுபோய்க்
கழனிசென்று கதிர்விண் ணெழுப்புமா
லிழிவு செய்தார்க் கெதிர்செய் வலியிலா
ரொழுகி யேனைய ராலங் குளுற்றல்போல். (௧௨)

தவள மாடமேற் சார்மதி வானதித்
திவள் வளைப்பொரும் வெண்டிர ளைச்சிகைப்
பவள மாடஞ்செங் கஞ்சுகப் பாகன்வெண்
கவளம் வான்கரிக் கீதிறங் காட்டுமே. (௧௩)

இந்து காந்தமா டத்திழி வெள்ளங்கண்
டெந்தை சுந்தர நாத னருளென்பர்
சிந்தை தேர்ந்தெப் பொருளுஞ் சிவமெனு
மந்த வாய்மைநேர் கண்டென வாண்டையோர். (௧௪)

கன்னல் சூழக் கமுகுபின் சூழ்தரச்
சென்னெ லோங்குவ பாண்டிமா தேவியா
மன்னை காப்போ டமைச்சர் புறக்காப்பு
மன்ன வோங்கி வளர்சைவ மாண்பென. (௧௫)

---

* நம்புநூலீண்டுச் சிவஞானபோதம்.

† நிரையால்நீங்குவ என இயையும்.

பளிக்கு மாடங்கள் பாங்கிற் பொருள்களைக்
களிக்கு மாறெதிர் யாவர்க்குங் காட்டித்தன்
னொளிக்கு ளந்து விதப்பொரு ளுண்மைசேர்
தெளிக்கும் பேரருட் டேசிகர் போலவே. (௧௬)

சந்த னங்களு நால்வகைப் போதுகண்
மூந்த னங்களைக் காய்முதல் வர்க்கென்றும்
வந்த னங்கள்செய் வார்கொள மல்குமாற்
றந்த னங்கள் வரையார் தருதல்போல். (௧௭)

தேனி லங்களி யாரச் செறிந்துபொற்
றேனி லங்களி யாரச்செல் காவினில்
வானி லாங்கலி மாக வளமதி
வானி லாங்கலிமாக வளம்பொரும் (௧௮)

தேனில் அங்கு அளி ஆரச்செறிந்து பொன்மயமான தேநிலம் (தெய்வநிலம்) களி நிறையும்படி மேற்செல்கின்ற காவிலுள்ள மேலான இலாங்கலியிற்றங்கிய வளப்பமுள்ள மாகமதியானது, வானுலகில் நிலாவுகின்ற ஒலியையுடைய அயிராவதமாவினது கவளத்தை ஒக்குமென்று பொருள்கொள்க

திங்க ளோடுசீ மூதந் திளைப்பவான்
கங்கை சென்னி கலப்ப வலங்கல்கான்
றெங்கும் வீழ்ரித் தேகபா தேசன்போன்
றங்கண் யார்க்கு மடிநிழல் செய்யு§ மால். (௧௯)

பனைவி ரிந்து பரந்துகீழ் வட்டமா
யிணர்செ றிந்து முறைவிரிந் தேகிலா
னணவு கொன்றை செருந்திக ளாதவன்
புணரொர் காலபொற் றேரிற் பொலியுமால். (௨௦)

அறிவொ டோர்ப்புக் கடைப்பிடி வாய்மையாஞ்
செறிநி றைக்குண மில்லார் சிலர்வெளி
யுறவி ளக்கலி னுவன்முன் னோங்கிவிண்
ணிறை பழத்தின் விளக்கு செறியெலாம். (௨௧)

போத மன்பு வணக்கம் பொறைநிறை
யாதி யுள்ளத் தமையப் புறங்காட்டா
மேதை யோரின் விளபல மாதுளை
மீது யர்ந்து பழுத்து விளங்குமால். (௨௨)

உரைசெய் தன்மைமுற் றுள்ளுறக் கொண்டவை
தெரிய யாவர்க்குங் காட்டித் திருத்துசேர்ப்
பெரியர் போலப் பிறங்குவித் தொன்றிலா
விரி திராட்சைதண் மேவுமிடமெலாம். (௨௩)

§ ஆல்—வினைமுதல்

வாவி வாளை மகிடமு ழக்கலிற்
றூவி வண்பூந் தருக்கிளை தாக்கலப்
பூவில் வண்டு தடத்தலர் புக்குலா
யோவி லாப்பரி வர்த்தனை யோர்க்குமால். (௧௫)

வாவியோடை தடங்களின் மாடெலாம்
தேவிபாக சிவார்ச்சனை யாதிய
வோவி லாச்சிவ தன்மஞ்செ யுந்தமர்
மேவு சைவ மடங்கள் விளங்குமால். (௧௬)

பன்ன சாலை பதிகர்சேர் சாலைக
ளன்ன சாலை யாகவண் சாலைமன்
சொன்ன சாலைமுற் றொல்பசு தன்மமா
றென்ன சாலையும் யாண்டுமிக் கீண்டுவ. (௧௭)

மக்க ளொக்கல் மருவு பிதிரர்முற்
றொக்க பாசத்தி னோர்க்குத் தொன்னூன்முறை
தக்க வாறுசெய் பாச தருமமு
மிக்க வில்லறத் தோரில விளங்குமால். (௧௮)

வேத சாலை விளக்கு சிவாகம
போத சாலை புராணப் பிரசங்க
மோத சாலை முறைமகச் சாலைசங்
கீத சாலைமுன் னுய கிளர்வன. (௧௯)

வேறு.

அரியயன் முதூர்ந்த ஞதி யமரர்நா டோறும் போந்து
பொருவருஞ் சுந்த ரேசன் பொன்னடி பரவ லால்வெண்
கரியனம் வயின தேய னேதியக கடவுளூர்தி
பொருவற விரவல் கண்டோ ரும்பர்வா ழுலக மென்பார். (௨௰)

மழவொலி மணச்சீ ரீகை வழங்கொலி தழங்கி யச்சீர்
முழவொலி நடச்சீர் வேத முழங்கொலி சிவாக மச்சீர்
விழவொலி துதிச்சீர் வேள்வி வியனொலி கலைச்சீர் கார்ச்சி
ருழவொலி யிடைய றாதே ழுதநியி னிரட்டி யோங்கும். (௨௧)

மகத்தவி சுணவேட் டென்றும் வானுல கெல்லாஞ் சாரும்
வகுத்தநா னிலவ ளங்கண் மல்கலாற் புவிமுற் றாரு
மிகுத்தபன் னிதிப்பெ ருக்கம் வேட்டுறு தனதன் வெள்கும்
அகத்தொளிர் கல்வி வாஞ்சித் தருங்கலை வல்லோர் சார்வர். (௨௨)

மலர்பெருந் தோட்ட வாய்மை வளப்பெருந் தோட்ட மென்றெங்
குலகமும் பரவு சீர்த்தி யோங்குமிந் நகர்ப் பொதுச்சி
றலகில வுரைக்க டங்கா வதன்புறத் தகத்தி [illegible]
னிலவுசீ ரனைத்தே யாயி னுஞ்சிறி [illegible]. (௨௩)

### புறநகர்.

போற்றயி ராவ தேசன் புவனங்க ளுய்வா னென்றும்
வீற்றிருந் தருளும் வாய்மை விளக்கத்தாற் பெருந்தோட் டந்தா
னேற்றுறு பகையின் றேனு மெழினகர்க் கங்க மாகச்
சாற்றுநால் வகைப்ப லங்க டன்புறஞ் சூழ வைகும். (௧௩)

### இரதங்கள்.

இந்திரன் சுந்த ரேச னிணையடி யருச்சித் தீஃடு
வந்தினி திருந்தா னெங்கள் வன்சிற கரிந்த சோதி
யெந்தையா ரருள்பெற் றுய்து மெனத்துணிந் தோங்க லெல்லாம்
மந்தில்வந் தமர்ந்த தென்ன வணிமணித் தேர்கண் மல்கும். (௧௪)

எவ்வெழிற் றேருமிவ்வூ ரிரதங்க ளொன்றுக் கொவ்வாச்
செவ்விமிக் கறிஞர் பல்காற் றேர்தரற் கிடனாய் முற்று
வவ்விய வுறலாற் றேரொன் றறைந்தவம் முன்னி லைப்பே
ரிவ்வணி நகர்த்தேர் பெற்ற வினம்பற்றி மற்றும் பெற்ற. (௧௫)

இந்திர ஞாலத் தேர்முன் னெறுழ்வலிச் சூரற் கீந்தோ
னிந்திர னரசாய்ப் பூசித் தித்தலத் திருந்த லாலவ
விந்திரப் பேர்ப்பொ ருத்தத் தாலிவற் கீந்தான் பற்ப
லிந்திர ஞால மென்ன விலங்குவ விரத மெல்லாம். (௧௬)

### கெசங்கள்.

தங்களின் முதலா மேன்மை சாரயி ராவதப்பே
ரங்களி றமலற் பூசித் தமர்தல மென*மற் றேழ
கங்களி களிறு மேனைக் கரிகளும் பிடிக ளோடு
மிங்களி துறப்புக் கென்ன வெண்ணில விபங்கண் மல்கும். (௧௭)

ஒளித்தமை நாகம் பற்ப லும்பலா யுததி நீங்கி
வெளிப்பட வச்சந் தீர்ந்து வேழத்துக் களித்த தோர்ந்து
களிப்புறீஇ யருள்பெற் றுய்வான் கருதியீண் டடுத்த தென்ன
வளிப்பொரு மதாச லங்க ளளப்பில சூழு மாங்கே. (௧௮)

வனசரத் தகைய தந்தா வளங்களோர் பாங்கர் மல்கு
மனநதி சரங்க ளாம்ப லாம்பல்க ளோர்பாற் பல்குங்
கனகிரி சரங்க ளாய கரியினை மோர்பாற் புல்குஞ்
சொனவிவை பிடிகளோடுந் துதைபெருங் கூடம் பல்ல (௧௯)

### துரகங்கள்.

குரங்கமா தவர்வி டுப்பக் குறித்துல குயக்கைக் கொண்ட
வரங்கமான் சுந்த ரேச னருட்பெருங் கடற்ப ரப்பிற்
றரங்கமாண் பந்தி யென்றே சார்ந்துல கவர்வி யப்பத்
துரங்கமா நிரைகண் மிக்குத் தொக்கமந் துரைகண் மல்கும் (௨0)

அரியசீர்ப் பரிகளெல்லா மட்டமங் கலமே யன்றேற்
பரவிலக் கணங்கள் சான்ற பஞ்சகல் யாண மாகும்
விரவுமா யோர்க வாய்மை விளக்கமிக் கொளிர்வ வேமற்
றுரைவழுத் துரங்கம் யாண்டு மொன்றேனு மின்றாங் குண்மை (௨௧)

---

* மற்று-ஏழ்-அகம்-களி எனப் பிரிக்க.

அச்சுவ விலக்க ணங்க ளறைந்தநூற் புலவ ரிந்த
விச்லைசசூர் பெருந்தோட் டத்தின் மேவியொவ் வோரு றுப்பு
நச்சினோர் கண்டு கண்டு நவின்றன ரென்று லின்ன
முச்சகம் புகழ்ந்து ரங்க முழுந்தசீர் வழுந்த லெங்ஙன் (௪௨)

கரிமதங் கடல்க டுப்பக் கந்துகந் திரைவி லாழி
வருநுரை கடுப்பக் கூட மந்துரை பெருக்க லங்கள்
பொருவலே ழுங்கடோணி புரையவெஞ் ஞான்றுஞ் சூழ்வா
லொருபெருந் தோட்ட மூழி யுததி மேற் காழி யொக்கும் (௪௩)

பதாதிகள்.

இப்பெருந் தோட்டத் தென்று மீசனின் னருட்பெ ருக்கத்
துப்பினுற் புறத்துந் தெவ்வாய்ந் துன்னூக ரென்று மன்று
லப்பரி சதனுல் வீர ராங்குளார் கண்டே யத்தாற்
றப்பறத் தம்மிற் றுமே சார்ந் திணைந் துறுபோர் செய்வார் (௪௪)

மன்றினி லெடுத்து நிற்கு மலரடிக் கர்ச முன்னுண்
டன்றியும் விஞ்ஞை வீர ராற்றுபோர் கேட்டாங் கஞ்சிச்
சென்றில ஹுயிர ஊத்துந் தெவ்வலி வெய்ய கூற்று
மென்றிடிற் பெருந்தோட் டத்து வேறெவ ரெதிர்த்துச் செல்வோர் (௪௫)

தேருகைத் தூழிக் காலிற் சேணெறிச் செல்வர் தானைக்
காருகைத் துலக மெட்டோர் கன்னலின் மீள்வர் பாய்மாச்
சீருகைத் ததங்க திப்பஃ றிறல்வலி தெரிப்ப ராற்றற்
பேருகைத் துலக மேழும் பேரிசை விளக்கும் வீரர் (௪௬)

அச்சுரு ளார்பூ ணூழி யடிப்பரப் பதன்மேன் மேற்றட்
டெச்சிகூ விரங்கால் போற்றி யுருக்கண்முன் வருக்கஞ் செய்வார்
கச்சைமேற் றவிசு தோட்டி கண்டைபொன் னோடை யாதி
குச்சம்வண் கலனை போர்வை குசை கசை தண்டை யாதி (௪௭)

பற்பல வொவ்வோர் பாங்கர்ப் பார்த்தகண் களிக்கச் செய்வார்
பொற்புற வெறிவ வெய்வ போழ்வமுற் படைகள் செய்வார்
விற்றனை குணமெய்க் காப்பு விரவுகைச் செறிமுற் செய்வார்
நற்கொழு நுகங்கோன் மேழி நவிற்றுவார் பல்லோ ராங்கே (௪௮)

இடைநகர்.

புறநகர்ச் சிறப்பி னெண்மூக் களவுரான் புகன்றி வேனைத்
திறநல முற்றும் யார்க்குஞ் செப்பரி தமைக வாய்மை
விறனலப் பெருந்தோட் டத்தின் வியனிடை நகரின் மாண்பு
முறனவி லுதன்முற் றுதிங் கோர்சிறி துரைக்க லுற்றேன் (௪௯)

அகநகர் நின்றுல் லாச மாகப்பன் மகளிர் மைந்தர்
தகுசிவி காதி யூர்ந்து சார்ந்தனாங் களித்து வாழ்வா
னகைமலர் வாவி சோலை நன்மணிச் செய்குன் றாதி
வகைவகை மருவி யோங்கு மன்னிடை நகரின் மாடு (௫௰)

வச்சிர மணிச்செய் குன்றின் மான்மதி வானிற் செல்கா
லச்சிலை யுற்றொன் றாய்மீண் டாங்குற லரனி டத்தி
லிச்சக மொடுங்குங் காலை யெய்திய வுயிர்ம லத்தா
லச்சுறீஇ வினையுண் பான்மீண் டவனியுட் சேறல் காட்டும். (௩௧)

செம்மணிச் செய்குன் றேகிச் சேணிடைத் திகழ வானோ
ரிம்மலை யருண வெற்பென் றெண்ணினான் கங்கை யாட்டிக்
கைம்மலர் தூய்ப்பூ சிப்பக் கனம்பெய்யா தருவி பாய்தல்
விம்மித மென்று கண்டோர் வியப்புற விரியு மந்நீர் (௩௨)

பொருவினீன் மணிச் செய்குன்றின் புடையுயர் பொழிற்பூந் தேன்சார்
தருவியா யொழுகல் கண்டாங் கருத்தின ரென்னே யிந்த
வரையினைப் போர்த்த கொண்டல் மதுக்கடல் பருகிப் பெய்த
பரிசுகொல் செந்தே னாகிப பரவுமிவ் வருவி யென்பார் (௩௩)

இந்துகாந் தச்செய் குன்ற மிரவினின் மதிநேர் கண்டாங்
குந்துநீர் நந்தனங்க ளூறீஇ மலர் முதலிற் பாய
வந்தில்லை கறைநீர் பாய்ச்ச வடுத்தவர் மடுத்திந் நீர்முன்
வந்துபாய்த் தவரா ரென்பார் வாய்மையோ ராத யிர்ப்பார் (௩௪)

செய்குன்ற நிரையினின்று தெய்வகற் பகப்பூக் கொய்து
நைகின்ற விடையா ரீண்டை நறுமலர் மணமின் றென்றுப்
பெய்கின்றார் பாங்க ரன்ன பிறந்தபொன் மலரை யாண்டு
*மெய்கின்றா ரீண்டு பொற்பூ வெய்துகா ரணமென் னென்பார் (௩௫)

மாதர்கண் மைந்தர் பற்பன் மணிக்குன்றி னமர்கா லாங்குப்
போதமோர் கலையைப் பற்றிப் புருவொவ் வாமையிற் கழிப்பார்
பாதிபின் பற்றி நெற்றிப் பண்புறா மையின் விடுப்பார்
சீதமா மதிமுகத்தைச் சிவணுறா மையின் வெறுப்பார் (௩௬)

வேறு.

மகளிர்மலர் வாவிகுடை வான்புகுத வாரிசமாண்
முகைவெள்கி முறுக்குடைவ முலைநோக்கி முகநோக்கி
யகன்மலர்க ளலர்வனவீ தறியாமு லாதவனு
னிகழ்மென லெவ்வாறிலையு நீலாதிக் கவையின்றால் (௩௭)

சூழிபடிந் தெழும்பாளோர் துடியிடையை யோர்வீர
னூழியிலாழ்ந் தனையோவா ரணங்கேம்பன் றுடன்குளித்துப்
பாழியந்தோள் விந்தை நவெனப் பரித்துவலம் புரியாதி
வாழியரும் பொருளெடுத்து மகிழ்வானிற் கரைவருவான் (௩௮)

ஓவியபந் திகணீரி லுற்றனகாண் கனவொருவ
னாவியினல் லாருறுப்பி னணிசுட்டி யாங்கொருவன்
வாவயின்மூ வகைமலரு மலர்த்தனநோங் கரும்பிதென்றோர்
பூவைபயோ தரம்பிடிப்பப் பூசலவ னும்விளைப்பான் (௩௯)

---

* மெய்தல்-அறிதல்.

உடுத்துளமென் றுகினனைத்தாங் குறுப்பெவையும் வெளிப்படூஉ
மடுத்தவர வெள்குறுமின் னார்குழீஇப்போர்ந் தேகாச
மெடுத்துதவக் காளையர்வெற் றிடைநனிகண் டெடுத்ததுகில்
கொடுத்திடான் கண்ணனிவர் குணம்பெரிதென் பார்கண்டோர் (௧0)

கற்பகமுற் கொடிகடழீஇக் கவின்வல்லி சாதமரூஉம்
கற்பகம்பற் பலவீண்டுக் கஞல்வகையென் னனமலராற்
பொற்பகர்சண் பகஞ்செருந்தி முதற்றருக்கள் பொலிகாவிற்
பொற்பகமின் னார்செறிந்து புதுமலர்கொய் வான்புகுவார் (௧௧)

கன்னுதலார் துன்னுதலா னடைமொழிசா யற்குடைந்த
மன்னுமரா ளங்காள கண்டம்வளர் சுகமஞ்ஞை
முன்னுறவச் சுற்றிரிந்து மொழிநடையா திகணிகழ்வாற்
பின்னுமவை யுளவென்றே பேசவிளங் குறுங்கானம் (௧௨)

மட்டார்பூங் குழலார்கை மலர்நீட்ட மேற்கொம்பி
னெட்டாத மலர்க்கறிந்தாங் கிளையர்புயத் தேந்தினரக்
கட்டார்கொய் தெனநிற்பார் காணுநர்க்குத் தாம்வேறு
பட்டோரப் படாதுபூம் பணைத்தருவி னிரைபோல (௧௩)

பூக்களின்மே லாம்பொறிவாழ் பூக்கருவ லீக்கமறச்
சேக்குறுகைக் கெட்டாத திறல்காண்டு மெனமகளிர்
மேக்குறுபன் மலர்பறிப்ப வெகுளன்மின் மென்பூவின்
போக்கொழியப் பயன்கொண்மி னெனமைந்தர் புகல்கிற்பார் (௧௪)

மாதர்புது மப்பொழுதே மலருதவா தமர்செயலை
பாதிரிநே ருதைத்திழித்துப் பகரவிரு பாதவமும்
போதுநனி தருமின்னு புரிந்தாரை யொறுத்தலவர்
மீதுறநன் னயஞ்செய்து விடலெனுநூ லுணர்ந்தவர்போல் (௧௫)

மதிநுதற்செவ் வாய்க்கருங்கண் மணிமுல்லை முகைமுறுவற்
கதிர்மணிப்பூண் முலைமின்னார் கவின்மணிமாளி கையமர்ந்து
விதுமுகவேர் முத்தரும்ப விரைத்தொடைசெய் திளையர்மனத்
துதையளிகள் வணப்புமதுத் துய்த்தழுந்தக் குழல்சூழ்வார் (௧௬)

நிறைமதியின் சிலைமாட நிலாமுன்றிற் பரியங்கத்
துறைதருகா ளையரிரவி லொண்டொடியார் தமைமார்பிற்
பொறைதரக்கொண் டிங்கெதிர்நீர் பொழிந்துநீ ழுறவமர்ந்தாங்
கறைகடலி லரவணையி னலர்மகண்மார் பனையமர்வார் (௧௭)

விண்ணிமிர்மா ளிகைமடவார் வியன்கற்ப கக்கனிகொண்
டுண்ணமுதி னுகர்ந்துவப்பா ருறுசுவைத்தே மாங்கனியுண்
டெண்ணரமங் கயருவர்ப்பா ரின்னமுதம் பயின்றவற்றி
னன்னுவர்ப்பு மற்றவற்றி னயப்புமயிர்க் குணமன்றே (௧௮)

### அகநகர்

பெருந்தடவையிடைநகரிற் பிறங்குவகை வளங்களெலாந்
தெரிந்துரைசெய் வாரெவரோ சிறிதுரைத்தேன் போதியிலைப்
பொருந்துறுதி யாவினியப் புனிதலக நகர்வளனே
விரிந்துளவாம் விமலனருள் விளக்கியவா சிறிதுரைப்பேன் (௬௯)

மாடநிரை செய்குன்றின் வகைநோக்கி மலையெல்லாம்
பீடுறுசுந் தரர்தன் போருள்பெற் றணிமையுற
நீடிகந்தத் தியாமுறலெலங் நெறியென்று வாளகிரி
மாடுறச்சூழ்ந் துயர்ந்தாங்கு வயங்குறுமஞ் சமரிஞ்சி (௭0)

ஒருகணம்பல் லாயிரமோ சனைசெல்லு மொண்கதிரு
மொருதினமுற் றினும் விரைந்தாங் கோடியநீண் டோங்கசலர்
திருவருள்பெற் றுயவந்து சேக்கின்ற தெனத்திகழுந்
திருமதிலிங் கிதன்பெருமை செப்புவதென் வேறினியாம் (௭௧)

கோகநகம் பெருந்தோட்டக் குலநகர்சார்ந் தருள்பெற்று
மாகநக வினிநாமேன் வைகுதலசார் பின்றியெனக்
கோகனக ணண்டத்திற் குலவுபெரும் புறக்கடலிம்
மாகனக மதிற்சூழ வந்தமர்ந்தாற் போன்மகழி (௭௨)

சுந்தரரா யகர்க்கணித்தாய்த் துன்னுறப்பெற் றமையாலோ
விந்தமென வேழுலகின் மேற்சென்றும் வழிவிலக்கா
தெந்துகதிர் முதலிமையோர்க் கெழுநிலைப துவாரநெறி
தந்துபெருவ குணம்விளக்குந் தனிமதின்மேற் கோபுரங்கள் (௭௩)

அந்தரநா டரையழைக்கு மந்துவரா குதியமுதோ
தந்திரமா மறைபாதி சங்கீத வாரமுதோ
சுந்தரநா யகனருளுந் துய்த்துய்ம்மின் வருகவென்றுங்
குந்துமதிற் கோபுரமே லோவகுவிலோ தனநுடங்கும் (௭௪)

அருணிறைபொப் பிலாமுலைபா லண்ணலைக் கும்பிடற்காங்கு
வருதரால் லாலென்று மாறுறுவா ரின்றெனினு
மொருவின்மதி லுறுப்பென்னு முறைதிறம்பா முறைநிறைந்த
திருமதின்மேற் பொறிவகைசெய் திறலுரைப்ப தரிதெவர்க்கும் (௭௫)

### பொதுமாதர்வீதி

அரவுகரா மாதிமனறத் தணிமலர்முன் வெளிக்காட்டி
மருவினர்நீ ளாதாவி வாங்குகிடங்கினுமாசு
கரவுமறைத் தணியாதி கவின்காட்டிக் காண்பாரின்
பொருளுயிரா தியகவரும் பொதுமாதர் மறம்பெரிதால் (௭௬)

சிலைகுனித்துக் கணையுய்த்துத் தெவ்வலிவென் றெவ்விடையுந்
தலைகுனியாத் திறல்வேந்தர் தம்மையுந்தம் வளைபுருவச்
சிலைநிமிர்த்துக் கட்கணையின் றெரிசனத்தாற் காலில்வீழ்த்
தலைகுனிப்பர் சலிப்புமறத் தலைக்கடையின் விலைக்கொடியார் (௭௭)

சலனமறக் கட்கடையாற் சகமுழுது மயல்புரிந்துங்
கலவியவரை துகில்புனைவார் கண்ணெல்லா மதுவரைவா
ரலகில்பொரு டினங்குவிப்பா ரறத்தாரோர் சிறிதுணரார்
விலைமகளிர் முயற்சிதிரு வினையாக்கு மெனப்புகல்வார் (எஅ)

என்புகறித் திடுநாய்பின் பிதழ்கிழிதன் குருதிசுவைத்
தென்பளித்த தெனக்களித்தாங் கிந்தியங்கா ளையர்கலப்பின்
முன்பளித்து முந்தாவம் *முன்பினரின் பெனக்களித்து
முன்பிழந்தும் பொருளிழந்தும் முன்கடைசூழ் வார்தெருவில் (எகூ)

அழிவறு பேரின்பநிப மளித்துடன்முன் பாவனையால்
வழுவறக்கொள் வார்திறலின் மைந்தருடன் முன்கவர்ந்து
மழிவுறுசிற் றின்புமரு ளாதவர்பாற் கொண்டிரித்தும்
பழுதினரென் றவரொதுக்காப் பரத்தையர்வல் லபம்பெரிதால் (அ0)

விழியாலு மொழியாலும் விரையாலும் புரையார்பாழ்ங்
குழியாலுங் கழியாத கொடியார்பல் பொருள்கவர்ந்து
மொழியாதவ் வுறுப்பினிலோ ரிம்மிபுமாங் குதவாரிப்
பழியாரை விலைமாத ரென்றுலகம் பகர்மென்னே (அக)

ஆவணவீதி

நானிலத்தின் நாட்டுவிளை நவிலருப்பல் பொருள்களுமப்
பானிலத்திற் பலீறிவிற் பெளவத்தின் மரக்கலத்தின்
வானிலத்தி னூர்திகழு வருபொருளு நிறைந்தொளிரு
மேனிலத்த மாடநிரை விரியிருபாற் பீடிகைகள் (அஉ)

செந்நென்முதற் பல்வகைய செனுயர்வெற் பினமொருபாற்
கன்னனறுங் கனிபுதிய காய்கிழங்கு வகையொருபாற்
சொன்னநவ மணிவகைய தூய்ச்சுடர்க்கு வாலொருபாற்
பன்னரிய பல்வகைய பயிலுமணிப் பகுப்பொருபால் (அங)

மலர்தளிரின் மென்பட்டு வகையொருபா லணுவினுநுண்
பொலனிழையம் பரவகையின் பொற்பொருபாற் காற்பாச
நலனிறைநுண் ணிழைதெரியா நாகவங்க மொருபாற்கம்
பலனுவச சந்திரகுப் பாயவிதா னம்மொருபால் (அச)

பருதுவநக் குவசுவைப்ப பளகறவுண் பணகறிப்ப
விரைமிகுமை வகையவுணு மெய்க்களப விதமொருபான்
மருமலர்வா சிகைபிணையன் மாலைகரோ டிகைகண்ணி
தெரியலிலம் பகஞ்சரம்பூஞ் சிகழிகைமுன் வகையொருபால் (அரு)

அடுத்தவர்கட் கிடையறா தளித்துமேன் மேற்பொருள்கண்
மடுத்துலவாக் கிழியெனவே வயங்கிடுமந் நியமத்தி
னுடுத்தணியின் வகைநியமத் துவணையும்வெள் குறப்புனைவார்
கொடுத்தல்கொள லனுத்துணையுங் குறைதன்மிக லறப்புரிவார். (அசு)

* முன்பு—வலி.

துன்னுகணக் கைக்தொகையெட் டுணைபிறழா வகைதொகுப்பா
ரின்னபொரு டருகவென வியம்புரையல் லாலுண்டோ
வென்னவினு வுரையுமதற் கெதிர்மறையு மென்றுமிலாப்
பொன்னகரும் பொருவறமேற் பொலிநியமம் புகல்வரிதே (அஎ)

## வேளாளர்வீதி

பிரமன்முகம் புயந்தொடைகாற் பிறந்தனநாற் சாதிகளிற்
பிரமபதச் சூத்திரரே பேணிமுச்சா தியும்புரக்கும்
பெருமையர்மே ழித்தொழிலாற் பிறவுறுப்பெ லாந்தாங்கும்
பெருமையது பதமேயப் பின்னவர்சீர் முன்னவரே (அஅ)

காலிலையே னடையொழியுங் காத்திரம்போல் வளரன்னப்
பாலிலையே லுடலொழியும் பல்லுயிரு மென்றிரங்கிச்
சாலிமுதல் விளைத்துதவிச் சகமுழுதும் புரந்துரிய
நூலின்முறை யொழுக்குதிற னுண்மையர்சூத் திரரம்ம (அகூ)

வேளாள ரெனும்பெயரே விளக்குமிவர் கொடைப்பெருக்கந்
தாளாண்மை யுழவினுமேற் சாம்பசிவ மலரடிக்கே
யாளாகிச் சிவார்ச்சனைமா கேசுரபூ சாதியெலா
மீளாத பேரன்பின் விளைத்தின்பே திளைத்தமர்வார் (கூ0)

காராள ரெனப்புலவர் கவிநிறையப் புகழியற்கைப்
பேராளர் கருணையினாற் பிறங்குலகெ லாம்வளர்க்கு
மேராளர் கொடையாதி யியலறமே யணியாக்கொள்
சீராளர் வேளாளர் திறம்புகல்வா ரெவரம்ம (கூக)

அரசிளைசை மாறர்முனை யடுவார்வா யிலார்மூர்க்கர்
பொருவில்கலிக் காமர்கோட் புலிதாயர் கஞ்சாறர்
துரிசில்விறன் மிண்டர்செருத் துணைசத்தி சாக்கியர்தாள்
கருதுறுசேக் கிழாரொடுமெய் கண்டார்முன் னிவர்குலத்தோர் (கூஉ)

## வைசியர்வீதி

தனவணிகர் பூவணிகர் தகைசாலுங் கோவணிக
ரெனவணிகர் முத்திறத்தா ரிம்மூன்றுஞ் சிறப்பெனினு
மனவணிய வியாபார வகைபொதுவா மேற்கொள்ளு
மினவணிகர் திருவீதி யிந்திரைவா ழுத்தாணி (கூங)

உலகுபல பெருஞ்செல்வர்க் குவமனுரை தனதனிதி
மலரிவ்வூர் வணிகரிலோர் மகப்பணிக்கு மொவ்வாதால்
விலகுமவன் றன்னையுவ மேயவள வினினுமிவர்
நலனுணர்வார் புகலாரே னவிற்றுவதெங் கிவர்பெருமை (கூச)

வருபொருளோர் முந்திரியின் வரையெனினும் பராமுகமா
யொருவவிடார் கோடியினீட் டுவர்மறையா யொருகோடி
பொருளெனினு முந்திரியிற் புன்மையதென் றேநாளுந்
திருவருட்சுந் தரநாதன் றிருப்பணியா திகட்களிப்பார் (கூரு)

பொதுச்சிறப்புத் தொழிற்குயிரிற் புகல்வேத சிவாகமநூற்
பொதுச்சிறப்பு முறையோதிப் பொருள்சிவனே யெனவுணர்ந்து
பொதுச்சந்தி தனிச்சைவ பூசனைமுற் புரிந்திறைவன்
பொதுக்கருணை சிறப்பருளாய்ப் போந்துதவப் பெற்றுவப்பார் (௯௬)

அம்மையே யென்றழைப்ப வடுத்தாற்போற் றிசைப்பாட்டி
மும்மையா லுலகாண்ட மூர்த்தியிலை யென்னுத
மெய்ம்மையியற் பகைநீதி கலிக்கம்பர் வெண்காட
ரெம்மையா ளுறப்போந்த விருந்தவச்சீர்த் திவர்குலமே (௯௭)

## இராசவீதி

முன்னவர்பின் னவராயு முன்னவர்மு னென்னவரு
மன்னுறுதத் தம்மரபின் வழுவறநன் கொழுகியா
னின்னருள்சார்ந் தூபச்செலுத்தி யிடர்நீக்கு திடன்மேற்கொ
ணன்னாபுரி மன்னவர்த நலத்ததுசீர் சொலத்தகுமே (௯௮)

மன்னர்வலி யாவையுந்தெய் வத்திறன்மு னில்லாவம்
முன்னுவலி மாதேவன் முன்னருரு வென்றான்று
ஞன்னுசப ரியையேதம் முயிர்க்குறுதி யெனப்புரிவா
ரின்னர்முனந் தெய்வவலி ழற்றெய்வவலிதான் றலையெடுக்கும் (௯௯)

திருஞான சம்பந்தர் திருவருள்கூர் நெடுமாறர்
திருமானி யார்நம்பி திருத்தொழர் புகழ்ச்சோழர்
திருவார்செங் கட்சோழ ரிடங்கழியார் செய்யமனு
திருமுறைகண் டாரனபா யரைமுனரித் திருக்குலத்தோர் (௧00)

மறைமுறைநாற் சாதியான் மாலயனிந் திரனெனுமம்
முறையுறுசத் திரியமாஅன் முழுதுலகோம் புதன்முக்க
ணிறையருளாற் றுங்குறப்பெற் றிவராச ருருவாயித்
தறைபுரகது மெனிலினியாஞ் சாற்றுவதெங் கிவர்பெருமை (௧0௧)

## வேதியர்வீதி

பிரமன்முகத் தினிற்றோன்றிப் பின்னவர்மு வரையுந்த
முரிமைபெறு சகோதரரென் றுறுகனிட்ட முறைபேணி
விரிமறையோ துறலோது விததன்முத லாறுதொழின்
மருவியுயிர்க் கிதமேசெய் மறையவர்வீ திகண்மலிவ (௧0௨)

மகம்வளர்ப்பார் மறைவளர்ப்பார் மகிவளர்பைங் கூழ்வளர்ப்பார்
சகம்வளர்ப்பார் புரவலர்கோ றனைவளர்ப்பார் மனைவளர்ப்பார்
நகம்வளர்பார்ப் பதிபாக னகைவளர்சே வடிக்கன்பே
யகம்வளர்ப்பா ரருள்வளர்ப்பா ரறிவரிதிங் கவர்பெருமை (௧0௩)

காழிமணி சண்டேசர் கலையர்பசு பதிபூசல்
வாழிநமி நந்திசோ மாசிசிறப் புலிநக்கர்
சூழிசையப் பூதிசிறுத் தொண்டர்கண நாதரொடு
பாழிமறைப் பந்தருமா பதியாதத் தருமரபோர் (௧0௪)

### ஆதி சைவர் வீதி

பிரமனிலு நாற்படிமேற் பிறங்கியரு மறைக்குயிராய்ப்
பரவுசதா சிவமுகோஒற் பனசில ராயுலகின்
மரபினிறுற் சாதியர்க்கும் வயங்குசிவ தீக்காதி
தருமதிகா ரப்பெருமைச் சிவத்துவிசர் குலந்தழைக்கும் (௧௦௫)

எனுஅதியான் மனையாதி யினைத்தேக காரணத்தை
யெனுஅதியா வையுநீத்த் திருந்தவத்தோர்க் கருள்சிவனே
[illegible]சைவ னவற்களுக்க ராயென்று மொருவாநீந
னுதிசைவ ரிவர்பாற்றே னையரிவர்பாங் கருள்பெறுவோர் (௧௦௬)

மறையவர்மா சைவர்புர வலர்வணிக ரனுசைவர்
தறைவளர்சூத் திரரவாந் தரசைவ ரென்றேது
[illegible]றசிவசம் பந்தநல நிகழ்சைவத் திருப்பெயர்கள்
பெறுதலிவர் சிவதீக்கை பேணியரு டலினன்றே (௧௦௭)

தம்பொருட்டுஞ் சகமனைத்துந் தரும்பொருட்டுஞ் சபரியைசெய்
தும்பருநாம் புவனியிற்போ யுதியாமை வறிதேநாள்
வம்புறலென் னெனப்பரிந்து வந்திவட்பூ சித்துய்வா
னிம்பருள சிவாலயமெல் லாம்விளக்கி யின்புறுவார் (௧௦௮)

சிற்றறிவோ ருரையொதுக்கி மறைப்பொருண்மெய் சிவாகமமா
முற்றறிவோ னுரையாலம் முதல்வனுமா பதியேயென்
றுற்றுணர்ந்தே னையபசுவா மும்பர்மத வம்பொழியத்
தெற்றெனச்சுத் தாத்துவித சித்தாந்த முறைநிறுப்பார் (௧௦௯)

உலகுயுமா சிவனடி யொளிர்கிழலை யழைத்திடப்போந்
திலகியசுந் தார்சடைய ரிசைஞானி புகழ்த்துணையா
ருலகுயமுப் போதுமா னுருத்தீண்டு திருத்தொகையோ
ரிலகுமரு ணந்திமுனே ரிவர்குலத்தி னவதரித்தோர் (௧௧௦)

மறைமுறையா யினும்பசுவின் வயைகொண்மகம் விழையாதம்
மறைமுதல்வ னதன்பொருளே வடித்தருள்செய் சிவாகமத்தின்
முறைசெய்சிவாக் கினிவளர்த்து முப்போதுந் திருமேனி
முறைதீண்டி மகிவளர்ப்பார் முதுசிறப்போ தநரெவரே (௧௧௧)

### திருமடாலயங்கள்.

ஒன்றுணர்வா னிரண்டறமூன் றோர்ந்தகன்று நாநெறியி
னின்றெழுத்தைந் தெணியாறு நீத்தெழுபெண் குணத்தொன்பா
னன்றுருவா யவைகடந்த நாதனையே பத்தரா
யென்றும்விழைந் திருந்தவஞ்செ யிருந்தவர்வாழ் மடங்கள்பல (௧௧௨)

திருவருள்சேர் குருவருளாற் சிவசமயப் பிரவேசத்
திருவருளுந் தீக்கைபெறீஇச் சிவாலயா தியிற்புந்து
திருவலகு திருமெழுக்குத் திருவிளக்குத் திருமாலை
திருவருட்பாச் சிரவணமுற் செய்தவத்தோர் மடங்கள்பல (௧௧௩)

---

§ நலன்—ஆதியெனப் பிரிக்குக.

சமயவிசே டங்கொடுபூ சனைத்திரவி யம்முறைசேர்த்
தமைதருமைஞ் சுத்திபுரிந் தகம்புறமு மருவுருவ
நிமலசதா சிவார்ச்சனையி னினைப்புமனுத் தொழில்வழுவார்
தமமறச்செய் புத்திரராந் தனித்தொண்டர் மடங்கள்பல. (௧௧௪)

ஆதார மோர்ந்திடைபிங் கலைசுழுனை யாய்ந்திரண்டிற்
போதாமற் பிராணனடுப் பூரித்து மூலவனன்
மீதார விந்தமுதார்ந் தகத்தினரு மேனிநினைஇ
மாதேவ னுருப்பெறுஞ்சா தகயோகர் மடங்கள்பல (௧௧௫)

புறமிதுமற் றகம்புறமீ தகமிதென்றோர் போதமற
வுறுசரியை கிரியையோ குவைகடந்து சிவமயராய்
நிறைசிவமே நிகிலமுமா நிதரிசன நிரந்தரராய்ப்
பெறலரிய சிவஞானப் பெரியவர்வாழ் மடங்கள்பல (௧௧௬)

அருமறையின் கிடைகள்பல வதன்றெளிவாஞ் சிவாகமச்சீர்
பரவுறுஞா னாலயங்கள் பலமகேச சுரத்தொடர்பே
விரவியமா கேசுரபூ சனைச்சாலை விப்பிரருண்
மருவுறுசா லையுமேனை வளரறச்சா லையும்பலவால் (௧௧௭)

அரணமலன் றளிதிரும டாலயங்க டொறுநாளு
முரியசிவ புராணாதி யோதுநர்கேட் குநரங்குப்
புரியகத்தொண் டரைமேலும் புகுவாரைச் சிவனெனவே
திரிவறக்கண் டமுதளிக்குந் திருக்குலத்தோர் பெருக்கதுகம் (௧௧௮)

## திருக்கோயில்.

இன்னனபல் லணிவீதி யாவையுஞ்சூ ழிதழ்ச்செறிவின்
மன்னலினிந் நகரவனி மகளிதய கமலமதே
யன்னதனாப் பட்பொகுட்டே யடைந்தவர்கண் டவராதிச்
சென்னெறியோர்க் கனாதிமலத் திருக்கோயித் திருக்கோயில் (௧௧௯)

சிவார்ச்சனையில் வீதிகோத் திரமதின்மூன் றியற்றுகெனச்
சிவாகமஞ்சொன் மனுமுறையே திகழ்தரவிங் கமைந்ததெனத்
தவாதொளிருஞ் செம்பொன்னாற் சமைந்தரம்வா னால்கெல்லாந்
தவாதளந்து சென்மதில்கள் சார்தருமத் திருக்கோயில் (௧௨௦)

இறைபுரிநிக் கிரகத்துக் கேற்புறவில் லங்கமாய்க்
குறுகினமுன் னீண்டுயர்துங் கோபுரமே†லனுக்கிரகத்
துறையிலிங்க தூலமாய்த் தொழப்பெறுது மெனமேருப்
பொறைபலவாய்ப் புக்கெனக்கோ புரங்கண்மருஉந் திருக்கோயில் (௧௨௧)

அடுக்கடுக்காய் மேன்மேல்வா னமருலகத் தமரர்கள்வ்
வடுக்குலையா துலகொடும்போந் தயிராவ தேச்சுரன்று
ளடுத்திறைஞ்ச வமயமுறூ தவற்சூழ்ந்து நிற்றலென
வடுக்குதிரு மாளிகைச்சோ வடுத்தமருந் திருக்கோயில் (௧௨௨)

---

† கோபுரமாயிருப்போமானால் உயர்தும் எனப்பொருள் கொள்க.

வேதவொலி சிவாகமச்சீர் விளக்குமொலி தமிழ்வேத
கீதவொலி மெய்கண்ட சித்தாந்த சிவஞான
போதவொலி சிவநாமப் புனிதவொலி பல்லியச்சீர்
கீதவொலி முதவென்றுங் கிளர்தருமத் திருக்கோயில் (கஉங)

அனவரத மகத்தொண்ட ராதியளப் பிலர்மேனிப்
புனிதவள நீற்றொளியாற் போற்றுறுபல் பேற்றொலியா
லினியசிவா னந்தவெள்ள மிடையறா தெய்துநர்க்குத்
தினமுதவு திறங்காட்டித் திகழ்தருமத் திருக்கோயில் (கஉச)

## வேறு

இன்னதிருப் பெருந்தோட்டத் தெழிற்கோயி லத்தீச மென்று வாக்கின்
மன்னவரீற் றீச்சுரப்பேர் வரிசைநக ரிராறின்மேல வைத்தோ தற்றாற்
றன்னனைய விதுதுவா தசாந்ததல மேயாஞ்சுந் தரநா தப்பேர் [யாரே
துன்னுறக்கொண் டிறையுமிது துலக்குமெனி லிதன்பெருமை சொல்வார்

ஆக திருவிருத்தம் உசசு

திருநகரச்சருக்கம் முற்றிற்று.

---

# நைமிசாரணியச் சருக்கம்.

மாமரு கமல மேய வானவன் சவுன காதி
யாமரு முனிவர் நோற்றற் காமிட மருள்கென் றேத்தத்
தேமரு தருப்பை நேமி செலுத்திடச் சென்று தங்கு
நாமரு கார ணத்தா னைமிச கான மென்ப (க)

இத்தகு கானத் தென்று மிருந்துநோற் றிடுவோர் ஞான
வித்தகர் சவுன காதி மேதகு முனிவ ரென்ப
வத்திரு முனிவர் வேத வாகம புராண மாதி
மெய்த்தகு நூன்முற் றோர்ந்து மெய்ப்பொருட் டுணிவு கண்டோர் (உ)

சரியைநற் கிரியை யோகஞ் சார்தரு ஞான நான்கே
கருதரும் பலராய்க் காய்ாய்க் கனியதாய்க் கவினுற் றுற்போற்
றருபரம் பரையின் மோக்கந் தருமெனக் கொண்டோர் தாசர்
கருதுபுத் திரரே சாத கப்பெயர் சீகப்பேர் வாய்ந்தோர். (ங)

முற்றுணர் ஞான வாய்மை முதிர்ச்சியின் றெளிவா லீசன்
பொற்றுண ரிதழி வேணிப் புராரிகா மாரி நீல
விற்றுணர்க் களத்த னேமெய்ப் பதியெனு மெய்ம்மை தேர்ந்து
மற்றுணர் நெறிப்பு காது வழிபடு நியம சீலர். (ச)

மற்றவர் நியதி யாக வைகறை யெழுந்து நாண
முற்றிவெண் ணீறு கண்டி முழுதணிந் தைந்தெழுத்தே
பற்றிநன் முறைசெ பித்துப் பாவமுக் கரண மொன்றாய்க்
கற்றைவே ணியற்பூ சித்துக் கவின்சிவ மகங்கள் செய்வார் (ரு)

அனையவர் சைவ வாய்மை யருணெறி நிற்குஞ் சீலந்
தனையுணர்ந் தாங்குச் சூத தபோதனன் சார்ந்தா னன்றான்
வினையறு பூதி கண்டி விளங்குமெய் வேடங் கண்டார்
நினைவினு முந்திச் சென்றார் நிலனுறப் பணிந்தெ ழுந்தார் (௬)

அருந்தவர் புராண மாதி யருங்கலை யமுதே யென்று
மருந்தவன் வதனநோக்கி யடிகளீங் கணுக முன்னா
ளிருந்தவம் யாது செய்தோ மென்றழைத் தெய்தி யாங்க
ணிருந்தவண் டவிசி னேற்றி யிறைஞ்சின ரெழுந்து நின்றார் (௭)

நின்றிடு சவுன காதி நிமலமா தவரைச் சூத
னன்றுவந் திறைஞ்சி யோது நான்குவே தாக மாதி
தொன்றுள நான்முற் றோர்ந்தீர் சொல்லுமா பதியே வாய்மை
யொன்றுறு பதியென் றோர்ந்தீ ருதுகடைப் பிடியாக் கொண்டீர் (௮)

உம்பெரு மகிமை யிந்த வுலகெலாம் பரந்த வும்மை
யிம்பரோர் காணு மார்வ மீர்ப்பவிங் குற்றே மென்றா
னம்புய னனையார் கேட்டாங் கன்புறீஇ முகமன் கூறிக்
கம்பமின் மனத்துத் தூயோர் வினவொன்று கடாவ லுற்றார் (௯)

நான்மறை வகுத்தந் நூலி னவிலுரை தெருள்பு ராணந்
தான்மலி யீரொன் பானுஞ் சாற்றிய முனிமா ணாக்க
மேன்மைகொள் சூத நாத விளம்புமப் புராணம் பல்பே
ரான்மலீஇச் சிவன்மா லாதி யவர்சிறப் பறையு மென்ப (௧0)

வேறு [னையர்க

இவ்வகை புராணம் பதினெட்டுஞ் சிவனுக் கிசைத்தல்போன் மாற்குமே[மற்
றொவ்வொரு வருக்குந் தலைமைதந் துரைத்தா லுமாபதி யொருவனே பதி
றெவ்வகையோரும்பசுக்களென்றான்றோரியம்புநூற்பொருட்டுணிபென்னாந்
திவ்விய சுருதி யாகம புராணச் செம்பொரு ளம்புறத் தெளிந்தோய் (௧௧)

சங்கைமுற் றகல வங்கையா மலகத் தன்மையி னுண்மையோர்ந் துய்வா
னெங்களுக் கருள்கென் றிரந்தனர் சூத னியம்புமப் புராணங்கண் மறைக
டிங்களங் கண்ணி யோன்புகன் றனவத் திருமறைப் பொருள்விளக் குபப்பி
ருங்கண மேயப் புராணமே லிரண்டு முறைபொருள் வேற்றுமை யுறுமோ ()

அம்மறை களும்பற் பலர்க்குமத் தலைமை யறையுமாங் காங்குப சாரத் [ழில்க
தெம்முறை யெனின்மா லயன்முத லியர்பா லீதலோம் புதன்முதற் றொ
ளும்மறை மையுந்தந் தவர்க்குல கடங்கி யுய்வகை யரனுரைத் ததுவே [ன்ம்
யிம்முறை யரச னமச்சனை யானே யிவனெனப் பிறர்க்கிசைத் திடல்போ.

மறைகளாங் காங்குத் தியேயவா சகமு மாபதி யொருவற்கே வழங்கு
மிறைமையா னோரா யணபரோ தியாதா வென்றலா லிச்சொலே பிறர்க்கு
மறைதலாற் றியேய சத்தம்வே றெவர்க்கு மாண்டுறா மையினுபக் கிரம
முறையுப சங்கா ரங்களி னனைய முதல்வன்சீ ரேமுழங் குதலால். (௧௪)

திருமறைத் திரயச் சென்னியா மதர்வ சிரசின்மேற் சிகையினிற் சிவனே
யொருவனே தியேயன் சிவங்கா னிதன்மு னுரைத்திடப் பட்டமா லாதி
வருசுரர் தியேய ரல்லரா தலினால் வர்ச்சிக்கப் படுவர்முற் றிற்றென்
றுரிமையி னுங்கு முடிந்தது முடிக்கு முத்திதந் துரைத்திடு சிறப்பால் (கரு)

மும்மறை நடுவா மெசுர்மறை நடுவின் முழங்குயக் காண்டத்தி னடுவி
லிம்மறைப் பொருடேற் றுருத்திரத்திடையே யிவைக்கெலாஞ்சீவரத்தினமா
யம்மையோர் பாகன் றிருப்பெய ராய வைந்தெழுத் தேயிலங் குதலாற்
செம்மறை யெவைக்குஞ் சம்மதஞ்சிவனே திகழ்பசு பதியென றேற்றம்.கசு

ஆதலின்மறைகள் பற்பலர்க்கிறைமையறையினு மெய்ப்பொருள் சிவனென்
றோதலினதுபோ லுபப்பிருங் கணமா யுள்ளவிப் புராணமு மாறுங்
காதலி னுங்காங் கரியயற் கிறைமை கழறினுந் துணிபொருள் சிவனே
சாதலின் னுயிர்கட் கொழித்தரு ளுக்கந் தருபசு பதியெனச் சாற்றும்(கஎ)

அன்னதிங் கெய்வா றெனிற்பசு பதிக்கே யையிரு புராணமிக் கிலங்கி
மன்னுசீ ரிதனு லியற்றின்மான் முதலோர் மாண்சிவ லிங்கபூ சனைசெய்
துன்னுபே றடைந்த நலந்தலந் தோறு மொளிர்தலான் மால்புரா ணாதி
யின்னரன்சிறப்பு மிலங்கலாலனையர்க்கிவன்பணிவிசைத்திடாவிதனால்(கஅ)

கூறுமீ ரொன்பா னுஞ்சிவ முதலே கொண்டனவென் றனன் சூதன்
றேறினர் சவுன காதிய ரின்பந் தேக்கின ருக்கமேற் றிகழ்ந்தார்
வீறுசீகாழி மணியுந்தென் மறையின் விதந்துரு தன்னெலி மாலைக்
கேறுடை முதல்வ னேமுத லென்றே சொல்லென விசைத்தனிலக்கும் ()

ஊக்கமேற் கிளர்ந்த சவுனகாதி யுறுவரவ் வுறுவனு னனத்தை
நோக்கிநின் றடிகே ளிக்கருஞ் சங்கை நூக்கினன் றருளினை சென்னி
மீக்கொளு மனைய சிவபுரா ணத்துள் விளங்குசீர்க் காந்தத்து விமலன்
பேர்க்கொள்சங் கிதையிற்சுவேதகானனத்தெம் பிரானருண் மான்மியம்பேசி

வேறு.

அன்ன தன்பினர் யோகநா தன்சிறப் பறைந்தாய்
பன்ன ரும்முக மிடையறா துரைப்பினும் பரம
னன்னர் மான்மியம் விழைய்மகிழ் நசைமிகு மெந்தா
யென்ன வேண்டினர் செவிக்கொடு சூதன்மே லியம்பும் (உக)

அன்பு மாருட் பெருக்கமு முருக்கமு மளவா
வின்பு மிக்குள நீர்விழைந் தெனைத்தொடக் கிதுதான்
நன்பு விக்கொரு வைப்புமாய் நயக்குமெவ் வெவர்க்குந்
துன்பு நீக்கியின் பளிப்பதாய்ச் சொலச்சொலச் சுகமே (உஉ)

எனக்கு நல்கிடு மாதலா லியம்புவன் கேண்மின்
முனைப்பு கன்றவெண் காட்டுமான் மியத்தினு முதுசீர்
தனக்கு ரைத்திடு சான்றதோர் தலமுள ததுதான்
மனக்கு றும்பொழித் திட்டகா மியமெலாம் வழங்கும் (உ௩)

என்று சாற்றியப் பிரகதுய் யானத்தி னிலங்குங்
கொன்றை சூடிய வாதுசெய் குஞ்சரத் துணைத்தாண்
மன்றன் மாமல ரொப்பிலா முலையுமை மலர்த்தா
ளென்றும் வாழுயி ராவதே சன்கழ லிறைஞ்சி. (௨௪)

அனைய மாதவ ரானன நோக்கியந் தணர்கா
ளினிது ரைக்குவன் றிருப்பெருந் தோட்டத்தத் தீச
மெனமி குத்தசீ ருலகெலாம் பரவெழி லுமந்
தனைவ கித்ததத் தலமதன் மான்மியந் தன்னை. (௨௫)

வேறு.

தன்னடியே குறித்தெவருங் குருத்துவங் கொண்டுவப்பவருடந்து கல்லா
லின்னடிவாழ் குரவனுக்குங்குருவாகிச் சிவகுருவென் றிலங்குஞ் செவ்வேள்
பொன்னடிதாழ்ந்தெந் நாளும்புரைதபத்தோர்ந் துளமலயப்பொருப்பன்முன்பு
மன்னடிதாழ்மாதவர்க்குவழங்கினனவ்வாறுமக்குவகுத்துமென்றான்.

நைமிசாரணியச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் ௨௭௨

---

## தலமகிமைச் சருக்கம்.

சந்தனந் திகழ்ந்துசெந் தமிழ்ம ணந்துசி
ருந்தன மலயமென் றோது வெற்பின்வாழ்
கந்தன தருள்பெறு கருணை மாமுனி
தந்தன மெனக்கொண்மா தவர்க்கு ரைப்பனால். (௧)

பூமியிற் பொன்மலைப் புகல வாசியி
லேமிகு நாவலந் தீவி லெண்டகு
காமிகு காவிரி வடக்கின் கண்ணது
மாமரு சீர்ப்பெருந் தோட்ட மாநகர். (௨)

காசியிற் சிறந்தவெண் காட்டிற் கீசனை
தாசையி னன்னதற் கைங்கு ரோசத்தட்
பேசுறு தலங்களுண் முதன்மை பெற்றது
வாசவன் பணிபெருந் தோட்ட மாநகர். (௩)

வரமிகு முதீசியின் முல்லை வாயிலு
முரமிகு கீழ்த்திசை யுததி தென்றிசைப்
பரனமர் பல்லவ னேசம் பச்சிமத்
தரனமர்ந் தருளுநாங் கூரு மாங்குற. (௪)

நாப்பணி லுயக மணியி னண்ணுமால்
சேப்பா னுயிர்க்கெலாஞ் செல்வ நல்கிய
மீப்பொலி காதலின் வீற்றிருந் தருண்
மாப்பெருந் தோட்டத்தத் தீச மாண்பதி. (௫)

இயல்பினிற் பொன்னிநெற் கிலங்கி யுத்தரத்
துயர்மணி கன்னிகை யுற்றுஞ் சேறலா
னயமிகு முபயகா வேரி நாப்பணே
யுயவருள் பிரகதுத் தியான மோங்குமால். (௬)

இத்தலந் திருவெண்காட் டெல்லை யாவினு
முத்தம மாகுமீ சானத் தோங்கிடு
மத்தகு சிறப்பினு லவ்வெண் காடுசெய்
மெய்த்தகு பயனினு மிக்கு நல்குமே. (௭)

இதன்பெருஞ் சீர்த்தியை யிசைப்ப தெங்ஙன
மிதன்பெயர் நினைத்திடி னுரைப்பி னெய்திக்கா
ணிதம்பெறின் வசித்திடி னியம்பு நாற்பதத்
திதம்பெற றிண்ணமே யிருந்த வத்தினீர். (௮)

வேறு.

தலனிலுயர் திருவெண்காட் டிறையீ சானத் தலனிதன்சீ ருள்ளபடிதான் முற்றோர்ந்த, நலனிதனு லித்தலங்கா ணாசைமீக் கூர்ந்து நவில்பஞ்சக் குரோசத்து ணண்ணப் பெற்ற, பலதலஞ்சென் றுறுவமெனும் வியாசங் காட்டிப் படர்ந்துமையோ டாண்டுதோறும் பரிந்து வந்தே, யலகிலுயிர்க் கருடீர்த்த விழாவுங் கொண்டாங் கமர்ந்தருள்வா னெனினிதன் சீரளப்பார் யாரே. (௯)

வேறு.

இயலாச் செயலை விரிக்காம லிம்மட் டமைதல் பழுதன்றே
யயலோ ரெவர்க்கு மித்தலச்சீ ரகலம் புகல வரிதேயென்
றுயவே யுலகந் தமிழ்விரித்த வுறுவ னுறுவர்க் குரைத்தானப்
பயனுற் பகர்ந்தேன் சிறிதறிந்த படியென் றுரைத்தான் பகர்சூதன். (௧0)

தலமகிமைச் சருக்கம், முற்றிற்று. (ஆக திருவிருத்தம் உ௮உ)

## தீர்த்தமகிமைச் சருக்கம்.

தலத்தின் மகிமை யொருசிறிது சாற்றி னேமத் தலத்தீர்த்தக்
குலத்தின் மகிமை யினுஞ்சிலவே கூறக் கேண்மி னென்றுலக
நலத்தின் மகிமை யோர்ந்துய்ய நன்னூல் பன்னூ றந்துபுலப்
பலத்தின் மகிமை வென்றகடோற் பவமா முனிவன் பரிந்தருளும். (௧)

தீர்த்த மிக்க வித்தலத்திற் றிகழ்ந்து மருவப் பெறுஞ்சிறப்பே
கூர்த்த மேன்மை தரமேலுங் குலவு மகிமை பலவாய்ந்த
தீர்த்த மோரைந் துளமேலுந் திரைவா ரிதியுஞ் சேர்ந்தருளே
கூர்த்த தீர்த்த மோராறு குலவ விளங்கும் பெருந்தோட்டம். (௨)

ஐந்து முகத்தோ டதோமுகமொன் றுக வாறு முகமேயெண்
ணிந்த வுலக மவைக்குவண்மை யியம்பு மிதுவோ பிரணவத்தோ
டைந்தக் கரமே போன்மென்ன வருட்சீர் நோக்கி யறைகுவரே
லிந்த வளங்கொள் சிவதீர்த்தத் திசையாங் கூறற் கிசையுமே. (௩)

இவையோ ராறுக் குறுபெயர்தாம் யாவென் றியம்பி னவையிசைக்கேன்
சுவைகூர் போதா யனதீர்த்தஞ் சுமுக தீர்த்த மிந்திரப்போர்த்
திவிய தீர்த்த மணிகன்னி தீர்த்த மயிரா வததீர்த்த
நவைதீர் வருண தீர்த்தமா நாமஞ் சொலினு நலந்தருமே. (௪)

முன்சொல் போதா யனதீர்த்த முனிவ னயிரா வதநாதன்
றன்சந் நிதியி லுறுமதுமுன் சார்ந்த போதா யனமுனிவ
னின்செ லருளி யாதரிக்கு மிறைவன் பூசைக் குரித்தாகத்
தன்செய் கையிற்கண் டப்புனலாற் றனீ ராட்டி யின்புற்றான். (௫)

புனித சைவ சிகாமணியாம் போதா யனமா முனிகண்ட
தெனிலித் தீர்த்த மாண்பினிரா மிசைப்ப தெவன் சுக் கிரவாரத்
தினநன் னியதி யுடன்மூழ்கிச் சிவையைச் சிவனைத் தெரிசிப்போ
ரினிய மகப்பே றுதியெலா மெய்தி வாழ்வ ரிதுவாய்மை. (௬)

காண்பார்க் கருளும் வாதாடு கணேசா லயத்தென் கிழக்கணித்தாய்
மாண்பார் கணேசப் பெயர்த்தீர்த்தம் வைகும் யோக நாதமுனி
சேண்பார் பரவு மக்களிற்றின் செய்ய பாதம் பூசிப்பான்
பூண்பார் சுமக்கு மகிசுமுகப் புனித னருளான் முன்கண்டான். (௭)

துன்னு மந்நீர் தனிலெழுந் தோயக் கிடைப்ப தரிதுமுறண்
மன்னு தவததார்க் கலந்தனின் மதியந் தோறுஞ் சதுர்த்திகளி
லுன்னி மூழ்கி னப்பலனே முயரா வணிமா சதுர்த்தியிற்றோய்ந்
தன்ன கணேசன் றனைப்பணிவோர்க் கருளும் பலனே வளப்பரிதே. (௮)

இதனின் மேற்கிந் திரநீர்வெண் காட்டினிறையு மாசிமகத்
திதனிற் பரவுந் தீர்த்தவிழாக் கொண்டாங் கருளு மிந்நாளி
லிதனிற் றோய்ந்தெம் பிராற்பணிவோ ரிகவாழ் வினைத்து நிறைதரப்பெற்
றிதனிற் பொலியுஞ் சுவர்க்காதி யின்பு முவர்க்கு மின்புறுவார். (௯)

வேறு.

இப்பெருந் தீர்த்த மேற்கி லெவ்வுல கத்தி னுக்கும்
வைப்பெனப் பொலிந்து வைகு மணிகன்னி கைப்போர்த் தீர்த்தஞ்
சிற்பரன் கல்லா னீழற் றிகழ்தரு யோக நாத
னப்பெரு முனிவர்க் கந்நா ளருளினாற் கண்டா னம்மா. (௧0)

சீவர்தஞ் செயல்கட் கெல்லாஞ் சிவச்செய லனந்த கோடி
பாவன மதிக மென்ப பகரவும் வேண்டு மேயோ
வாவன யோக நாத னருந்தவர்க் காகக் கண்ட
சீவன மேன்மை யாரே தெரிந்தினி திசைக்க வல்லார். (௧௧)

மாமணி கன்னி கைக்குண் மன்னவா சியினில் வைகுந்
தேமலி சிறப்பி னேங்க யிராவத தீர்த்த முன்னாட்
காமரு வலாரி வேழங் கண்டு தோய்ந் தன்னீ ரானத்
தூமணி கண்டன் பூசை துன்பறப் புரிந்த தன்றே. (௧௨)

காவிரி கல்லா னீழற் கண்ணுத றன்னை நோக்கி
யாவலி னேற்ப வன்று னழைஇமணி கன்னி கைக்குண்
மேவெனு விடுத்து வேலை வேந்தனை யேவ வன்னோன்
பூவுயப் பெருந்தோட் டத்துப் புகூஉமணி கன்னி போந்து. (௧௩)

அப்பெருந் தடத்துட் பூர்வத் தடுத்துநின் றனைய பொன்னி
யைப்புணர்ந் தின்ப மேவி யதுமுதற் றடாக ரூபத்
திப்பெருந் தோட்டத் தென்று மிலங்கிடு முவலொ ழித்தித்
திப்பிய வருண தீர்த்தச் சிறப்பினி யுரைப்ப தென்னே. (௧௪)

இனைவுறீஇச் சகரர் தொட்ட விடத்துவர் மயமாய் நிற்குங்
கனைகடல் பற்ப லாறுங் கன்னிய ரோடு சேரும்
வினை யொரீஇப் புனிதை யாங்கா விரியையே தழீஇயு வர்ப்புத்
தனையொரீஇ யனக மேயாய்த் தங்குமேற் சாற்ற வற்றே. (௧௫)

இத்தலத் தினிலு தீசி யவாசியென் றிருபாற் பொன்னி
நத்துறப் புகலாற் றீர்த்த நாலிரண் டாகி யென்று
மத்த னென்கு ணங்கள் போல வனைத்துயிர்க் கருளு மேன்மை
யெத்தகை யோரு நேர்கண் டெய்துவ ரின்பே யென்றும். (௧௬)

இத்தரு சிவதீர்த் தங்க ளினிதுவந் தடுத்து மூழ்கி
யுத்தமி யொப்பி லாத முலையுமாம் பிகையை யெங்கள்
சத்தயி ராவ தேசன் றனைப்பணிந் திட்ட சித்தி
முத்திபெற் றுய்ந்து ளோர்தந் தொகையுநா மொழியொ ணாதே. (௧௭)

வேறு.

என்றருட் குறுமுனி யிசைத்த தோர்ந்தனர்
துன்றிய வுவகையங் கடலிற் றோய்ந்தனர்
தொன்றுறு முனிவா ரென்று சூதனை
றொன்றிய மாதவர்க் குவந்து ரைத்தனன். (௧௮)

தீர்த்தமகிமைச் சருக்கம் முற்றிற்று.

ஆக திருவிருத்தம் ௩00.

## மூர்த்திமகிமைச் சருக்கம்.

உலகெலா முய்வான் சச்சி தானந்த வொளிப் பிழம்பே
யிலகுசே யுருவாய்ப் போந்த வெந்தைகா முறுமா ணைக்கன்
றலைமைசார்ந் திலங்கு கும்ப சன்னெனுந் தவத்தோன் மேலும்
வலமுனி வரர்க்கு மூர்த்தி மகிமையும் வழங்க லுற்றான். (௧)

இந்தனத் தங்கி பாலி னிழுதென மறைதந் தெங்கு
மந்தணப் பொருளாய் நான்கு மறைகளுந் தொடரொ ணாதா
யந்தரத் தயன்மா லாதி யமரர்க்கு மறித றேற்றாச்
சுந்தரச் சோதி யாகிச் சுத்தமாய் நித்த மாகி. (௨)

அருவமே ரூபா ரூப மவைகடந் தகண்ட மாகி
நிருமல மாகி யொன்றாய் நிகிலமு நிறைந்து நிற்கும்
பொருள்சிவ னன்றே யன்ன பூரண னுயிர்கட் கின்பே
தருதிரு வுளங்கொண் டாவி தறுகா ணுதி சார்ந்த. (௩)

தன்மையால் யாமு மாங்குத் தகுக்கொடு சார்ந்தா லன்றி
நம்மையோர்ந் துய்யும் பான்மை நண்ணிடா வெனக யந்த
செம்மையாற் சிவலிங் காதி திருவருண் மேனி தாங்கி
யின்மலி கோயில் கொண்டு வீற்றிருந் தருளு மன்றே. (௪)

அவ்வகை தலங்க டோறு மவிர்சிவ லிங்கந் தன்னு
ளிவ்வருட் சுந்த ரேச விலிங்கமிக் குயர்ந்த தாகு
மெவ்வகை யெனின்முத் தேவ ரூபமென் றியம்பும் போதித்
திவ்விய மூலந் தன்னிற் றிகழ்தலுஞ் சான்ற மென்க. (௫)

ஆதியி னடுவி லந்தத் தயனரி யாரு மென்றே
யோதுநூல் சிவலிங்கத்தி னுருவினை யுதுதா னேனை
மேதகு மூர்த்திக் கெல்லாம் விளம்புநூ லளவே யீண்டுப்
போதியுந் தேற்று மிந்தப் புண்ணிய மூர்த்திக் கம்ம. (௬)

மூவரு மாகி மூவர் முதல்வனு மானோன் றேவ
தேவனே யெனுநூல் வாய்மை தெளிதா வித்தலத்துச்
சேவமர் தருமத் தீச சிவலிங்க மூர்த்தி தேற்று
மூவராந் தாரு மூல முதல்வனாய் முளைத்தெ ழுந்தே. (௭)

அருண்மிகு மச்சு வத்தத் தணியயி ராவ தேச
வொருசிவ லிங்கங் கண்டோ ரன்னைய ருதாங் காணார்
வருபெரு நாமஞ் சொன்னோர் மலந்தெறு கென்று சொல்லார்
திருவுரு நினைவார் மீண்டு செனித்திட நினையா ரம்ம. (௮)

இத்திகழ் சுயம்பு லிங்கத் தின்பெயர் சுந்த ரேசன்
சித்திசெய் யத்தீ சன்றன் றிகழயி ராவ தேச
னத்தருண் மூகோத் தார நாயகன் மௌத்தி கேச
னத்தகு பிரக துத்தி யானேசன் முதல னேகம். (௯)

வேறு.

சதுர னயிரா வதநாதன் றன்பே ரொருகா லேனையதம்
பதியி லபுத்தி பூருவமாய்ப் பகர்ந்தா ரேனு மவர்க்கலகி
னிதிசந் ததிக ளேயின்மை நிறைபல் போக முதலான
வதிக நலங்க ளிம்மையிற்றந் தம்மை யின்பு மருளுவனால். (௧௦)

அருள்கூ ரத்திச் சுரனெம்மா னனவ ரதசா நித்தியனாய்ப்
பொருள்கூர் தாவீற் றிருந்தருளும் புனிதத் திருக்கோ யிற்புகுந்து
தெருள்கூர் திருச்சோ தனிப்பணியே திகழ்கோ மயநீர்த் திருமெழுக்கே
யிருடீர் தவளத் திருக்கோல மேமுன் னுய திருப்பணிகள். (௧௧)

சுடர்மிக் கொளிருந் திருவிளக்குத் தொண்டு திருநந் தனப்பணிதண்
சுடர்புக் கமரு முடிக்கேறத் தொடுக்கும் விரைப்பூந் தொடைப்பணிகள்
சுடர்திக் கொளிரும் திருக்கோயி லுலங்கப் புதுக்குந் திருப்பணிகள்
சுடர்முக் கணன்சேர்த் தளியெங்குந் துதையு நறுந்தூ பப்பணிகள். (௧௨)

அனக னயிரா வதநாத னருள்கூ ரதுல குசாம் பிகைநா
மினிய விழாக்கொண் டெழுந்தருள வெழில்கூர் தரும மால்விடைவா
கனமுன் னவ சலட்சணமாக் கவின்மிக் கோங்க வளரன்பால்
புனித சுவண மணிகளினாற் புனைந்து புரியும் பொருட்பணிகள். (௧௩)

பரவு செம்பொ னவமணிகள் பாங்கா யமைத்துப் பண்புறச்செய்
திரவு பகலா யொளிபெருக விலங்குந் திருவா பரணங்க
ளரவின் மணிமுன் விளிம்பார்த்தி யவிர்பீ தாம்ப ராதியவை
மரபிற் புரிந்து கனிந்துள்ள மகிழ்கூர்ந் தளிக்குந் திருப்பணிகள். (௧௪)

ஆதி யாய பற்பலமெய் யன்பி னயிரா வதநாதன்
சீத வனசத் தாள்பரவிச் செய்தந் துவக்குந் திறத்தினர்க்கந்
நாத னருளும் பெரும்பேறு நாமோ வளக்குந் தரமுடையோ
மோத லரிதாங் கைம்முதிகத் தொருவா றுணர்வா குரமிக்கோர். (௧௫)

இன்ன பரிசான் மேற்சொல்பணி யிவற்றுள் யாதொன் றியற்றினரும்
மன்னு தீர்க்கா யுள்போகம் வருநோ யின்மை வளர்செல்வ
நன்னர் மகப்பே றாதிபெறீஇ நலங்கூர் நரேரந் திரராய்வாழ்ந்
துன்னற் கரிய பேரின்பு முறுவர் கையா மலகமிதே. (௧௬)

என்று புகன்ற னிமாசலை கோற் கிணையென் பதுமுன் னிறைகண்டு
மொன்று களிப்பி னுலகுரைப்ப வொளிரு மலய முனியதுகேட்
டன்று முனிவர் மகிழ்கூர்ந்தார் மேலு மவாவி னொன்று
துன்று சவுன காதியர்க்குச் சூத முனிவன் சொற்றனனால். (௧௭)

மூர்த்திமகிமைச் சருக்கம் முற்றிற்று.
ஆக திருவிருத்தம் (௩௧௭)

## இந்திர சுந்தரச் சருக்கம்

பொன்னுல களிப்போன் வேண்டப் புணரியை யுழுந்த மிழ்ந்து
மன்னிலை நீர தாக்கி யாசமித் தனைய வேந்துக்
கின்னருள் புரிந்தோன் மேலு மிந்திர சுந்தரப்பேர்
நன்னிலைச் சரிதந் தற்சூழ் நற்றவர்க் குரைப்ப தானான். (௧)

மதிநதி யிதழி வேணி மாதொரு பாக னன்பே
நிதியெனக் கொண்டு வாழும் நிறைதவ முனிவீர் காண்முன்
மதிமிகு ரைவதப்பேர் மனுவமர் காலந் தன்னி
னிதியொளி மிகுஞ்சு வர்க்க நிலத்தா சாய வேந்தன். (௨)

தானவர்க் கரசனாய சபாகனு மவுணன் றன்னை
வானவர் சூழச் சென்று வதைத்தயி ராவ தப்போர்த்
தானமிக் கொழுகும் வேழந் தனிலிவர்ந் துவனை வீதி
வானவர் சூழ்ந்து யாண்டும் வாழ்த்துறப் பவனி வந்தான். (௩)

அவ்விடைத் துருவா சப்பே ரருந்தவ முனிவன் போந்து
கவ்விய களிப்பி னாழ்ந்து களிறுகைப் பானை நோக்கித்
திவ்விய வேந்த வீது சிவப்பிர சாத மென்றோர்
செவ்விய கமல மீந்தான் றேவர்கோ னதனை யேற்றான். (௪)

தேவரே யெனினுஞ் செல்வச் செருக்கொன்றே கண்ம றைக்கு
மாவதோ டசுரர்க் கொன்ற வகந்தையு முறிலென் செய்வான்
தேவதே வீசன் சூடுந் திருமலர் களிற்றி ழிந்தே
யாவையின் வணங்கா தேற்றவ் வானைமத் தகத்தில் வைத்தான். (௫)

அனையவம் புயச்செம் பூவை யறிவுகூர் தெய்வ வேழ
நினைவொரீஇப் புழைக்கை கொண்டு நிலத்திலிட் டடியிற் றேய்த்த
தெனையரே யெனினும் போகூ ழிடைப்படி னாளுற் றுலவ்
வினையினீங் குவரே சென்னி விதியையார் விலக்க வல்லார். (௬)

கண்டனன் முனிவர் கோமான் கனன்றுளங் கொதித்து நீல
கண்டனன் முடிப்பு னைந்த கமலப்போ திதனை லாக்க
முண்டென வுனக்களித்தா முடன்பணிந் தேற்றி டாய்மா
லுண்டதோன் மத்த கத்தி லுய்த்தனை யுணர் விலா தோய். (௭)

சிவப்பிர சாத மாய்மைச் சிறப்பொரு சிறிதுந் தேற்றாய்
நிவப்புறுஞ் சுவர்க்க வாழ்க்கை நினக்குற்ற தெவனு லென்னாப்
பவப்பெரும் புணரி யாழும் பாலுனைத் திடிலென் செய்வாய்
தவப்பெருஞ் சிவத்து ரோகந் தானுகர்ந் தன்றித் தீரா. (௮)

ஆதலி னமரர் வேந்த வாற்றுநின் னரசிழந்து
பூதலத் திடையோர் வேந்தன் புதல்வனா யிளங்கா லத்தே
பேதுறீஇ யன்னை தந்தை பிரிவுறீஇப் பன்னாட் டுன்ப
மீதுறு கென்று ரைத்தவ் வேழத்தை நோக்கிக் கூறும். (௯)

மிருகயோ னியிற்பி றந்தும் வேந்தனைச் சார்ந்தாய் ஞானத்
திருவுறப் பெற்றாய் பெற்றுஞ் சிறுவருஞ் செய்க லாத
கருமமிச் சிவத்து ரோகங் கண்டனை யதனாற் பூமி
மருவிநல் லுணர்வி ழந்து வனக்கரி யாதி யென்றான். (௰)

இன்னண மிசைத்த சாப மேய்ந்துள நடுங்கி வானோர்
மன்னவன் கயத்திழிந்து வறுமையுற் றிழிந்தா னையம்
முன்னவன் கழலின் வீழ்ந்து முனிவறே லைய வென்றாப்
பன்னருந் துதியு றுத்திப் பாவியேன் பிழை பொறுத்தி. (௧௧)

அறிவிலாச் சிறியே னென்றெண் றடிக்கடி யிறைஞ்சி னான்பின்
குறைதவிர்த் தாள்கென் றாங்குக் குறுகிய பிருகு முன்னோ
ரெறிகதி ரங்கி முன்னோ ரிரந்துபன் முறையும் வேண்ட
மறிமழுக் கரனைப் பேணி வருதுரு வாசன் கூறும். (௧௨)

முனிவிர்கா ளமரர் காணீர் மொழிந்ததிங் கிவன்பா லுள்ளக்
கனிவினா லன்றி நீதிக் கருத்தினா லுரைத்தி ரல்லீர்
புனிதனெம் பிரான்சே டத்தைப் போற்றுறாச் சிவத்து ரோகந்
துனியனு பவித்தா லன்றித் தொலைவுறா தாத லாலே. (௧௩)

உன்னினா முரைத்த வண்ண முததிசூழ் புவியி லோர்வேந்
தின்னெழிற் சுதனா யாண்டோன் றெய்திய வளவே தந்தை
யன்னையைப் பிரிந்து பன்னா ளலக்கணுற் றருளா லீசன்
றன்னடி பூசித் தேத்திச் சார்தரு மெண்ணீ ராண்டில். (௧௪)

திருவருள் கைதந் துய்ப்பத் தெவ்வலி முருக்கிச் சாய்த்துப்
பிரிவுற நின்ற மாதா பிதாக்களைக் கலந்தின் புற்றாங்
குரிமையின் முடிசூடப்பெற் றுலகெலாஞ் செங்கோ லோச்சிக்
கருதுபல் போக மாந்திக் கயிலை சென் றின்பந் துய்ப்பான். (௧௫)

கடவுள்வெள் ளிபமவ் வாறே காட்டிய மாகிப் பன்னா
ளிடருற்றோ ரிருடிக் காங்க ணிடர்புரிந் தீசன் சூலத்
தொடர்பினாற் றொல்லை ஞானந் தோன்றப்பெற் றீசற் பூசித்
துடனருட் கயிலை சார்கென் றுரைத்தன னுறையுள் சென்றான். (௧௬)

வேறு.

என்றுதமிழ் முனியுரைப்ப விருந்தவத்தோர் நனியுவகை
துன்றுமுளத் தினராகித் தொன்மலயத் துலகுய்ய
வென்றுமமர்ந் தருளடிகே ளிந்திரன்பிற் செயல்யாதோ
நன்றருள்கென் றிறைஞ்சவினாய் நயந்தவர்கட் குரைசெய்வான். (௧௭)

இனியதபோ தனமுனிவீ ரிருங்கடல்சூழ் புடவியிடை
நனிமிகுசீர்ச் சோணாட்டி னானிலஞ்செய் தவப்பயனென்
றெனவருமோர் துவந்துரைக்கு மியல்பினா யவனியெலாந்
தனிபுரந்து கோலோச்சுந் தகைமையனோர் திறல்வேந்தன். (௧௮)

சொற்றவில னேமாங்க சோழனெனப் புகழ்பெயரோ
னற்றவத்தோர் துணையாவா னானிலத்தோர்க் குயிராவா
னற்றவர்க்கோர் நிதியாவா னருளினுக்கோர் கலனாவான்
பற்றலர்க்கோ ருருமாவான் பரனடிக்கோ ரன்பாவான். (௧௯)

இன்னனசீர் முடிவேந்த னெழிற்காஞ்சித் திருநகரே
தன்னினிய தனிராச தானியா வமர்ந்திடுநா
ளன்னருஞ்சொல் சோணாட்டிக் கின்னுயிரா மெழிற்றில்லைப்
பொன்னகரிற் சிற்றரசாய்ப் புவியளிப்பா னொருவனுளன். (௨௰)

விண்ணுலகிந் திரனின்மேல் விரவுறுபஃ றிறனோக்கி
மண்ணுலகிந் திரனென்றிம் மகிதலஞ்சொன் மகிமையினு
னண்ணியதோ வெனப்புலவர் நயக்குநரேந் திரப்பெயரோன்
கண்ணுதல்சே வடிக்கன்பே கைப்பொருளென் றுட்டுணிந்தோன். (௨௧)

உரனுரனில் பவஞ்சமுழு துதிந்தமுறை தனிலொடுங்க
வொருசிறிதே ருதுகுறை யாதென்று மொருபடித்தாய்
விரவுசிவ மேயெஞ்சி விளங்குண்மை மெய்க்கணியாக்
காதலவா மலகமெனக் காட்டுதிரு வெண்ணீறும். (௨௨)

அனையசிவ னெவ்வுயிர்க்கு மருள்கருணை யிரக்கமெனு
மினியகுண மென்றுமுள னெனநேற்று கண்மணியும்
புனிதமறைக் குள்ளுயிராய்ப் பொற்புறுமைந் தெழுத்துமெனுந்
தனைநிகர்முத் தொகைச்சிவசா தனமேசொம் மெனக்கொண்டோன். (௨௩)

குறிஞ்சிமுத லைம்புலமுங் குற்றேவ லெஞ்ஞான்றும்
விறந்துதனக் கியற்றிடல்போல் விழைவுழிச்செ லைம்புலமு
மறிந்தனதன் வழிச்செல்ல மற்றவைவெல் சிதேந்திரிய
னறிந்துபதி பசுபாச வறவகைகண் முறைபுரிவோன். (௨௪)

வேதசிவா கமமுதலா மெய்ந்நூல்கள் விதந்தோதும்
போதமுற வகம்புறஞ்செய் புனிதசிவ பூசனையி
லாதரமிக் கனவரத மைந்தொழிற்கூத் தாங்கியற்று
நாதநட ராசனடி நாடொறும்பூ சித்துவப்பான். (௨௫)

ஆயநரேந் திரன்மனைவி யருந்ததிக்கற் பினிற்சிறந்தாள்
சேயகம லையிற்சிறந்தா டிருந்தெழிலிற் பொறையினிலா
பாயபுவி யினிற்சிறந்தாள் பரசிவைபொற் பதத்தன்பிற்
றூயகௌ ரியிற்சிறந்தாள் சுகந்தையெனப் பெயர்சிறந்தாள். (௨௬)

அருளாலும் பொருளாலு மன்பாலு மின்பாலுந்
தெருளாலுஞ் சிறந்தாலுந் திருந்தறம்பின் றிருந்துவதொண்
பொருளாலு மாதலினப் புத்திரப்பேற் றினையும்விழைஇக்
கருளாலுங் கடற்புவியிற் கருதறம்பற் பலபுரிந்தார். (௨௭)

புரிந்துமகப் பேறரிதாற் புத்திரப்பே றுருகும்வழி
தெரிந்துரைத்தார் தில்லைவா ழந்தணர்கள் செவியேற்றுப்
பரிந்தாச னவர்க்கொண்டு பழுதகல்கூ விளமிலக்கம்
விரிந்தசடைக் கூத்துடையான் விரைகழற்காங் கருச்சிப்பான். (௨௮)

என்றுரைப்ப மலயமுனி யிருந்தவத்தோர் கேட்டுவந்து
நன்றிலக்க வில்வார்ச்ச னவ்விதியா தருளென்னத்
தொன்றுணர்மா முனியுரைக்குந் தூமுனிவீர் கூவிளந்தா
னென்றுறு மிச்சாஞானக் கிரியையுரு வெனவுணர்மின். (௨௯)

ஈதிலக்கம் பழுதறமுன் றெரிந்தெடுத்துக் கொண்டிமைய
மாதிடத்தா னபிடேக வகைத்திரவி யாதியெலா
மாதரத்தா லினிதமைத்தாங் கருச்சனைக்குஞ் செபத்தினுக்குந்
தீதறத்தா மோர்ந்துணர்ந்தார்த் தெரிந்துபதின் மரைவரித்து. (௧0)

சிற்பரனுக் காகமநூன் முறைபூசை சிறப்பித்தே
யற்புறவர்ச் சனைபுரிவிப் பான்றிருமுன் னமர்ந்திருப்ப
முற்புகலை யிருவரும்பாங் குறப்பூசிப் பான்முன்னர்ப்
பொற்புறவீற் றிருந்தனைய புரைதபுத்த வில்வமெலாம். (௧௧)

உரியவிதி யினிலமைத்தாங் குறுபஞ்ச கவ்வியத்தால்
விரவுறமுன் றூய்மைபுரீஇ விரசாங்கி தனிலமைத்த
வரியதிரு வெண்ணீற்றி னதிசுகந்த படீரத்தின்
மரபினிற்றோய்த் தேபிரண வம்மாயா பீசமுடன். (௧௨)

அருமறைகள் விதந்தோது மாயிரமாண் சிவநாம
மொருமையுற வெடுத்தோதி யொவ்வொன்றாய் விரையாமற்
றிரிசுபன்ன மெனவியந்து திகழ்மறைசொல் வில்வத்தான்
மரபினருச் சித்தன்ன வர்க்காதி நிவேதித்தல். (௧௩)

இவ்வகையீ ரைந்துமுறை இயற்றயுதார்ச் சனையிதுவே
யுய்வருளு நியுதநா மார்ச்சனையின் பலனுதவு
மிவ்வகையே நூறுமுறை யியற்றுநியு தார்ச்சனையே
யுய்வருளோர் கோடிநா மார்ச்சனையா முண்மையிதே. (௧௪)

இப்படியோர் நாற்பானாந் தினங்கணரேந் திரனியற்றிச்
சற்பிரா மணற்குணவு சைவமகே சுரபூசை
யொப்பறநா டொறும்புரிந்தாங் குறுநியமஞ் சிறிதும்வழா
தெப்பெரிய ரும்புகழ வியற்றினனிப் பெரும்பயனால். (௧௫)

இத்தகைய நரேந்திரனுக் கிவன்மனைவி சுகந்தைவயிற்
றத்தகைய முனிசாப மாங்கேற்ற சுரேந்திரன்றான்
வித்தகனாய் மீனமதி மிளிர்மதியம் வளர்பக்கத்
துத்திரநா ளோரைசுப முறமகவா யுதித்தனனால். (௧௬)

அனையமக வொளியாலு மழகாலு மிணையின்மை
தனையரசன் கண்டுவகை தனின்மூழ்கிச் சதுர்மறைதேர்
பனவர்கொளக் கனகமழை பரவுறப்பெய் தனன்மகவுக்
கினியமனோ கரனெனும்பே ரிசைத்தான்வா னிசைத்தபடி. (௧௭)

வேறு.

அனைய மைந்தனோ ராண்டள விளம்பிறை யாமென்
றெனைவ ருஞ்சொல வளருநா ணரேந்திரற் கினிய
வணிகநாதனா யமர்ந்தவன் றூர்ம்மதி யாகி
நினைவு வேறுபட் டரசினைத் தான்பெற நினைந்தான். (௧௮)

இன்ன காலையோர் நாணிசி நரேந்திர னென்பான்
றன்ன காதலி யொடுநட ராசன்பொற் றளியின்
முன்னி யன்புமீக் கூர்தர முன்றொழு தமையான்
பன்னி நின்றனன் சென்றதந் நிசியொரு பாதி. (௩௯)

அசனி கான்றுவா னதிமழை பொழிந்ததங் குழையர்
நசைகொள் யானமுன் னுய்த்திதி லிவர்ந்துநீ நணுகென்
றசைவில் வேந்தனை வேண்டவு மாலயத் தினுநா
மிசைவின் யானமூர்ந் திற்செலே மென்றுமே லியம்பும். (௪0)

அல்ல தூஉஞ்சத்தி ராதிகொண் டுஞ்செலே மருளாற்
செல்லொ ழிந்தபின் வருதுநீர் சென்மினென் றிசைத்தா
னல்லன் மிக்கா ரிருட்பெரு மழையினு மரசுஞ்
செல்லல் பாதகங் குடையினு மிற்கெனச் செப்பில். (௪௧)

என்ன பாவஞ்சிற் சிலர்தமைப் பெரியரென் றிறுமாந்
தன்ன வூர்திமான் முனையருஞ் செய்மையே யடிதாழ்ந்
தின்னி லத்தினி னடந்துசெல் லிறைதிருக் கோயிற்
குன்னி யேகுகா லையுஞ்சிவி காதியி லுறுவார். (௪௨)

இறைவ னேயிதி லிவர்ந்துசெல் லெங்கணு மென்று
நிறையு மாரரு ளாற்றரு நித்தில யானத்
துறைத ராதது தூரத்தே யிழிந்து சென் றுறுமாற்
கறைமி டற்றினேற் குரியசெய் காழிவாழ் பிள்ளை. (௪௩)

உரிய பிள்ளையிவ் வுலகுய விங்ஙன மொழுகித்
தெரியக் காட்டவுந் தெளிந்திடா தழிபொருட் செருக்காற்
பெரியர் நாமென வாய்மதம் பேசிக்கண் மறைந்து
திரியு மேலையோர்க் கிறைசெய்தண் டனையெவர் தெரிப்பார். (௪௪)

அன்று சேக்கிழார்க் குலகெலா முலகுய வருளு
மன்ற வாணன்முன் னின்றிடு மாசைவான் மொழியா
லொன்று வேந்தநின் றனைகா வலன்மனை யொடுநிற்
கொன்று தானா சினைக்கொளக் குறித்திவண் குறுகும். (௪௫)

ஆத லானம தாணையாற் சிலையுரு வாகிக்
காத லாளொடு நமதணி மையிற்கலந் திருந்தே
யோத லாவெழின் மனோகரற் கீரெட்டாண் டுறுகாற்
றீதி லாநம துருக்கொண்மி னென்றருள் செய்தான். (௪௬)

அருளிச் செய்தவா நரேந்திரன் மனையொடு மாங்கே
தெருளிற் கூர்சிலை யுருவமுற் றிருந்தனன் சிவர்க்
கிருளிற் றீர்தர வருள்பத நான்கினு ளிஃதெப்
பொருளிற் சார்வதோ சிவன்செயல் யாவரே புகல்வார். (௪௭)

அரச னாலயஞ் சென்றனன் றனித்தன னவனை
யிரவி னிச்சம யம்புகூஉக் கோறலே யெளிதென்
றுரமி குத்தவத் துன்மதி வாள்கொடாங் குற்று
விரவி யாங்கணுங் கண்டிலன் சென்றனன் மீண்டு. (௪௮)

## வேறு.

மற்றை நாளி லரசை யரண் மனையிற் காணு மையினென்ன
லுற்ற விருளின் மழையுருமி லுலந்தான் மனையோ டெனத்துணிந்தாங்
கற்றை நாண்முன் னவனிவேந் தாகிக் களித்தான் பிறர்பொருளைப்
பற்று கள்வர் வரும்பெரும்பின் படர்நோக் காதுட் களித்திடல்போல்.(௪௯)

கொன்றைத் தொங்க லானடியார் குலிச னயன்மால் பதம்பொருளா [குங்
மென்றுட் கொள்ளா ரெனுஞ்சுருதிக் கிணங்கப் பெரியோர் கான்றொதுக்
குன்றிப் பொருளைப் பெரிதாயுட் கொண்டு மயங்கி னானேனுஞ்
சென்றத் தீயி னெச்சமெனத் தெறுமென் சுருதி தெளிந்தான்போல்.(௫௦)

அரச னொளிந்தா னாயினுமீண் டவன்கான் முளையை முளையென்று
பரிவின் விடுப்பின் வளர்ந்தெமக்கே பரிவு தருமென் றுளந்துணிந்தவ்
வரிய சிசுவா மனோகரனை யரிவை யொருத்தி கைக்கொடுத்துப்
பிரிய வுயிர்கொன் றிடுகென்றுட் பிரியம் பெருக விடுத்தனனால். (௫௧)

பெண்ணி னறிவு பேதைமைத்தே யென்னு முறையைப் பெரிதழித்தா
ளெண்ணின் றொளிரு நுண்ணறிவே யுடையா ளாகி நரேந்திரனு
மண்ண னலனே நினைந்திரங்கி யனைய விருளை மனோகரனைக்
கண்ணின் மணிபோற் போற்றினள்பு கார்மா நகர்சென் றொளிரவே. (௫௨)

ஆங்கட் புகுந்த விருளையவ்வூ ரரசன் சுயம்பு தேசவன்மன்
பாங்கிற் புரிந்த மணக்காதற் பரவு ரதிசுந் தரியுடன்சார்ந்
தோங்கிப் பொலியுஞ் சயனமனை யுற்றாங் கொருவர் காணுமே
நீங்கற் கரிதாய் மனோகரனை நிறுத்தித் தில்லைக் குடன்போந்தாள். (௫௩)

சிசுவு மொழிந்த தினியெனக்கோர் செல்ல லில்லை யெனக்களித்து
வசைமிக் கிறுமூ முணராத்துன் மதிபா விருளை யம்மகவுன்
னசைவி லாணை யிற்றுறத்த லாமே யாகிற் றென்றகன்று
ளிசையுட்களித்தான் றழல்மடிச்கொண் டெய்யாதிறுமாந்திடுவார்போல்(௫௪)

இனையன் செயலிவ் வாறாக வியம்பும் புகார்நன் னகரானு
மனையன் சுயம்பு தேசன்மனை யாய ரதிசுந் தரியென்பா
டனையன் வேண்டி மாதசதுர்த் தசிக் டோறு நியமமுடன்
வினையை யொழிக்குஞ் சிவநிசிமா விரதம் புரிந்து வந்தாண்முன்.

இருளை சிசுவை யவள்பள்ளி யிடத்தி னிருத்திப் போந்ததினந்
தருமவ் விரத தினமாகத் தான்செய் நியம சிவார்ச்சனையை
யிருமன் பினிலந் நிசிமுடித்து மேவு மனைசார்ந் தன்ளாங்கு
மகவி னொலிகேட் டுட்புகுந்தாள் வனப்பி னொளிர்சேய் தனைக்கண்டாள்.

கண்ட பொழுதே பேருவகைக் கடலிற் படிந்தாள் கரைகாணா
ளண்டர் பெருமான் சிவவிரத மங்கை நெல்லி யாயதென் றுட்
கொண்டு மகவை யெடுத்தணைத்துட் குளிர வுச்சி மோந்தமுத
மொண்டுண் டாங்குக் கபோலத்து முத்தங் கொண்டாண் மொழிகின்றாள்.

சிவமா விரதப் பயன்பின்னாட் சேரு மென்ப சிறியேன்செய்
தவமா கணமுந் தாழாதே தமியேன் வருந்திச் சுமக்காதே
பவநோ வணுவும் பொருந்தாதே பயில்சேய் மணியைத் தரப்பெற்றே
னெவனோ துவலேலைக்கிரங்கி யெம்மான் றருபே ரருளென்றாள். (௫௮)

அன்ன துணர்ந்தாங் கரசனடுத் தனைய மகவு புனைபணிகண்
மின்ன வியற்கை யெழில்பெருக மிளிர்த னோக்கி வியந்துமகிழ்ந்
தின்ன வுருச்சுந் தரமோவென் றியம்பி யெடுத்து மார்பணைத்து
நன்ன ருவகைக் கடற்படிந்து நாம மதுவே யாயழைத்தான்- (௫௯)

உயிரிற் சிறந்த வொண்பொருளென் றுன்னி மகனை யவ்வரசு
மயிலிற் சிறந்த மென்சாயன் மனையும் வளர்த்து வருநாளிற்
குயிலிற் சிறந்த மொழியாள்பூங் கோதை ரதிசுந் தரிகருவாய்த்
தியலிற் சிறந்தோர் மகவீன்றா ளிவன்பேர் விடங்க னென்றுரைப்ப. (௬௦)

பின்ன ரோர்பெண் கொடிதன்னைப் பெற்றா ளவள்பேர் சவுந்தரியென்
றுன்னி யழைத்தா ளிருவரையு மொருங்கு பேணி வளர்த்தனளான்
மன்னன் வளர்சுந் தரவிடங்க னைந்தர்க் குரிய பருவத்திற்
பன்னு முந்நூற் கடிமுடித்துப் பன்னூ றேற்றுந் திறம்புரிந்தான். [௬௧)

புரிந்தோர் குரவனிடைப் புகுத்தப் போந்தாங் கிருவ ருங்கலைக
டெரிந்தோர்ந் துறுநாட்சுந்தரன்மேற் றெளிவு விழைந்தாங் கணிமையினில்
விரிந்தார் நிகமா கமமுதலாம் விமல சிவனூற் கடன்மதித்தம்
மருந்தார்ந் தொளிர்போ தாயனமா முனிவாழ் நெய்தல் வாயிலுற்றான். ௬௨

சென்ற குணசுந் தரன்முனிதாள் சிரமேற் கொண்டு பணிந்தெழுந்தாங்
கொன்று மன்போ டட்கருத்தை யுரைத்தான் முனிகேட் டுளத்துவகை
துன்ற மலர்ந்து முகமைந்த தூய கலைமுன் னாயவெலா
நன்று கோடி தருதுமென நாளு முணர்த்த வுணர்கின்றான். (௬௩)

கருவி நூல்பல் கலைநூன்மேற் கருது வேதா கமநூல்விற்
கருவி நூன்முன் னானவைமுற் கரும வசத்தா லொருமுறையே
கருது குரவ னுரைத்தாங்குட் கண்டு தெளிந்தான் மேலவன்பாற்
கருவி னுறுநோய் தெறுபஞ்சாக் கரோப தேச முறைபெற்றான். (௬௪)

## வேறு.

பெற்ற சுந்தரன் மேலும் பெருகன்பாற்
கற்றை வேணியன் பூசனை காமுறுத்
தெற்றெ னாவவ் விதியுமத் தேசிகன்
சொற்ற வாய்மையிற் செய்யத் தொடங்குவான். (௬௫)

தேடி யெங்குங் குரவன் சிவார்ச்சனைக்
கேடு லாமலர் கொய்வதற் கேகுங்கா
னீடு மன்பினிற் பூசனை நித்தலு
நாடித் தானும் புரிந்து நயக்குவான். (௬௬)

தேமிக் கார்மலர் தேடிக் கொணர்தரக்
காமுற் றோர்பகற் செல்வுழிக் கண்டனன்
மாமிக் கார்நெய்தல் வாயில் வடாதுபா
லோமிக் காரும் பிரகதுத் தியானமே. (௬௭)

அன்ன தோருத்தி யானத் தணியெலா
நன்னர் நோக்குபு நாடினன் பன்முறை
யென்ன பல்வளத் தீட்டமு மீண்டுளா
தன்னை யொப்பதித் தாவி லுய்யானமே. (௬௮)

அலங்கல் கோதி யமர்ந்ததே மாங்குயி
லிலங்கு தாரக மோத வெழிற்கிள்ளை
நலங்கொ ளைந்தக் கரமு நவில்வன
புலங்கொ ணங்குர வன்மொழி போல்கின்ற. (௬௯)

ஆண்டு நங்குரு வோது வேதாகம
மீண்டு மோதுமென் னையம் விலக்குவ
காண்ட குஞ்சுகங் கண்மிகு பூவைகள்
பூண்ட போருட் செய்கை புகல்வதென். (௭௰)

முனிவர் வாழுட சங்கண்முன் வாலினாற்
றுனிவி யாக்கிரஞ் சோதனித் தொண்டுசெய்
தினிதி னென்குரு நாத னிடத்தியான்
றினமுஞ் செய்யுமத் தொண்டு திருத்துமால். (௭௧)

செய்வ பன்மணித் தீபங்கா கோதரந்
தெய்வ மொன்றது வேசிவ மென்னுவா
யெய்வ தாக விதழி யிலக்குமா
லுய்வ ளிக்குங் குரவ னுரையென, (௭௨)

கருமு சுக்க ளிரூல்பிழி காலையங்
கருக ரம்பைக் கனிகளி னம்மதுச்
சொரிவ தன்பர்பகீ றூச்சிவ லிங்கவொண்
டிருமு டிக்கபி டேகஞ் சிவனுமால் (௭௩)

வழை பாகன் சிவார்ச்சனைக் கேய்மலர்
வேழ மாதவர் வேண்டும் பொழுதெலாம்
வாழ மாமலர்க் கொம்பர் வளைத்திடுஞ்
சூழ வெங்கணுந் தூநீர் தெளித்திடும். (௭௪)

கவிகொ ணர்ந்தவண் காய்கனி யாதிபெற்
றவிசு ரர்க்கங்கி வேட்டரு ளந்தணர்
நவியி ளங்கன்று நண்பின் வளர்ப்பர்பின்
சிவனு ருக்கொடு கைக்கொள றேற்றல்போல். ௭௫

உடச மெய்கணு மொண்டள வின்கொடி
படர்பு நீழல்பூம் பந்தரிற் செய்வன
கடிய பாணமாய்க் காமனைச் சார்பழி
யடிக ணீர்தவிர்த் தாள்கெனச் சூழல்போல். ௭௬

கணுவெ டித்துக நித்திலங் கன்னல்க
ளணுகி நிற்ற லனங்கன் றனுவென்ன
நணிய பாவ நசிக்கக்கண் ணீர்சொரீஇப்
புணரு ருந்தவம் பூண்டுறல் போலுமால். ௭௭

ஆழி வாவி யலர்ந்தசெவ் வம்புயத்
தாழி னன்னம் பெடையொ டுறனல்லூர்க்
காழி வாழ்மணி காவி யாரொடு
வாழி சோதியுண் மன்னுறல் காட்டுமே. ௭௮

வளையொ லித்த வளையொலி வாய்ந்துரு
வளைமி டற்றவ ளுமம் வழுத்துந
ரளவி லாவன்பி னுலோ மாகர
வளவி லாமுறை யாற்சொலல் காட்டுமே. ௭௯

குவளை நோக்கம் புயமுகங் கூர்ந்தளி
திவள்செவ் வாம்ப றிறந்து வருகென
வவண ழைத்துறு வாரை யடர்பவந்
துவர மாய்க்கும் மணிகன்னித் தூர்த்தடம். (௮0)

கன்னி காரஞ் செருந்தி கடுக்கைமா
பன்னி தாதகி கூவிளம் பாடலம்
புன்னை சண்பக நீபஞ் சுரபுன்னை
வன்னி யாரம் வகுளமந் தாரங்கள். (௮௧)

பாரி சாத விகுச பலாசமே
வேரி மாதுளை வெட்சி குராகர
வீர நெல்லி கிளுவை விளசம்பு
நாரங் கம்மா விலிங்கை நறவமே. (௮௨)

ஆதி யாயபல் கோட்டுள வாமலர்
சாதி மல்லிகை காந்த டளவமே
மாத வீயிரு வாச்சிகூ தாளமுன்
னோது பல்கொடி யொண்மலர் பல்குவ. (௮௩)

வெளிய செய்ய விரைக்கம லங்களை
யொளிர்சு கந்தமுற் றோங்குநீ லோற்பல
மளிய செங்கழு நீர்நெய்த லாதியாத்
துளிய தேன்சொரி நீர்மலர் துன்றுவ. (அச)

நந்தி தும்பை கரந்தை நறியசெவ்
வந்தி வெண்மிழாய் வால குரண்டமே
கந்த மார்வெட்டி வேர்மருக் காண்கொழுந்
தந்து பச்சை யனிச்சமோ மேத்தம். (அரு)

நிலவு மின்னன வாநிலப் பூக்களுங்
குலவு மேனை யணியின் குவால்களு
மலகி லாவளம் யார்க்கு மளக்கொணு
துலகெ லாம்புகழ் பான்மையி னோங்குமால். (அசு)

இன்ன வண்ண மிலங்கலி னித்தல
முன்னும் வாய்மைப் பிரகதுத் தியானமே
யென்னு நாம மிசைகென் றிசைத்தவண்
பன்னு பன்மலர் கொய்து படருவான். (அஎ)

வேறு.

படருஞ் சுந்தரன் முன்னையி னல்வினைப் பயனே
புடவி யாற்றிய பெருந்தவப் புகலரும் பயனோ
வுடைய நாயக னுமையவ ளுயக னுலப்பில்
கடவு ளுபகன் சிவலிங்க மொன்றுநேர் கண்டான். (அஅ)

மறைமு தற்பெருங் கலையெலா மூவர்தம் வடிவென்
றறையும் வாய்மையச் சுவத்தமூ லத்தினி தமரு
நிறையொ ளிச்சிவ லிங்கங்காண் டலுமுள நெகிழ்ந்தான்
குறைவி லாதபே ரானந்த வெள்ளத்துட் குளித்தான். (அகூ)

உள்ள முற்றிய வன்புமேன் மேலெழுந் துகைப்ப
வள்ளல் போரு ளீர்த்துற வல்விரைந் தோடிப்
பள்ள நீரெனப் பரமனம் புயப்பத முடிமேற்
கொள்ள வீழ்ந்தனன் பலமுறை வணங்கியுட் குளிர்ந்தான். (கூ0)

அறிவி லாதவன் பாலிய னரண்பிறி தில்லா
னறியு மாவெளி வந்துநா மருள்செயி னல்லாற்
குறிகொண் மற்கடப் பாங்கில னெனவுளங் கொண்டே
குறியு ருக்கொடே வந்தனன் சிவனெனக் குறித்தான். (கூக)

அரிய யன்முதற் றேவருங் கனவினு மறிதற்
கரிய னாகியு நனவினு மடியனேற் கருளாற்
றெரிய வீற்றிருந் தருளினை முதன்மைதேற் றிதழித்
தெரியல் வேணியாய் சிறியனேன் செய்தவ மென்னே. (கூஉ)

எனவு ரைத்தனன் யானுய வெளிவந்த வெம்மான்
புனைம லர்ப்பதம் பூசியா நித்துணைப் பொழுது
நனிக ழித்தன னையகோ வென்றுள நடுங்கித்
தனிய ருச்சனைக் குரிப்பொரு ளாவன சமைப்பான். (௯௩)

சென்று மாமணி கன்னிகைச் செழும்புனல் படிந்தான்
பின்று நீற்றினும் படிந்தென வுடம்பெலாம் பிறங்க
நன்று பூசினன் முறைதிரி புண்டர நயந்தான்
றுன்று கண்மணி புனைந்தெழுந் தைந்தெழுத் தொற்றான். (௯௪)

சொன்ன பாசனத் தப்பெருந் தடத்துநற் றேயந்
தன்னை யெண்சமக் காரங்கண் மநுமுறை சமைத்து
மன்னு தூப்பரி வட்டத்தின் வடித்தெடுத் தேகி
முன்னெ டுத்தபன் மலரொடுந் திருமுன்பு வைத்தான். (௯௫)

அரம்பை யாசினி சூதமா துளையவிர் நரந்தம்
விரும்பு நாவன்முந் திரிகையே வெள்ளின்முன் னுய
வரம்பி றீங்கனி யிலாங்கலி மலிசுவை யிளங்காய்
நிரம்பு செவ்விள நீர்முத னிறைபல விளநீர். (௯௬)

தூய வொண்கபி லைப்பசுப் பாற்குடந் தொகுத்தான்
சேய பொன்னிற விருசநீர் முதலிய சேர்த்தா
னுய தீஞ்சுவைக் கன்னலி னிரதமு மமைத்தான்
வாய மஞ்சனத் திரவியம் யாவையும் வகுத்தான். (௯௭)

திருமுன் சார்ந்தனன் பிராணவா யாமமுன் செய்தான்
பரவு றுஞ்சக ளீகர ணம்புரீஇப் பரிவாற்
புரையில் பாத்திய மாசம னார்க்கியம் புரிந்தே
யுரைசெய் தானந்தி ரவியம்பூ தாதிதூய் துருற்றி. (௯௮)

இதயத் தெட்டித ழம்புயத் தினிற்பளிங் கிலிங்க
பதியைத் தாபித்து வரன்முறை பூசித்தப் பரன்பால்
விதியி னிற்புறப் பூசையுஞ் செய்யுமா விமல
துதிசெ யின்னருள் புரிகென விண்ணப்பந் துலக்கி. (௯௯)

ஈச ஞெங்ஙன மருள்செய்த தாகினைந் திதன்மேன்
மீசு கந்தசை லாதிகந் தாந்தமா விளம்பு
மாசி லாத்திரு மஞ்சனம் வரன்முறை யாட்டித்
தேசு மிக்கதூத் திருவொற்று டைப்பணி திருத்தி. (௧00)

ஈர மாற்றினன் மாற்றியு மென்சொல்கே மிவனே
நேரி லன்புநீர் வெள்ளத்து ணிமலனை திருத்தா
னார வங்கண்மா மடைதிறந் திடையறு தார்த்திப்
பேர ருட்கடற் றுனுந்தோய்ந் துய்ந்தனன் பெரிதும். (௧0௧)

பூதி சாந்தம்பைந் தூர்வையக் கதைமுதற் புனைந்தா
னோது பொன்னரை ஞாண்கவு பீனமு முறுத்தான்
சோதி கூர்சுவ ணம்பர துவயங்கள் வனைந்தான்
மீது கோளகை முதற்பல மணிப்பணி மிலைந்தான். (௧0௨)

சுகந்த நாண்மலர்த் தாமந்தார் கண்ணிமுற் றொடுத்தாங்
குகந்து சாத்தினன் குடிலைமுன் வரைந்திட லொப்பத்
திகந்த நாறுதூ பஞ்சுடர் கோட்டினன் றிருமுன்
மிகுந்த பல்கனி யோதன விதநிவே தித்தான். (௧0௩)

மேலுந் தூபதீ பம்மகா தீபமுன் விளம்புஞ்
சாலுந் தீபங்கண் ணடிகுடை முதலுப சார
மாலு மன்பினிற் பளிதநீ பம்முகந் தமைத்தான்
மாலு ரம்படீ ரத்திற்றோய்த் தருச்சித்தான் மகிழ்ந்து. (௧0௪)

குடங்கை யுண்மலர் கொண்டெழுத் தைந்துளங் கொடுபன்
மடங்கு றச்செபித் துயிர்கரு மாதியை வரத
விடங்கை யர்க்கிய நீரொடு தத்தஞ்செய் தின்ப
மடங்கு றவண மிவ்வகை பேரன்பின் வழுத்தும். (௧0௫)

## வேறு.

அரியயன் முதந்த ஞதிபல் கோடி யமரரு மறிவதற் கரிய
பெரியனீ சிறியே னுயவெளி வந்த பெருமையான் பேசுதற் கெளிதோ
துரியனே துரியங் கடந்தவான் சுடரே தூயனே தூயர்முன் றோன்று
மரிவையோர் பாகா வருட்பெருந் தோட்டத் தமலனே யமரர் நாயகனே. ()

அனங்கனே கலவி புரிவிப்போ னுலகெ லாமவ னாணையைக் கடந்தின்
றனங்கனை மாய்த்தே யுமைமணம் புரிந்தா யதனினு முண்மை யோர்ந்தறியா
ரனங்கனு லலைவோர் மூவரி லொருவ னெமென்ப ருனையவர் பவமென்
னனங்கனே யங்க னேபெருந் தோட்டத் தமலனே யமரர் நாயகனே.(௧0௭)

மூவரு மாகி மூவரு மறியா முதல்வனென் றருமறை மொழியுந்
தேவனே முக்கட் டிருவருட் பெருந்தேன்செக மெலாம் பரவுறச் செலுத்திச்
சீவவண் பயிர்கள் வளர்த்தருள் கரும்பே சிறியனேன் பவந்தொலைத் தருள்வா
யாலமர் கொடியெந் திருப்பெருந் தோட்டத் தமலனே யமரர்நா யகனே.

திருமறை முதலி னடுவினின் முடியிற் றியேயனென் றுன்னையே செப்பிப்
பிரமன்மான் முதலோர்க் கனையசொல் யாண்டும் பேசிடாத் திறனுமே லதர்வா
தருசிகை யன்றோ ரவர்ச்சிக் கப்படுவர் சமாப்தியென் றுணிபுமோர்ந் துணரா
ரருள்வதுன் பரமே திருப்பெருந் தோட்டத் தமலனே யமரர்நா யகனே௧0௯

கவின்மணி கண்ட நான்மறை கண்ட கண்ணுதா றேவர கண்ட
திவள்சசி கண்ட சடிலமெய் கண்ட செல்வருட் *கண்டவா தென்றுஞ்
சுவைகொளுங் கண்ட சொல்லரு மகண்ட தொண்டனின் கண்டனி துன்னி
யவிருமின் பார வருள்பெருந் தோட்டத் தமலனே யமரர்நா யகனே.(௧௧0)

---

*கண்—தவாது எனப் பிரிக்குக.

சங்கர கங்கா தரபர மகேச சதாசிவ வுமாபதே தாணு
செங்கர மேவணிக் கங்கைதண் மதியோடு சேர்ந்தவைந் தெழுத்துணரிதழி
தங்கர வபய வரதமான் மழுமுற் சார்ந்துயிர்க் கருண்முறை விளக்கு
மங்கர வடியேற் கருள்பெருந் தோட்டத் தமலனே யமரர்நா யகனே. (ககக)

வேறு

என்று துதித்தா னுளங்களித்தா னெழுந்தஞ் சலித்தான் பன்முறையு
நன்று பணிந்தான் றுணைடைந்த நலங்கூ ரின்ப மாசாற்குஞ்
சென்று மொழிந்தாங் குவப்பிப்பான் சிந்தை புரிந்தான் பிரியாற்று
னொன்று முஅமச் சிவபதத்தி லுறுத்திச் சென்றான் முனியுடசம். (ககஉ)

போதா யனமா முனிவான்றாட் புண்ட ரீகம் பணிந்தடிகே
ளீதோ வணிந்தோ ருய்யானத் தெழின்மா மலர்கொய் திடப்போந்தேன்
மாதோர் பாக னருட்குறியென் மலஞ்சாய் குறியாக் கண்டுவந்தேன்
யாதோ துவலவ் விலிங்கேச னிணைதீ ரருள்கூ ரெழின்மாண்பு. (ககங)

என்று னிதுகேட் டலுமுனிவ னெழுந்தான் விரைந்தா னவனுடனுய்ச்
சென்று னனைய வருட்குறியைத் திகழ்மூ லத்திற் கொடுவான் போய்
நின்ற மாதே வாவெனுஞ்சொன் னிகழ்த்து சுகத்தோட சைத்துமுடி
நன்ற வருகென் றழைத்தலினோர் நலங்கூர்*பணைதோன் றுறக்கண்டான்.

தலைவான் கடப்ப வடியுரக தலத்தைக் கடப்பத் தளிர்போர்த்து
மலர்செய் வொளியெய் கணும்பரப்பி வயங்கவ் வாச மகிருகத்தை
வலதே வாசா மானருண மலையோ வென்பா னனமெனவெண்
கலைாங்குறமண் கிளைத்தடியிற் ‡களிறென் றுறக்கண் டுளங்களித்தான்.

களித்து விரையச் சென்றணுகிக் கருணை யொழுகுஞ் சிவலிங்கத்
தெளித்த வுருக்கண் டவசமாய்த் திருமுன் வீழ்ந்தா னந்தவெள்ளங்
குளித்தங் கொருவா றெழுந்திருகை கூம்பச் சிரமே லருமறைக்கு
மொளித்த முதலே யிவண்வெளியந் தொளிர்தற் கெளியேந் தவமென்னே

வேதந் தொடர மால்பிரமன் மிக்கோர் தொடர வெட்டருநீ
யேதந் தொடரும் பவக்கடன்மூழ் கெளியே முய்ய வெளிவந்தா
யாதுந் தொடர்தற் கரியமெனில் யாருஞ் செயலொன் றிலராய்நம்
பாதந் தொடரா தொழிவரெனும் பற்றா லலது பகர்வதெவன். (ககஎ)

அடியு முடியு மிருவர்முன மறியா தெழுந்த நிலைநின்றும்
முடியொன் றறிய வடியதல முழுதுங் கடக்க நின்றனைநின்
வடிவம் போல முக்கூற்று வடிவ மன்றோ விவ்வாசு
நெடிய முடியும் விழிக்கெட்டா நிலைய தாய்நின் றிடலென்னே. (ககஅ)

பவஞ்ச மெவையும் பகாகார லிங்கா காரப் பான்மையவப்
பவஞ்ச ரூபீ நீயேயென் பதுநே ரோர்ந்திவ் வுலகுய்வா
னிவந்த பீட லிங்கவுரு நீகொண் டிறல்போ னின்புடையே
நிவந்த வாசுந் தன்னிலையி னிறைய விளக்கு மவ்வுருவம். (கககூ)

---

*பணை-அரசமரம். ‡களிறு-பன்றி.

என்ன வியந்தவ் வரசனையு மீச னெனவுட் கொண்டிறைஞ்சிப்
பின்ன ரனைய விலிங்கேசன் பிரச மலர்த்தாள் பூசிப்பான்
முன்னி யெழுந்தம் மூர்த்திதிரு முன்போர் வாவி முறைகண்டா
னன்ன நீர்தோய்ந் துடன்போந்தாங் கமலன் றிருமுன் னடுத்தனனால்.

முன்போ கியபோ தாயனமா முனிவ னிறைவன் றிருவடியி
னன்போ டருச்சித் தேத்தியமர்ந் தரிதின டைந்தான் றனதிருக்கை
யின்பார் தருசுந் தரனனைய விலிங்க மூர்த்தி தனைத்தினமுந்
துன்பே குறப்பூ சித்தாசான் றொண்டும் வழாது தினம்புரிவான். (கஉக)

வருநா டொறுமேன் மேற்பொருள்கண் மலிய வளர்பேர ன்போங்க
வொருநா ளோவா நியமமா யுயர்பூ சனையிவ் வாறுஞற்ற
மருநாண் மலர்ப்பூங் கொன்றைமுடி வான்மூ வாண்டெய் தலும்விரைந்தே
யருளா லிலிங்கத் துமைசகித னாகி விடையூர்ந் தெழுந்தருள. (கஉஉ)

கண்டான் மகிழ்சுந் தரனுவகைக் கடலிற் படிந்தான் கரைகாணான்
விண்டோ தருமன் பாற்றிருமுன் வீழ்ந்தா னெழுந்தான் மெய்ப்புளகங்
கொண்டான் குதித்தான் றனைமறந்தான் கூறத் தொடங்கு மொழிகுழற
வண்டே யெனவா ருட்டேன்வாய் மடுத்தான் செயலற் றெதிர்நின்றான்.

நின்றான் வதனந் தனைநோக்கி நிமல னருளுஞ் சுந்தரகே
ளென்று னின்பூ சனைமகிழ்ந்தோ நயக்கும் வரங்கே ளெவ்வெவையு
மென்று னுடன்சுந் தரன்மேலு மிறைஞ்சி யெந்தாய் நின்பதத்திற்
பொன்று வன்பு மொருவீடும் புரிநதே னருள்கென் றிரந்தான்மேல்(கஉச)

உலகெ லாமிங் குனைப்பரவி யுய்வா னொருவா தித்தலத்தி
லகலி லாப்பே ரருள்புரிந்தே யமல நீவீற் றிருந்தருள்க
நலவு பிரதத்தியான நாத னெனும்பேர் கொண்டருள்கென்
றிலகு வரம்வேண் டலுமவ்வா றெய்து கெனவா ருளீந்தான். (கஉரு)

ஏனோர்க் கரியான் றிருவருளின் மாண்பென் னேயவ் வரமளித்துந்
தானே வலிய வழைத்துடன்சுந் தரனை நோக்கி யிந்திரனீ
மேனாண் முனிசா பத்தாற்பூ வேந்தன் மகவாய்ப் போந்தனையா
லானு மெழிலான் மதன்கல்வி புதனாற் சேடன் குருவறிவால். (கஉசு)

வலியா லிமயம் வீரியத்திற் றிரனே யெனுமாண் புறக்கடலாய்
செலுமேல் வருட மிரண்டுபரா தீன னாயெண் ணிரண்டாண்டில்
கலமே தருதாய் தந்தையுட னண்ணி யலகி றவகவிற்றி
நிலமேன் முழுதுன் குடைநிழற்கீழ் நிலவச் சார்வ பௌமனாய். (கஉஎ)

மரபிற் சுயம்பு தேசன்றன் மகள்சுந் தரியை மணம்புரிந்து
விரவின் பெவையு நுகர்ந்துபுகழ் விசும்பெட் டினுஞ்சென் றுலாவநிறை
பொருளிற் றனதன் சமழ்ப்புறவாண் டயுத மளவும் புவிபுரந்தெஞ்
சுருதி சாரா கமசுத்தாத் துவிதா னந்தந் தோய்ந்தமர்க. (கஉஅ)

எமைநீ யிவண்பூ சித்திடலா லெம்பேர் சுந்த ரேசனெனக்
வுமைபே ருறுக சவுந்தரநா யகியென் றுண்ணு யகிபெயரா
லமையா விடர்வந் துறினமைநீ யன்பி னினைத்தி யப்பொழுதே
நமதென் வதன வகோரசிவ னணிமுற் றிடரு நசித்தருளும். (௧௮௯)

என்றித் தனையு நேர்நின்றாங் கியம்பி யருளி யிலிங்கத்தி
னன்று புகுந்தான் சுந்தரன்மே னவிறற் கரிய வுவகையொடு
முன்றி லிறைஞ்சித் துதிபுகன்று முனிவன் குரவன் பணிவிடையிற்
சென்ற கருத்த னுயவனுச் சிரமம் புகுந்து நிகழ்வுரைத்தான். (௧௯௦)

வேறு.

அனையது முனிகேட் டகமகிழ்ந் தைய வருமறைக் ககப்படா வமல
னுனதுபே ரன்பின் வலையகப் பட்டிங் குனக்கரு டிறத்தையென் னுரைக்கே
னெனமொழிந் தாசி புகலவம் முனிதா ளிறைஞ்சினன் விடைபெறீ இயேகி
மனைபுகு விடங்க ளேடுசுந் தரன்றான் மற்றவ ணமர்ந்திடும் வைகல்
[று

முகில்விளர்த்திடவென் றியன்மணங்கான்றுமுல்லைபூண்டியன்முல்லைதேற்
நிகரில்பைங் கூந்தன் மதிமுகச் செல்வாய் நீலவாள் விழிவளைக் களத்தின்
பகநிறை யமுத கடமுலை மணிப்பை யகலல்கு லரம்பைவா மத்தாட்
டிகழர விந்த மங்கைசுந் தரியோர் தினந்தடம் படிந்திடச் சென்றாள். (௧௯௨)

சென்றசுந் தரிதன் றோழிய ருடனச் செங்கழு நீர்த்தடந் திளைத்துச்
சென்றிடு காலை யவளெழில் வலைக்குட் சிக்கியோ ரரக்கனுந் தீயோன்
சென்றுதா னெடுத்துப் புயத்தினிற் றாங்கிச் சேணுறச் சிலதியர் மொழியாற்
சென்றவட் சுயம்பு தேசனவ் வரக்கன் றிறங்கடந் திடப்பெறான் றிகைத்தான்

ஆயது தெரிந்து சுந்தர னத்தீச் சுரன்றிரு வருட்டுணை யதனை
மேயதன் வலியால் விண்ணெறிப் போந்து மேற்செலு மரக்கனை வீட்டித்
தீயவன் றோளி னழுவுசுந் தரியைச் செங்கைமேற் கொடுபுவி சென்று
தூயனெஞ் சினனுய் விடுத்தன னவனைச் சுந்தரி துணைக்கையா ற்றுனேந்தே

ஆகமோ டிறுக வணைத்துளங் களித்தாங் கவன்முக முகந்துகொண் டறைவாள்
தாகமிக் குடையே னின்னையே மணப்பான் சகோதர னல்லனீ யென்றா
யோகைமிக் கோம்ப வளர்ந்தனை யென்ப துணர்ந்தனன் கைவிடே லென்றா
ளூகமிக் குறுசுந் தரனியைந் தலைவ யூங்குறு மன்னைபா லுய்த்தான். (௧௯௫)

அரக்கனிற் பிழைத்தாங் குற்றசுந் தரியை யன்னையு மத்தனு நோக்கி
யுருக்கமிக் கம்ம சுந்தரன் றிறலிவ் வுலகினி லெவற்குள தென்றே
பெருக்கமிக் குவந்தா ரரக்கனைத் தடிந்தப் பேதையை மீட்டவ னிரவி
றிருக்குலச் செல்வற் சிவனுஞ்சுந் தரியச் செல்வியாஞ் சனகியே சிவனும்.

இல்லை யினரேஎங் கிரனர சினைமுன் றெவ்வுதுன் மதிபுகார் சென்று
வல்லையிற் சுயம்பு தேசனைக் கண்டுன் மகண்மணம் விழைந்தன னெனவச்
சொல்லைநன் கில்லிற் குணர்த்தின னிரதி சுந்தரி சூழ்ந்துபின் றுணைவ
தொல்லையி லரக்கற் றடிந்துசுந் தரியைச் சுந்தரன் புரந்த[illegible] தனை (௧௯௭)

சுந்தரன் வலியும் வீரமும் வனப்புந் தூயவான் குணமுநன் குணர்ந்
சுந்தரி யவனை யேமணம் புணர்வான் றுணிந்தன ளனைவர சனைய
சுந்தர னீசொல் குணமெலா நிறைந்த தூயனை யாயினுங் குலமே
சுந்தர மணத்துக் குயிரெனச் சிறந்த தென்மைய தாதலிற் றோகாய். (௧௩௮)

குலமிது வெனவோர்ந் திடப்பெறு வியற்குக் கொடுப்பதிங் கடுப்பதோ வின்ன [விரித்துத்
புலனெடுத் துரைத்தெந் மகளுளத் திருத்திப் பொருந்துமென் றுரைத்தனன்
கலனுரைத் தனளொங் குலமின்மை றலன்றுப் நாடுமோ வென்னுளந் தெய்வ
பலமுமோ ரவனே பதியெனக் கினிநீ பகர்வொழி கென்றுசுந் தரிபின் (௧௩௯)

என்னுறு கற்பு நன்னிலைத் தெனில்யா னெண்ணியாங் கியலெனை மணக்கும்
பின்னுணர் கென்று முன்னர்யா கீசப் பெருந்தகை வடதளி நோக்கின்
றின்னுறி யெம்மான் சந்நிதி யன்னை றலெங்காங் குவியுமோ வென்ற
நன்னிலை யீண்டு ஞாபக மாக நவிலக்கேட் டரசற்கு நவின்றாள். (௧௪0)

இரதிசுந் தரியீ திசைத்தலுஞ் சுயம்பு நேசனாத் தன்மதிக் கிசைப்பான்
மருவுமென் றனையை சுந்தரன் றனையே மகிழ்நனு வரித்தனண் மனத்தா
னுரைசெயுன் கருத்து முற்றுறு தென்று னுதுவினுய்த் தன்மதி சென்று
புரைகொள்வஞ் சனையாற் றன்பெயர்க் கேற்றபுன்மையா லோசனை புரிவான்

தன்செயற் கியைதுச் சீலனு மமைச்சன் றனைவிளீஇச் சுந்தரற் கோறற்
கென்செய லதுசெப் கெனவவன் புகார்சென் றிறைவனை நட்டமைச் சாகிப்
புன்செயற் காசா யமைச்சனும் பதகன் புரவலன் மகன்விடங் கனைப்பல்
வன்செயலினர் கொண்டே குறப்பணித் தான்மற் றவர்செய்மையின் மறைத்தார்

விடங்கனை யன்னை தந்தைகா ணுது வெந்துயர்க் கடலின்மூழ் குறுங்காற்
கொடுந்தொழிற் சீலன் சிலரையிவ் வாறு கூறுமி னெனத்திரித் தியக்க
மிடைந்தவ ராமே விடங்கசுந் தரர்க்குள் விரோதநேற் றுணர்ந்தன மவருள்
மடங்கலன் றன்சுந் தரன்விடங் கனைப்பின் மாய்த்தனன் கொல்லெனவடித்தார்

அனையதுச் சீலன் றுக்கமேற் கொண்டாங் கழுதகண் ணீருட னடைந்தா
னினையும் வேந்தனை நோக்கி நல்லமைச்ச னென்சொல்கே முயிரினுஞ் சிறந்த
தனையனில் வளர்த்த சுந்தரன் விடங்கன் றனைக்கொன்று தீட்டிய மரத்தின்
முனையறிந் தானல் லுரித்தெனக் கீடுப் முடித்தன னரவினுங் கொடியோன்

இவனைமேற் செய்வதென்னெனப் பதகனிறுத்தலே முறையென விறுத்தா
னவனிகாவலனே மாங்கமா முடிவேந் தாணையோர்ந் தவ்வழி செயவப்
புவனி காவலற்கீ துணர்த்தியவ் விறைபின் போந்திடு மளவுஞ்சுந்தரனை
வுவணைமைந் தனைச்சூ ருப்த்தெனச் சிறையி லுய்த்தன னுணர்விலா வேந்தன்

வேறு.

அவ்வழிசுந் தரன்சிறையி னமர்ந்துயிரா வதநாத னடியே பற்றி
யெவ்விடரு மீசனரு ளிலேசத்திற் கெதிரலவென் றெண்ணித் தேர்ந்த
செவ்வியனு தலின்வருந்தான் சிவனடியே சிந்தித்துத் தீமை தீர்ந்தான்
வவ்வழனீற் றுறையமர்ந்த வாகீசத் திருவடிகண் மகிமை போற்றி. (௧௪௫)

சிறையினமர் சயந்தன்முனங் குருநாதன் சென்றுளத்தைத் தேற்றி யாங்குச்
சிறையினமர் சுந்தரனைத் திருவெண்காட் டகோரமா தேவன் றேற்றிச்
சிறையினையச் சயந்தனுக்குத் திறல்யாகு வினைவிடுத்துத் தீர்த்தாங் குண்டுஞ்
சிறையினையோர் பூதத்தை விடுத்தொழித்து மென்றருளிச் செய்து நீங்கி.

சிதவனத்தி லமர்ந்தனனைத் தேவனு னையிற்குண்டோ தரன் முன்சென்று
சிதமுறச்சுந் தரனுருவிற் பூதமொன்றைச் சிறையிருத்தித் திகழுன் றனை
யிதமுறவன் றன்மனையி லிருத்திநகர் வாதியளித் தேகிக் கங்கு
லிதயமுடைந்திரங் குநின்றசுந்தரியைக்கொணர்ந்தவன்முனிருத்திற்றன்றே.

சுந்தரிசுந் தரற்கண்டா டுயர்விண்டா ளுயிர்கொண்டாள் சுந்த ரன்று
னிந்திரனென் பதும்புலியி லெய்தியதுஞ் சிவபூசை யியற்றிப் பெற்ற
முந்துதிரு வருட்டிறனு முதல்வனை யிப்பூத முன்னி யீண்டு
வந்ததனைக் கூட்டுவித்த மாண்புமவட் கினிதுரைத்து மகிழ்வித் தானால்.

உண்மையினுப் முன்னிறுமிக் குறுகாத லவடனையென் றுதிக்கு முன்னந்
திண்மையகுண் டோதரன்மற் றவண்மனைசேர்த் திவ்வாறைந் தினைக டாத்த
வண்மையனே மாங்கனு னையினுமேலோர் வீரனவண் வந்து தேர்ந்து
தண்மையசுந் தரற்கோறல் விதிப்பயதன் முன்குண்டோ தரன்சென் றுங்கே

மறவினைத்துச் சீலனுன் மறைபட்ட விடங்கனையீண் டுய்த்தா வல்லே
யறவினைச்சுந் தரற்குரைத்தே கினன்சுயம்பு தேசன்மகற் கண்டாங் கோகை
நிறைவினைக்கொண் டவன்பான்முன் னிகழ்ச்சியுணர்ந் தேமாங்கநிருபானுய்த்த
விறைவினைவீ ரற்குரைப்ப வுணர்ந்தவனுஞ் சுந்தரனை யினிதழைத்தே. ௧௩௧

அறிவுநிறை பொறைவீர மாதியநற் குணங்களுரு வமைந்த மைந்த
நெறிபிறழ நினைக்கோற னினைந்துரைத்த பெரும்பாவ நிலையென்சொல்வே
முறைமையினிவ் வரசொடியான் முன்செய்த தவப்பயனோ முடிவி லாதின்
னிறைகுணமாண் போவெம்மை நிகழ்பழிக்கா ளாக்காம னீக்கிற் றம்ம.

ஒருகணமுந் தாழாமலுயிர் கொள்ளுந் திறன்மறனே ருற்று மீச
னருளினுயிர் பிழைத்தனன்றீர்க் காயுளுற்று றொருமைந்த னந்நா ளன்ப
தெருளுறநின் னிடைக்கண்டாஞ்சிவனருளின்வலியிந்நாட் செல்வனையெப்
பொருளுநிறைதரவாழ்வாய்புகழ்வதென்னேயான்செய்பிழைபொறுத்தியை
[ய. ௧௩௩

பெயராலுஞ் செயல்விளக்குந் துன்மதிவேந் தாள்புலியைப் பெற்று நீயே
பெயராது வாழ்கவெனப் பேசிவிடுத் துடனெழுந்த பெருங்கோ பத்தான்
மயரற்றுன் மதிதுச்சீ லனைவிளித்துத் தளைபூட்டி மாறாத் துக்க
மயராய்மன் னுறச்சிறையின் மரணுந்த நிறீஇக்காஞ்சி யவனா டுற்றான்.

அறக்கொடுந்துன் மதியமைச்சோ டாசறுசுந் தரற்கின்னு வாற்றி யற்று
விறக்குமதின் வெய்யசிறை யிடர்க்கடல்வீழ்ந் தொருவாம லினைகின் றுனுற்
பிறர்க்கின்னு முற்பகலிற் பெரிதுவந்தாற் றுநர்க்கின்னு பிற்ப கற்க
ணுறற்கென்னே தடையோவா துறுமென்னுந் தேவவாக் குறுதி யோர்ந்தாம்

சுந்தரன்பின் வளர்ந்தவிரு வரைப்பணிந்து விடைபெறுபு தூய போதந்
தந்தரன்சீர் விளக்கியபோ தாயனர்தாள் பணிந்தேகித் தகைசால் காள
கந்தரனைப் பெருந்துடலைக் கண்ணுதலை யொண்ணுதலைக் கலந்த வாமத்
தந்தரனு தனைப்பணிந்தாங் கரிதேகித் தில்லைநக ரடைந்தான் மன்னோ ()

அந்நகரிற் பொன்னகரும் பன்னகரு மன்னகரு மன்பா லேனை
யெந்நகரும் போந்திறைஞ்சு மிரணியமன் றைந்தொழிற்கூத் தியற்று நிற்கு
மின்னகரு மதிவேணி விமலனருட் டிருக்கோயின் மேவி யுள்ள
உன்னகரு மன்புந்த வந்துதிரு முன்வீழ்ந்து வணங்கி னானால். (கருஎ)

ஐந்தொழிலைந் தெழுத்தலகெ லாமுய்ய வானந்த வருட்கூத் தாடு
முந்தொளிர்மன் றுடையானைப் பொள்ளிதழித் தொடையானை யுய்வான்கங்கை
யிந்திவர்செஞ் சடையானை யெழின்மறைசொன் னடையானை யேத்து மன்பர்
முந்திவர்வெள் விடையானை மூவிலைச்சூற் படையானை முக்க ணானை.

அறிவாலு முருவாலு மிகச்சிறியேற் கன்னையத்த னீயே யண்ணால்
சிறுகால மதிக்குழவி யிடர்நீக்கிச் சடையூக்கித் தெளித்த தேவே
பிறிதோர்புக் கிடமில்லேன் பேதையேன் றனைப்புரத்தி பெரும வென்றே
கறையாரு மலரடிக்கீழ் நயந்துபல பலமுறையு நமந்தான் மன்னோ. (கருகூ)

வேறு.

ஆய போதுமுன் சிலையுரு வாகியங் கமர்ந்தவர் தமக்கெம்மான்
மேய நோக்களித் தவரைமுன் னுருக்கொடு மேவுறச் செய்தாங்கே
காய வாணியாற் சுந்தர நுங்கையு நுந்தையு மிவர்கண்டாய்
நீய னாரொடுஞ் சேர்ந்திடர் நீங்கிவாழ் கென்றன னிமலன்றான். (கசு0)

வாணி யாரமு திருசெவி மடுத்தனன் விடுத்திடர் மகிழ்கூர்ந்தான்
பாணி யான்விரைந் திருமுது குரவரைப் பணிந்தன னவர்தாமும்
பேணி யாதர மீதுறப் பெருந்தவம் புரிந்துபன் னெடுங்காலங்
காணு றாதவர் கான்முளை கையுறக் கண்டெனக் களிகூர்ந்தார். (கசுக)

உரிய மைந்தனை யெடுத்துமார் புறவணைத் தும்பனீ யிதுகாறும்
பிரிபு நீங்கினு மீண்டர னருடரப் பெற்றனந் தமவுய்த்துச்
சொரியி னும்பிரி யாவென றுவகிந்தன னென்றுசுந் தரனோடு
மருள்செ யம்பல வனைப்பல முறைபணிந் தகன்றுதம் மனைபுக்கார். (கசுஉ)

மறம்பு ரிந்தழக் கொண்டவெல் லாமழ மாயுமென் னூல்வாய்மை
திறம்பு மோவழத் தன்மதி கொண்டவித் திருந்தர சழத்தீர்ந்து
புறம்பு காதறம் புரிந்துகொ ணரேந்திரன் புடைபுகுந் ததுதேற்ற
வறம்பு ணர்ந்தசுந் தரனொடு நரேந்திர னரசுசெய் தமர்ந்தானால். (கசுங)

வனப்பு டன்சிவ பத்திபூ சனைமுதன் மாண்பினொத் தானேனுந்
தனக்கு நேரில னுயர்தங் குலத்திற்பன் னாளுடன் சார்கண்ண
னெனச்சினானொத்த குலத்தமர்ந்தேகித்தன் னிடஞ்செல்சுந்தரனென்பான்
மனக்குறும்பொழித்தெனப்புறப்பகையெலாமாய்த்துவென்றொளிர்கின்றான்

இனைய சுந்தரன் றனையிடை யருகினை விடைக்கொள்சுந் தரிதன்னை
யனைய வேந்தனான் முறைமணம் புரிந்துசுந் தரன்கொள வளித்தான்பின்
றனைய னாண்மையோர்ந் தவனியை நரேந்திர னவன்புயந் தனில்வைத்து
வினையை வென்றொரு வீடுறு மருந்தவ வினையைமே வினனம்மா. (௧௬௫)

புனித சுந்தரன் றந்தைதான் றந்தவப் புவியர சினையெய்தி
யினிது பாரெலாந் தன்குடை நீழலி னன்கமர்ந் தின்பார
நனிபு ரந்துயி ரெவைக்கு நல்லுயிரெனு நாதனே யெனவாழ்வான்
கனிமொ ழிச்சவுந் தரிவயி னோரெழிற் கான்முளை தனைத்தந்தான். (௧௬௬)

பிரக துத்தியா னத்திளம் பருவத்தே பேரருள் புரிந்தாண்ட
மரக தக்கொடி பங்கனைச் சுந்தரே சனைமறந் தறியாத
வுரவு மிக்கசுந் தரன்மனக் குணத்தினுக் கொத்தசுந் தரியோடு
விரவு மைந்தன்பேர் பிரகதுய் யானநா தன்னென விழைந்திட்டான். (௧௬௭)

ஆயசுந்தரன் புவிபுரந் திடுதொழி லினிலமர்ந் தானேனும்
தூய சிந்தையப் பிரகதுய் யானத்தே துனைதலான் மனையோடும்
பாய நால்வகைப்படையொடு மளவிலாப் பல்வகைப் பொருளோடு
மேய வப்பெருந் துடவைசென் றமலன விரைமலர்க் கழறாழ்ந்தான். (௧௬௮)

தாழ்ந்தெ ழுந்துகாற் றிசைபினோர் வசதியிற் சார்ந்துசுந் தரனாங்கே
சூழ்ந்த நெஞ்சனா யற்புறச் சிற்பநூற் கற்பினர்த் தரீஇக்கூய்ப்
போழ்ந்து நீலமா மணிமலை கொணர்ந்தெனப் பொலிசிலை கொணர்வித்து
வாழ்ந்தி டப்புரி சிவாகம விதிப்படி மணிநிகே தனஞ்செய்வான். (௧௬௯)

கருவி லத்தமண் டபமகா மண்டபங் கண்ணுறுண்மண் டபமாதி
பொருவி லாத்திரு மாளிகை யடுக்குயர் பொற்றிரு மதிலாதி
தருவி சும்புறு கோபுரம் விமானமுன் சாற்று நூல்வகை யொன்று
மொருவு றாதுசெம் பொன்மணி யாதிகொண் டுஞற்றினன் றிருக்கோயில்.

உலகெ லாமுய வருசண்பை வாழ்வெடுத் துரைத்தருள் பெருஞ்சாந்தி
யிலகுநற்றினத் தியற்றுவான் சிவாகமத் திருமுறை யெல்லாமுங்
குலவு சுந்தரே சன்றளி போலணி குயிற்றிய கோயிற்க
ணிலவு வித்தியா பீடமென் றங்ஙனே நிகழ்வுறத் தாபித்தே. (௧௭௧)

ஆனை மாமுகன் கந்தனம் பிகையுடன மரும்த் தீசர்க்குப்
பானு முற்பரி வாரர்சூழ் வுறமுனம் பகர்ந்திடு மாசாந்தி
ஞான லிங்கமென் றுரைசிவத் துவிசா னலனெலா முறச்செய்தான்
மேன வத்தலத் தமர்ந்திறை மகிழ்திரு விழாவும்பின் செய்வானால். (௧௭௨)

தனக்கு முன்னரச் சுந்தர நாயகன் றண்ணரு டருநாளீ
தெனக்க ருத்துறு முவகையாற் பங்குனி யுத்திர மெனுநாளின்
மணக்கொ ளன்பினொன் பான்றின முற்செய்து வருதிரு விழாமுற்றி
வினைத்தொ டக்கறு சுந்தரன் மனையொடு வியந்துளங்களி கூர்ந்தான். (௧௭௩)

### வேறு.

பேசுதன் சென்ம நாளும் பிரகதுய் யானத் தீசன்
மீசிறப் பருள்செய் நாளு மீனவுத் திரநா ளென்னு
மாசையான் மாதந் தோறு மனையவுத் திரநா டன்னின்
மாசிலா விசேட பூசை வயங்குறச் செய்விப் பானால். (௧௭௪)

பிரகதுய் யான நாதன் பிரச மென் மலர்த்தாட் கன்பே
பெருகுற வளர்த்து நாளும் பிறங்குசுந் தரனிவ் வாறே
யொருவற வயுத மாண்டிவ் வுலகளித் துரிய மைந்தன்
பொருவறு விரைப்பூந் தாமம் போற்கொளப் புயத்தில் வைத்து. (௧௭௫)

பன்னிசுந் தரியோ டிந்தப் பவஞ்சவாழ் விடையு வர்ப்புத்
துன்னுற வீட்டி லார்வந் தோன்றுற வுலக மீன்ற
வன்னைபாற் சுந்த ரேச னகிலமு நிறைபூம் பாதஞ்
சென்னிகொண் டுண்ணேக் குற்றுத் திருவடி நீழல் சேர்ந்தான். (௧௭௬)

என்றனன் கும்பசாத னிருந்தவ ரடிகே ளுய்ந்தோ
நன்றயி ராவ தஞ்சார் நலனுரைத் தருள்க வென்றார்
பின்றது விரித்து ரைத்தான் பெருந்தவ னென்று சூதன்
முன்றுனுஞ் சவுன காதி முனிவரர்க் கிசைத்தான் மன்னோ. (௧௭௭)

இந்திரசுந்தரச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௪௬௪)

## ஐராவதச் சருக்கம்.

செங்கரம் விதிர்த்த லொன்றாற் றிறன்மகோ ததிப்பெ ருக்குந்
துங்கமிக் குயர்ந்த விந்தச் சுரும்புறு செருக்கு மாய்த்த
புங்கவன் றமிழ்வ ளர்க்கும் புண்ணியன் முனிவர் கேட்ப
வங்கயி ராவ தத்தி னருங்கதை யருளிச் செய்வான். (௧)

மூன்றுரு வாச நாம முனிவரன் சாப மேற்ற
பின்றுரு வாச டைந்து பேதுறு நாற்கோட் டும்ப
றுன்றுரு வாச டுத்துத் தொல்புவி வேழ மாகிச்
சென்றுரு வாசத் தண்பூஞ் சித்வனப் பாங்கர் சேர்ந்த. (௨)

ஆங்குறு களிறு முன்னை யறிவிழந் தவனி யெங்குந்
தீங்குபற் பலர்க்குஞ் செய்து திறற்புவி யிபங்கட் கெல்லா
மோங்கர சாய்முன் னெம்மா னுரித்தவக் கரிகொ லென்றே
யாங்கணும் யாரு மஞ்சி யிடருறப் படரு நாளில். (௩)

அருணிறை திருவெண் காட்டி லமர்சிவப் பிரிய னென்பான்
றெருணிறை யுளத்தான் வேத சிவாகம மாதி மூன்னூற்
பொருண்முறை யுள்ள வாறு போதமுற் றுளந் துணிந்து
கருணிறை கண்ட னேயாங் கரிசறு பதியென் றோர்ந்தான். (௪)

மெய்ப்பொருட் பற்று மேன்மேன் மிக்கெழப் பவஞ்ச வாழ்க்கைப்
பொய்ப்பொருட் பற்று முற்றும் பொன்றிய வறத்தா றீட்டித்
திப்பிய நெறியி லுய்க்குஞ் செல்வமு மறனி லாதார்
கைப்படு பொருளு மாக்க நீக்கமார் காட்சி யென்ன. (௫)

வைகறை யெழுந்து தூநீர் மரபினின் மூழ்கி நித்தச்
செய்கடன் முடித்து முன்னோன் சிவார்ச்சனைக் குரிய தூய
மொய்கமழ் மலர்கொய் தேகி முறையுப கரண மெல்லா
மெய்கனி யன்பி னீட்டி விமலனைப் பூசித் தேத்தி. (௬)

முறையினிற் சிவாங்கி வேட்டு மொழிதரு காமி காதி
நிறைதரு வாது ளாந்த நிமலவா கமநா லேழு
முறையினோர்ந் தததனால் வேத முதுபொருட் டுணிபுங் கண்டு
நிறைசிவத் தியானு னந்த நீள்கடற் குளித்து வாழ்வான். (௭)

நிச்சலு மிடைய றாவிந் நியமதற் பரனாய் வாழு
மச்சிவப் பிரிய னோர்நா ளவிர்மணி கன்னி மூழ்கிப்
பொச்சமி னியதி முற்றிப் புனிதவெண் காட்டி லீசற்
கிச்சை கூர் வில்வங் கொய்வா னீசமா திரத்திற் சென்றான். (௮)

வரதிரி சுபன்ன மென்ன மறையெடுத் தோதும் வில்வ
மரபினி லெடுத்துக் கொண்டு மாண்சிவப் பிரியன் செல்கா
லுரைசெய்முற் களிறு நீர்வேட் டுயர்மணி கன்னி புக்காங்
கொருதனி வருமன் னோனை ருறத்தெரீஇ வெகுண்ட தன்றே. (௯)

வெருவரு மதமால் யானை விமலமா தவன்றன் மார்பின்
மருவுகோ டழுந்தப் பாய மற்றவன் வெண்காட் டீசன்
பொருவரு நாமங் கூறிப் புவியில்வீழ்ந் தவச னானான்
வருமுயி ரிறுகா லத்து மறப்பிலார் குணமீ தன்றே. (௧௦)

அன்பருக் கவரின் மிக்க வன்பனும் வெண்காட் டம்மான்
றன்பிது சகிப்பன் கொல்லோ துனைந்துதன் சூல முய்த்து
வன்பெருங் களிற்றின் வீர மாய்த்துட னருளி னாலே
நன்புறு முனிதெ ளிந்து நடலைதீர்த் தெழுமா செய்தான். (௧௧)

எழுதரு முனிவன் வெண்காட் டிறையடி சென்று தாழ்ந்து
பழுதறு துதிபு கன்றப் பரனருள் வியந்து தான்செய்
வழுவறு சிவபூ சாதி மங்கலச் செயலிற் புக்கான்
மொழிதரு சூல வேலாற் குத்துண்ட வூரி வேழம். (௧௨)

அலக்கணுற் றவனி வீழ்ந்தாங் கன்னதூற் பரிசம் பெற்ற
நலத்தினுஞ் சுந்த ரேச னல்கருட் பேற்றி னாலுஞ்
சொலத்தகு மணிகன் னிப்பேர்த் தூயநீர்த் தடத்தின் வீழ்ந்த
பலத்தினுந் தெளிந்தெ ழுந்து பண்டைநல் லறிவுற் றன்றே. (௧௩)

திருவரு ளுணர்த்தி னன்றித் திருமக ளாத ளாதி
யொருவருந் தெளியா ரன்றே யுமாபதி யருளா லோர்ந்து
தெருள்களி றந்தோ முன்னுந் தீமையாற் சாப மேற்றோம்
மருளுறீ இப் பெருந்தீங் கிந்த மாமுனி வரற்குஞ் செய்தோம். (௧௪)

இப்பெரும் பாத கத்தா லின்னன்மே லென்ன சார்மோ
வெப்படி யுய்து மென்று விரங்கிமெய் யுணர்ச்சி கூரச்
சிற்பர சிவநா மங்கள் சிந்தைசெய் தாண்டு லாவி
முற்பெருந் தவங்கை கூட முதுபெருந் தோட்டஞ் சார்ந்து. (௧௫)

இந்தணி சென்னி யானே யெனுமுண்மை நேரு ணர்த்தாங்
கிந்தணி சென்னித் தூல விலிங்க நேர் கண்டு சென்று
முந்துறத் தாழ்ந்தத் தீசன் முன்வலஞ் செய்துட் போந்து
முந்துறச் சுந்த ரேசன் முளரியந் துணைத்தாள் போற்றி. (௧௬)

சவுந்தர நாமத் தன்னை தாளிணை பணிந்து போற்றி
யுவந்து பூசிப்ப வுன்னி யொளிர்மணி கன்னி மூழ்கி
நிலந்தவுட் டுளக்கை மொண்டு நீர்கொணர்ந் தபிடே கித்துப்
பவத்தெறு பூசை போது பலங்கள்கொண் டியற்றிற் றம்மா. (௧௭)

வேறு.

பூசனைசெய் யுங்கரிநம் புல்லறிவு போதவொளிர் போதம் பெற்ற
தாசனையித் தீர்த்ததடத் தன்றோவென் றதின்மூழ்கி யனைய நீர்கொண்
டீசனையாட் டியதிறத்தா லிம்மணிகன் னிகையோர்சா ரிவ்வே ழுந்தோய்,
பேசனைய துறையயிரா வததீர்த்த மென்றுலகம் பேணிற் றென்ப. (௧௮)

ஆயவகை நாடொறுமெய் யன்புபெரு குறப்பூசை யாற்றி யெம்மான்
றாயனைலே தனமான தைதகனிகாய் கந்தாதி துய்த்து வேறு
மேயவுணு மறுத்துரிய விமலசிவ தியானுதி மேவி யிவ்வா
றுயிரமாண் டளவுமருந் தவம்புரிய வக்களிற்றுக் கருள்யா னண்ணல். (௧௯)

அருளிலிங்கத் தினினின்று மாங்குவெளி வந்துமையோடான்மேற்கொண்டு
தெருளுறநேர் நின்றருளத் திண்களிறு கண்டுவகை திளைத்துத் தாழ்ந்தோர்
பொருளெனக்கொண் டிடலாகாப்புன்மையேற்கரணினதாட்புணையன்றின்
மருளுறுமாபதகனெனவலரையாமலெடுத்தெனையாள்வள்ளால்[றான்

என்று துதித் திணையடிக்கீ ழிரங்குபுவீழ்ந் திறைஞ்சிடுமவ் விபத்தைநோக்கி
நன்றுதவ நலந்துதிக ளுமகிழ்ந்தோ நயந்தவர நவில்வா யென்னக்
கொன்றையணி கோடீர குறையுனக்கார் குயிற்றினுமக் கோடீ ரச்சீ
ரொன்றருளா லொழித்திடுவா யுனதடியார்க் குற்றிலஃ தொழியாதென்ப.

நினைதோறு நடுங்குவதென் னெஞ்சுசிவப் பிரியசிவ நியமம் வாய்ந்த
முனிபாலென் சொல்கேன்மா மூடருமஞ் சிடுஞ்செய்கை முற்றி னேனவ்
வினைதீர்வி னாதெனினும் வெந்தழலி னீருகா விறந்து முண்டோ
முனைவாநின் னருட்டியான் மூடனேன் வினைவிற்கை முருக்கி யாள்வாய்

எந்தாய்சுந் தரநாதா வெளியேற்குப் புகல்வேறின் றென்று வேண்ட
விந்தாரும் வேணியனீ யிழைத்தபெருங் குற்றமெலா மெம்மை யீண்டு
வந்தாரக் கண்டளவே மாய்ந்தனமே லுந்தருதும் வரங்கே ளென்றான்
கொந்தாரு மிதழிமுடிச் சுந்தரநா யகன்கருணை கூறற் பாற்றோ. (௨௩)

அமலனருள் வினவுகளி றகமகிழ்ந்து மேலுமலர டிதாழ்ந் தோதும்
விமலநின திருப்பெயரில் வியன்றலத்தெம் பெயர்முன்னாய் மேவக் கோடி
சமலனெனக் கென்றுமுன தாட்கமலத் துறுமன்பே தருதி யென்ன
நிமலனயி ராவதநா யகனவ்வா றுகவென நிகழ்த்தி மேலும். (௨௪)

உரைதருமன் புடையாய் நின்னுருவகித்தித் தலத்தென்று முறைதருமுன்னை
யிரவியநாற் கோட்டுவான் வெண்களிற்றி னுருவமே மேவி யீண்டு
மருவிநமைப் பூசித்து வைகுதிநின் பிராரத்த மாயுங்காலை
யொருபெருவீடளித்துமெனவுரைத்தருளிமறைந்திலிங்கத்துற்றானெம்மான்

வேட்கைபினு மேற்கொளுமா விமலனருள் விதநோக்கி விழைவு கூர்ந்தப்
பூட்கை முனில் வெண்களிறாய்ப் பூசனைமுன் னிலும்பெருகப் புராரி பாத
நாட்கமலந் தினம்போற்றி நயந்துறுநாள் வலாரியவ ணண்ணிச்சொன்ன
வாட்குலநம் வானிடைநீ வருகவென வழைப்பவெதிர் மறுத்த தன்றே.(௨௬)

பின்னும்வலிந் தழைப்பவலட் பிரிவாற்றா தன் பினுளம்பேதுற் றெந்தாய்
மன்னுயிரோம் புதல்பொதுமை வள்ளானிற் கெனினுமெமை வலிந்துகாத்த
லுன்னுசிறப் பாகுமிஃ தின்முகத்தா லோர்ந்தனனா லொருகோட் டும்பா
லென்னிடர்தீர்த் தருடியென விபமுகத்தா னடிதாழ்ந்தவ் விபம்வேண்
[டிற்றால். (௨௭)

வேறு.

அதுதிருச் செவிசாத்தி யைங்கர னருளால்வான்
பதிமுகந் தனிநோக்கிப் பகர்தரும் புருகூதா
முதுவுண ரிபமீது முன்னையி லுனைச்சாருங்
கதியின தன்றேகுன் கடிநகர் கடிதென்றான். (௨௮)

இந்திர னதுகேளா வெந்தையிக் கரிபென்பால்
வந்தமர் திறமீச னாணையின் வலியன்றோ
நந்துற வதுமாற்றி நவில்வது முறையன்றே
தந்தரு ளெனத்தாழ்ந்தான் றனியிப முகன் கூறும். [௨௯)

இறையருண் முறையெல்லை யாதுணர் கிற்பாய்நீ
பிறையணி முடியெந்தை பிறதலத் தினும்வேட்கை
நிறைதர வெஞ்ஞான்று நிலவிவாழ் தலமீதீண்
டுறைபெருந் தவமாற்றி யமலனைப் பூசித்தே. (௩0)

திருவரு ணிபெற்றுச் செகதல மயலற்றுப்
பொருவரு சிவஞான போதநன் னெறிநிற்கு
மொருபெருங் களிறுன்பா லுறுவது முளதேயோ
மருவுறும் பேரின்ப மலரடி நிழல் வாழ்வே. (௩௧)

அன்னதெம் பெருமான்ற னாணையென் றறிவாய்வான்
மன்னவ நின்னுவணை வாழ்க்கையை வாந்தித்த
வன்னமென் றென்குவரோ ரனுவருள் பெற்றோரு
முன்னக ரயன்மான்முன் னும்பர்கள் பதவின்பம். (௩௨)

பசித்தவ ரோர்காலுண் பதிலுறு மின்பேயென்
றசித்தொழி யுணர்வில்லா ரருமக மாதிபுரீஇ
நசித்திடு மவ்வின்ப நயப்பரிக் கரிவெஃகா
வசித்திட லித்தந்தா வளத்தினை யொண்ணாநீ. (௩௩)

என்றனு மிறைகாணு னிந்திர னென்செய்வான்
முன்றனி வீழ்ந்தெந்தாய் முக்கண்முன் னவநாயேற்
கின்றருள் செயலீதேல் யானா சியற்றலெவ
ணன்றரு டருகென்று நமந்தனன் மேன்மேலும். (௩௪)

*தேற்றியைங் கரனெம்மான் றிருமுனோர் தடங்கண்டு
போற்றுமப் புனன்மூழ்கிப் பூசனைக் கியைபொருள்கொண்
டாற்றுமன் பினிற்பூசித் தடியிணை தொழுதேத்தன்பான்
மாற்றரும் வாதாடி வாய்மைநன் குணர்வித்தாய். (௩௫)

ஐங்கர வேழமுக வறுமுக சோதரனே
செங்கர சடிலேச சித்திபுத் திகணாத
தங்கர பந்தனவு தரபிர பஞ்சத்தார்
வங்கர வாதாடு வல்லபை வரபோற்றி. (௩௬)

பிரணவ பதநாத பிரசன்ன வதனசிதாம்
பரதா விக்னேச பகவசம் யாகசடீ
சுரவர கணராச துங்கபங் கயபாத
வரபர வாதாடு வல்லபை வரபோற்றி. (௩௭)

புரகர சுதபோத புனிதவங் குசபாச
கரகர சமிதூர்வை கங்கைமந் தாராதி
தரசிர பரிமளமோ தகப்பிரி யேசதயா
வரவர வாதாடு வல்லபை வரபோற்றி. (௩௮)

திருமக ளமர்மார்பன் றெளிவுறு மலைப்பாம்பி
னுருவுபன் னெடுங்கால முற்றிட ருற னீப்பான்
றிருவுரு நேர்காட்டித் திதிபுரி செயல் பூட்டி
வருமொரு வாதாடு வல்லபை வரபோற்றி. (௩௯)

தாண்வர் தமின்மிக்க தறுகணன் கயமுகன்சா
ரீனமில் வரநோக்கி யிலைக்கிசை தாமுப்பாற்
றனதொர் வடிவால்வக் தவன்வலி தீர்த்துலகுய்
வானருள் வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௰)

---

*தேற்றி—தன்வினை.

முத்திற னோர்வடிவாய் முளைத்தெழுந் தருளினையீ
தத்தகு வற்கோற ற்காமென றூலார்த்த
மெய்த்தகு பிரணவமீ யாமெனல் விளக்குதல்வாய்
மைத்தெனும் வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௧)

யாவர்செய் செயல்களுநின் னிணையடி பணிந்தாற்று
றுவதென் றருளாணை யானுமுப் புரஞ்செல்காற்
றுவிலச்சிறு பாக்கந் தனிலுனை யருச்சிப்ப
மாவருள் வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௨)

அரியயன் முதலெவர்க்கு மலக்கண்செய் விறற்சூர்மா
விருபிள வுறவெய்த வெறுழ்வலி முருகேசன்
பரவெழிற் குறமாதின் பம்பெற வேண்டிடவவ்
வரனருள் வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௩)

சனகனை யடுத்துணவு தருகென வினவியவன்
மனமகம் பிரமப்பாழ் மயன்மிக வருளாதே
இனையினி ‡யிவர்பாவ மிரிவதெங் கீர்ந்தூர்வை
வனைமுடி வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௪)

நான்பர மெனும்பாவ நசித்திடல் பிறர்க்கரிதென்
றான்புகு பசுஞானத் துறுசன கன்பானீ
தேன்புரை யருளாற்சென் றறுகினிற் றெளித்தளித்தாய்
வான்புக வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௫)

சனகனி லூர்தேயந் தமிலுண வெல்லாமுண்
டுனபசி தணியாதாங் குனைவழி படுமறையோன்
மனையிலொர் தூர்வையினின் மகோதர நிரப்பியதென்
வனைமதி வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௬)

அன்பொரு சிறிதின்றி யகம்பிரமப் பிணிகூர்
வன் பினர ளவில்பொருள் வழங்கினும் வீணுமெய்
யன்பரொரா றுகளவா யினுமது பெரிதாக்கொண்
மன்பர வாதாடு வல்லபை வரபோற்றி. (௪௭)

வேறு.

எனத்துதித் திந்திர னிரந்து வேண்டலும்
வினைத்துய ரறுத்தருள் வேழ மாமுகன்
பனைக்கைவெள் ளிபமொன்று படைத்து வானவ
மனத்துய ரொழிகென வழங்கி னனரோ. (௪௮)

அனையநாற் கோட்டிப மருளப் பெற்றவன்
பினையுமக் கரிமுகன் பிரச மாமலர்க்
கனைகழல் பணிந்துவா தாடு காரணந்
தனையிசைத் துன்பெயர் தமியன் கூறினேன். (௪௯)

‡ இவர்—நான் பிரமமென்பார்,

அன்னதெஞ் ஞான்றுசிற் கமைதல் வேண்டுமான்
முன்னவ வென்றனன் முதல்வ னன்னதே
மன்னுக வென்றருள் வழங்க விந்திரன்
றன்னகர் சென்றனன் சரண்ப ணிந்தரோ. (௫௦)

இத்தகு செயலெலா மினிது நோக்கிப
மெய்த்தகு மன்புமேன் மேலுங் கூர்தர
சித்தலும் விழைந்து வாதாடு நின்மல
மத்தமா முகனையர்ச் சித்து வாழ்த்தியே. (௫௧)

சுந்தர நாயகன் றுணைப்ப தங்களு
முந்தையி னருச்சனை முறையி னுற்றுபு
சந்தத நியதியிற் சரித்து வாழுமச்
சிந்துரக் காயிர வருடஞ் சென்றன. (௫௨)

அத்துணைக் காலமு மன்ன தன்பிரா
ரத்தமு முற்றமுன் னவின்ற சுந்தரே
சத்தனி முதல்வன்வை சாக பூரணை
யுத்தம தினத்துமை யுடன்முன் றோன்றினான். (௫௩)

கண்டயி ராவதக் களிறு காதன்மிக்
கண்டர்நா யகனெதி ரடுத்துத் தாழ்ந்துதண்
புண்டரீ கப்பதம் போற்றி யானந்த
மண்டுவா ரிதிபடிஇ வாழ்ந்து நின்றதால். (௫௪)

நின்றொளிர் களிற்றினை நிமல னோக்கிநின்
றுன்றுறு பவவினைத் தொடக்க சேடமாய்த்
தின்றெமை யிரண்டறக் கலக்கு மின்பநீ
நன்றுறு கென்றரு ளாட்டம் வைத்தனன். (௫௫)

வைத்தலுங் களிறுதன் வடிவு சோதியாய்
நித்தன திருவடி நீழல் சேர்ந்ததவ்
வத்தியி னுருவந்தன் னகத்துக் காட்டியோர்
வித்தக விலிங்கமன் விளங்கி வைகலால். (௫௬)

அத்திபூசனை யினு லத்தி யீச்சுர
மித்தலந் தமிழ்மறை வைப்பி சைக்குமால்
உத்தம விடைமதி யொளிரு வாவினின்
மத்தவா ரணத்தட மருவித் தோய்ந்தரோ. (௫௭)

வேறு.

அருள்பெருகு சவுந்தரநா யகிவாமத் தயிராவ தேசற் கன்பாற்
பொருள்பெருகு மாபூசை புரிவித்தோ ரெப்பொருளும் பொருந்தவாழ்ந்து
தெருள்பெருகு வீட்டின்புஞ் சேர்வரென மலயமுனி செப்பி னானென்
றிருள்பருகி யொளிபெருக்கு மிருந்தவமா முனிசூத னியம்பினானால். (௫௮)

ஐராவதச்சருக்கம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் ௫௫௨

# யோகநாதச்சருக்கம்.

மாதவ வடிவம் பூண்டு வஞ்சித்தாங் குறுவர் முன்னோர்க்
கேதமுன் னாவ நாளு மியற்றுவில் வலன்வா தாவி
சாதரப் புரிந்தன் னோராற் சாரிடர் முற்று நீக்கி
மேதகு நெறிநன் குய்த்த விறற்றமிழ் முனிவன் கூறும். (௧)

புலனெறி நீத்து மெய்ந்நூற் புலனெறி யொழுக்கி னின்று
நலநிறை முனிவீர் கேண்மி னான்மறை புகழ்வெண் காட்டுக்
குலநகர்ப் பச்சி மத்தோர் குரோசத்திற் பார்த்தன் பள்ளித்
தலனுள ததனிற் பார்த்த சாரதி சந்நிதிக்கண். (௨)

வயிணவ மறையோர் தங்கண் மரபின் விட்டுணுசன் மாவென்
பெயர்பிர சித்தி யாகப் பிறங்குவா னொருவ னன்னா
னயனிறை யன்பு கூர நாரணன் பூசை யாதிச்
செயலிடை யறாத தொண்டு செய்வதே பொருளாக் கொண்டான். (௩)

மற்றுள பற்று நீத்தவ் வரம்புற வொழுகி விண்டு
யற்றொரு வாதிவ் வாறு பன்னெடுங் காலம் வாழ்ந்து
பொற்றுழாய் முகுந்தன் செய்ய பூரண வருளாற் பூவிட்
டுற்றனன் விமான மூர்ந்தவ் வும்பன்வாழ் வைகுண் டத்தில். (௪)

ஆண்டுள போக நாளு மனுபவித் தமர்ந்தான் பன்னாண்
மீண்டுவா ராப்பே ரின்பம் விச்சுவா திகன்பா லல்லாற்
கூண்டுமோ விடுவச் சேனன் குறித்தவன் முகத்தை நோக்கி
யீண்டுநின் போக முற்றிற் றிறங்குதி புவியி லென்றான். (௫)

அதைவினாய் விண்டு சன்மா வையகே ளனந்த சாயி
புதுமல ரடித்தொண் டென்றும் பொன்றுறா வின்பே வேட்டக்
கதிபெறச் செய்தேன் விண்டு கருணையாற் புக்கே னிந்தப்
பதநல மிதுவு மந்தோ பதனமோ பாவி யேற்கு. (௬)

என்றுள மிகக்க வன்றாங் கெல்லையில் கால மொனொன்
றின்றிநைந் தானுக் கார வின்னமு தளித்துண் காலைச்
சென்றுண வொட்டா தாங்கோர் திறலினன் றடுத்தா னுண்பாற்
கொன்றுதுன் பெற்றோ வற்றிற் கொராயிர நனிதுன் புற்றான். (௭)

துன்புறு விண்டு சன்மா துயருளங் கவற்ற நின்று
நன்புறு பதமீ தென்றே நாடுதன் கருத்து மீளா
வன்பினால் விடுவச் சேனன் வதனம்பார்த் தோதும் விண்டு
வன்பினிற் சிறந்தோய் நோற்றிங் கடுத்துளேற் காமோ செல்லல். (௮)

அருமறை பிரம னாதி யமரர்வான் பதம்பெற் றோர்க்குத்
திருமுதல் கூறும் விண்டு திகழ்பதம் பெற்றோர் சின்னாண்
மருவிமீண் டவனி சேறல் வகுத்தகொ னீயிங் கென்னைக்
கருவின்மீண் டுறுமா கூறல் கண்ணனுட் கருத்தன் றென்றான். (௯)

என்றலும் விடுவச் சேன னிறைதரா திவனைக் கொண்டு
சென்றரி முன்வி டுத்துச் செப்பின னிகழ்ந்த வெல்லா
நன்றருள் கூர்ந்து நார ணன்விண்டு சன்மா வுள்ள
மொன்றுற வேத வாய்மை யுள்ளவா றுரைக்க லுற்றான். (௧௦)

வருதிநம் பான்மெய் யன்ப மறைபரம் பலர்க்குங் கூறல்
கருதினுங் காங்கண் ணோர்கீழ்க் கருமத்த ரவர்க்குத் தாழ்ந்து
புரிதொழி றவறா தாற்றப் புகன்றிடு முகம ணமச்
சுருதிதந் தருண்ம கேசன் சொற்றதெம் பொருட்டென் றோர்தி. (௧௧)

அதுபல கிராம நாத னக்கிரா மங்கட் கெல்லாம்
பதியெனப் பலரை வைத்தப் பதியின்கீழ்க் குடிப டீஇத்தங்
கதிகளி னடப்ப நாமே கருதுமிப் பதிக ளோர்மின்
விதியிது குடிகா ளென்று விளக்குதல் போன்மென் றோர்தி. (௧௨)

ஆதலின் மறைக ளெற்கு மயனரி யாதி யர்க்குங்
காதலி னுங்காங் கோதும் பரத்துவ முகமன் கண்டாய்
சாதலும் பிறத்த லில்லாத் தனிமுத லொருவ னேயென்
றோதுமா பதிக்கு ரைத்த லொன்றுமே மெய்யென் றோர்தி. (௧௩)

யானய னரிமுன் னோர்க ளிறத்தலும் பிறத்த லெல்லா
நூனவி றருமாங் காங்கு நுதற்கண ணொருவ னேயவ்
வீனவெம் பிறப்பி றப்பெவ் விடத்துமெஞ் ஞான்று மில்லா
னனைவை வழக்குச் செய்யு ளாலுல கறிந்த வோர்தி. (௧௪)

அன்றியு மீச நாம மடைமொழி பெறாத ரற்கே
சென்றுற லுலகி லன்னான் றிருத்தளி யீசன் கோயி
லென்றுரைத் தெம்ம னோர்கோ யில்லெலா மெம்மி யற்பே
ரொன்றுற வுலாத்து ணர்த்து முலகியல் வழக்கு மோர்தி. (௧௫)

மறைமுத னடுவி னீற்றின் மகேசனே பரமென் றோதும்
மறையெமைத் தியாதி ரென்றே வழங்குவ தன்றி யாண்டு
மறைதரா தியேய சத்தத் தான்மகே சனையே யாண்டு
மறைதருந் தியேய னென்றே புராணம் படித்தா யோர்தி. (௧௬)

இடையிடை முகம னாலே யெமைப்பர மென்னுங் கூற்றை
மடமையாற் பிணிக்கப் பட்டோர் வாய்மையென் றுணர்ந்து மீளாக்
கண்டார குறாத தர்வக் கவின்சிகை தியேயன் யாண்டு
மிடைசிவ னொருவ னேயாம் வேறுளார் விலக்கப் பட்டோர். (௧௭)

சின்மய சிவனே யார்க்குஞ் சிவஞ்செய்வோ னதர்வ முற்றிற்
றெனவுரை செய்யு மேல்யா மினிப்பிற விசைப்ப தென்னே
யினிதிவ ணினக்குச் சொற்ற விதன்முடி பியாங்க ளெல்லா
நணியுறு மாயு ளெல்லை நசிப்பது திடமென் றோர்தி. (௧௮)

யாங்களே நசிக்குங் காலை யெம்பதம் நசித்தி டாவோ
வாங்கது துணிபா நின்னை யதுபற்றி விலக்கிற் றன்று
லீங்குநீ யென்ற ஞயு னெல்லைமட் டிருக்க லாமோர்
தீங்குள விக்கி னேச நியானமுன் செய்தி லாது. (௧௯)

அவனியி னமையே நோக்கி யருந்தவம் புரிந்து வந்தா
யிவணது குறித்திம் மட்டி லீண்டுநீ விலக்கப் பட்டா
யெவர்களா னுலு நம்மை யினிதுபூ சித்த லாதி
தவவினை விக்கி னேச சரண்பணிந் தேயி யற்றல். (௨௦)

மற்றிது நமது நூலின் மந்தண முற்று நோக்கார்
தெற்றென வுணர மாட்டார் தெளிதிநீ விண்டு சன்ம
விற்றையின் விடுவ சேன னியம்பியாங் கவனி சேறி
பிற்றைநா ளுமே நிற்குப் பிரசன்ன வதனன் வாய்மை. (௨௧)

நன்றுற விளக்கி மூல மனுநவின் றக்க ணேசன்
மன்றலங் கழல்பூ சிக்கு மாபுநேர் விளக்கு வோநீ
சென்றரு டருமத் தீசன் றிகழ்ந்துவாழ் பெருந்தோட் டத்தி
லொன்றுமன் பொடுவா தாடு கணேசனு லயத்தை யுற்று. (௨௨)

திருவடி பூசித் தன்னுன் றிருவருட் பிரசா தத்தால்
வெருவரும் பிறப் பிறப்பு விலகமீ ளாப்பே ரின்பப்
பொருவரும் வீடு சேர்தி போதியென் றுரைப்பத் தாழ்ந்து
குருபர சொற்ற வாகை கூடமே லருடி யென்றான். (௨௩)

வேண்டிநின் றரிது மீண்டு விண்டுசன் மாவென் போனிக்
காண்டகு மவனி மேல்வெண் காட்டின்முற் றவத்தின் பேற்றாற்
றேண்டரு மறைக்கு மெட்டாச் சிவனடிக் கமலத் தன்பே
பூண்டொழு குறுஞ்சு வேதா ரணியப்பேர் புனையப் பெற்று. (௨௪)

## வேறு.

மறைத்திறநூ னெறியொழுகும் வைதிகன்பான் மகவாயம் மரபிற்கேற்ற
முறைச்சடங்கெ லாநிரம்ப முந்நூல்பூண் டருங்கலைகண் முற்றக் கற்றத்
திறத்துணர்வால் வேதாந்தத் தெளிவாஞ்சித் தாந்தநெறிச் செல்வனுனுன்
புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கெனுநூற் பொருண்மைதேர்ந்தாம்,

சிவந்தருசுத் தாத்துவித சித்தாந்த நலனுளவா தேர்ந்த சீரா
னுவந்திறுகப் பற்றிநித மொருவாத சிவார்ச்சனைமுன் னுரித்தொண் டாற்றி
நிவந்தொளிர்மா சிவஞான நிகழ்யோக சமாதிநிட்டா பரனுய் நின்றான்
பவந்தெறுமற் றதனுற்பேர் பகர்யோக நாதனெனப் பரவப் பெற்றான். (௨௫)

பிறிதொன்றும்வேண்டாதபெற்றியனுய்ச்சிவப்பொலிவேபெருகப்பெற்றும்
வறிதொன்று மோபூர்வ வாசனைபின் செலுத்தவதன் வசப்பட் டோர்நாள்
*பறிதுன்று மம்பரத்த பார்த்தசா ரதிவிழாப் பவனி காண்பா
னெறிசென்று சேவித்து நிகழ்வீதி போந்துநிகே தனத்திற் சென்றான்.

---

*பறி—பொன்

சந்நிதிசென் றரியடிக்கீழ்த் தாழ்ந்துபல முறையெழுந்தஞ் சலித்துநேர்நின்
றுன்னுதியா னத்துடனவ் வுவணபதி யனுமூல மொருவா றோது
மன்னவனோர் முன்னுரைத்த வருணினைந்தோ ரந்தணனு யரியாங் கெய்த
முன்னுணர்வா லப்பனவன் முகுந்தனே யெனத்தெளிந்து முன்பு தாழ்ந்து.

பார்த்தசா ரதிபாத பங்கயந்தன் சென்னியுறப் பற்றிக் கொண்டு
தீர்த்தனே யெனையாண்ட திருநாதா குருநாதா தியங்கும் வேழங்
காத்தவருட் கண்ணகோ பாலனஞ்செய் கண்ணவொண்முக் கண்ணன்வாமத்
தேர்த்தமரெந் தாய்பந்தத் தியானமுந்தி வருந்தாம மெடுத்தா ளண்ணல்.

எனத்துதித்த யோகநா தனைக்கரத்தா லெடுத்தணைத்தாங் கென்பாலன்பா
வினைத்துயருன் பாலென்று மேவாவின் புறுவாய்மை விளம்பு துங்கே
ளனைத்துயிர்க்கு மூயிராகு மாணம்பா கணேசனுட னருக்க னோடென்
றனைப்புகுத்திப் பஞ்சாய தனபூசை சிலரேகா தனத்திற் செய்வார். (௧௦)

அவர்நினைவை வரும்பரமே யபேதமெனத் துணிந்ததஃ தருணூ லுண்மை
திவளவுண ராதேனைச் சிறுநூல்க ளுணர்ச்சியினுற் றெளிந்த தேயாந்
திவியநிக மாகமத்தின் றெளிவேயா மீண்டுனக்குச் செப்பு கின்றாஞ்
சிவனுமைக ணேசன்சேய் சிவனேயா மெனைமுதலோர் சீவரே யாம். [௧௧)

உரியதொழி லாலெம்மோ டுருத்திரற்சேர்த் தொருமூவ ரென்ன வோதும்
பரிசினபே தம்பகர்தல் பழுதாம்யாம் பசுக்களவன் பசுப திசன்
றரியனவ னேவீட்டு தொழிலெமையு முளப்படவே தொகுத்தாங் காக்கும்
பெரியன்மறை யந்தமே பினுமாதி யெனும்வாய்மை பிறக்கு கின்றான். ௧௨

ஆயினமைச் சிருட்டிதிதிக் கதிபரெனப் பாவையின் வைத்தாட்டுகின்ற
தாயினம வினைப்போக மசேடமா நுகர்தரச்செய் யருளே யாகுந்
தோயும்வினை தொலைப்பித்துத் தொழுமடியார் துயர்தீர்க்குந் தொழிலேயன்றித்
தோயும்வினை யாதுமிலான் சூரன்முனம் புயமெனமுத் தொழின டாத்தும்

அறைசருவ வித்தைகட்கு மதிபதியீ சானனென லாதியாக
மறைகள்பல முறையோதும் வாய்மைமனந் தெளிந்துணர்ந்தமாண்பினோம்
முறையினமை யரனுடனு மொழியார்சிற் சிலயாமு முன்னுவோர் கொண்
டுறவருள லரனருள்பெற் றுறுவலியே யதுதருவி‡ யுதவல் போலும். (௧௪)

**வேறு**

அத்தகு பரம னத்தகை யிடரு மன்பின்முற் பூசிப்பார்க் ககறப்
பத்தியிற் பணியார்க் கதுசெய வென்றே பரவுதன் னிரீச்கணப் பயனுற்
சுத்தவண் குடிலை பிடிகளி றாகித் துன்னுமா புரிந்தருட் டோற்ற
மத்தவா ரணமா முகத்தமா தேவ வடிவனாய் வந்தனன் மன்னே. (௧௫)

விக்கின நீக்க லாக்கலென் றிரண்டும் வேண்டினோர் வேண்டிடார்க் காற்றத்
தக்கபே ரிறைமைத் தகையின்விக் கினநா தப்பெயர் மறையெலாஞ் சாற்று
மக்கணேசுரனவ் விருசெயற்கிறையென் றகிலமோர்ந் திறைஞ்சியாங்குய்வான்
முக்கணனுமைதன் மெய்க்கணன் முன்னர் முப்புரம்பொடித்திட முனுங்கால்.

---

‡ தருவி அன்னதிகள் படைக்குங்கருவி.

தந்திமா முகனை வந்தியா தேசித் தனிவையம் வையமேற் சாய
முந்தியா தரத்தாற் புந்தியோ டிறைஞ்சி முறிந்தவச் சமைத்துமுன்சென்று
னந்திலச் சிறுபாக் கம்மென வென்று மவனிமே லவிருமா லதனு
லெந்தவா னவரும் யானுமா தவரு மிபமுகற் பூசித்தே யியல்வோம். (௩எ)

மன்னிய யோக நாதநீ யும்மை வளப்பதி யிதிலெமைப் பதியென்
றுன்னினை கணேச பூசனை யுஞற்று துறுதவம் புரிந்தனை யுதனுற்
பின்னார்வை குண்டஞ் சென்றுமாங் குறையப் பெறு துமீண்டனையினியனைய
நன்னிலை தவறு திபமுகன் பூசை நவிற்றியே யருந்தவ நயப்பாய். (௩அ)

அக்கண நாதன் மீண்டிவண் வாரா வரும்பெறல் வாழ்வருண் மென்று
தக்கபே றருளுங் கணேசமா மநுவுஞ் சாற்றியப் பூசனு விதியு
மொக்கவே யருளிச் சேறியென் றுரைப்ப வுதுவினு யோகநா தன்றான்
மைக்கடல் வண்ணன் மலரடி தாழ்ந்து வரதநீ யருளியாங் கடியேன். (௩௯)

எத்தலத் தடைந்தாங் கிபமுகன் பூசை யியற்றுவலி சைத்தரு ளென்ன
நத்தல ராழி யங்கையான் யோக நாதகே ளுநிலம் பரசுங்
கொத்தலர்ப் பொழில்வெண் காட்டினி சன்க குபத்தயி ராவதேச் சுரன்று
னித்தலங் கமர்ந்து வீற்றிருந் தருளி நிசழ்பெருந் தோட்டமா நகரில். (௪௦)

சிவதளித் தென்மேற் றிசையில் வாதாடு சின்மய கணேசனைச் சேர்ந்து
நவில்விதிப் படிபூ சித்துநா டோறு நயந்துவாழ் கென்றறி மறைந்தா
னவனடி வணங்கி யோகநா தன்சென் றருட்பெருந் துடவைபோந் தனைய
பவளமா மேனிக் கணேசவா ரமுதம் பருகிநேத் திரப்பயன் படைத்தான்.

காண்டலும் விரையச் சென்றருள் பொழியுங் கயானனன் பதமலர் சென்னி
பூண்டுபன் முறைதாழ்ந் தன்புநீ ராறு புண்டரீ கப்பதத் தாட்டி [மேலடுப்ப
யாண்டவ னருள்கூர் வெள்ளத்திற் றன்றோய்ந் தானந்த வெள்ள [கேன்.
வீண்டொளிர் கணேச மாமணி சிறியேற் கெளிதினிற் கிடைத்ததென்சொல்

என்றுள மகிழ்ந்தா னின்புரு வானு னிணையடிக் கீழ்ப்பல முறைதாழ்ந்
தொன்றிய கருத்த னுய்க்குரு மொழிதந் துய்த்தகே சவனைநன் குவந்தா
னின்றிலன் விரையப் பூசனைபுரிவா னினைந்துபோந் தவனிகே தனத்தின்
றென்றிசைக்குணபாலொன்றொருவாவி திருத்தியத்தீர்த்தத்திற்றிளைத்தான்.

அத்தடப் புனல் கொண்டறுகுபட் பாதி யருச்சனைக் குரியன வமைத்து
நத்துநீஞ் சுவைமோ தகமனோ கரமா டாபூப நொலையலெள் ளுண்டை
யத்தகு நானு கோணஞ்சட் குலிக ளுபூப மவல்பொரி முற்க
மெத்திய பிட்டு கண்டுதுத் தாதி மிகுசுவை வர்க்கமோ தனங்கள். (௪௪)

முக்கனி சம்பு கவித்த முன்னுய முழுச்சுவைக் கரும்புமுன் னீட்டி
யக்கண நாதன் சந்நிதி போந்தாங் கரியுரை சிவாகம விதியிற்
றொக்கபாத் தியமா சமனமர்க் கியமுன் றூமனு முறையமைஇச் சுகந்த
மிக்குறு தயில மாதிகந் தாந்த விரைகமழ் மஞ்சன மாட்டி. (௪௫)

இடையிடை நிவேதித் திலங்குமொற் றுடை யிட்டருக் கியம்புரிந் தோவாச்
சுடர்மிகு மணிப்பொன் னுடையாவரணத்தொகை யெலாந்தகை பெறவணிந்து
மிடைதரு தூர்வை கூவிளம் வன்னி விரைசெய்மந் தாரமம் புயங்கள்
படர்மண முல்லை மல்லிகை மருமுற் பகர்தொடை பற்பல வணிந்து. (௪௬)

திசைகமழ் தூயம் பசுவினெய்த் தீபம் திருமுனப் பானுருத் திறம்போ
னசையுறு குடிலா காரமாக் கோட்டி நவிற்றுமா சமனமர்க் கியந்தந்
திசைபனே ரமைத்த நிவேதன வகைக ளியாவுமின் புறநிவே தித்து
மிசைமணங் கமழ்பா னீயமு மருத்தி மீட்டுமா சமனமுன் னளித்து. (௪௭)

பின்னருந் தூப தீபமுன் கோட்டிப் பிறங்குமா தீபமுன் னுகச்
சொன்னபல் லுபசா ரம்புரிந் தினிப் பளித தூயமா தீபமும் விளக்கித்
துன்னரி றப்புகூ விளமறு கதனுற் றாமனு வாயிரம் புகன்று
முன்னருச் சனைசெய் தனந்தரங் கணேச மூலமந் திரஞ்சதஞ் செபித்து.௪௮

ஆவியோ டனைய மனுச்செப பூச னுபல னைங்கரன் வாத
மேவுசெங் கரத்துக் குடங்கைநீ ரோடு விழுத்தகத் தத்தஞ்செய் தேத்தி
யோவிலா வன்பாற் பலமுறை யிறைஞ்சி யுறுவலம் புரிந்தனன் மீட்டும்
பூவுலகுயவீற் றிருந்தருள் கணேசன் புண்டரீ கப்பதம் பணிந்தான். (௪௯)

இவ்வகை நியம பூசனை சின்னா ளியற்றுறும் யோகநா தன்பா
லவ்வணி மாதி சித்திக ளெட்டு மடுத்தலு மவற்றைமேற் கொள்ளா
னிவ்வுல கற்ப வாழ்வையோர் பொருளா வெண்ணிலா திபமுகனடிக்கீழ்த்
திவ்விய மாநி ரதிசயா னந்த செல்வமே விழைமனத் திடத்தால். (௫0)

சிவனடி யாரெண் சித்தியே யல்ல திசைமுகன் மாதவன் முதலோ
ரிவர்பத வாழ்வும் பொருளென விழையா ரெனுஞ்சுருதிப்பொருடேர்ந்தாந்
தவமுயல் யோக நாதன்பின் சின்னாட் டந்திமா முகவனைப் பூசித்
தவணமர்ந் தொழுக வோர்பகற் பூசாந் தத்திலங் கரன்வெளி வருமால்(௫௧)

மதிநதி யிதழி யறுகணி முடியும் வயங்கருள் பொழியுமா முகமுங்
கதிர்செய்முச் சுடர்முக் கண்ணுமோ தகமொண் கவின்மருப் பங்குச பாசந்
துதைமண நாசி துலங்குமைங் கரமுந் தொந்தியு மரவபந் தனமு
முதுமறைச் சிலம்பார்குறுத்தாட்டுணையு முனிவரன்காணமுன்னின்றான்.

பவளமா மேனி திசையெலா மொளிர்ப் பரவுமூ டிகமிவர்ந் தாங்குச்
சிவகண நாதர் சூழமா லயன்முற் றேவர்போற் றெடுப்பவா னின்று
கவமலர் மாரி பொழியவைங் கருவி நாதமிக் கெழவெழுந் தருளுங்
கவளமாமுகனைக் கண்டன னுவகைக் கடல்படிந்திறைஞ்சினன்றுதிப்பான்

வேறு.

வேதாதி கலைபலவு மீதார கமுதலென விளம்பு நாதா
வாதார முதன்மருவி யாதேய வகைநிலைய வகங்கொ ணீதா
சூதாரு முலைவலவை தோய்வாம வுலகர்பெறு சுகஞ்செய் போதா
வாதாடு கயமுகதை வாதாடு நினதினருள் வழங்கு வாயே. (௫௪)

வந்தனைசெய் தந்தடியா ரந்திபகன் முந்துதுதி மரபி னோதச்
சிந்தையினி னைந்தனவு வந்துநனி தந்தருள்செய் சிவகு மார
கொந்தலர்செ றிந்துகற வுந்துறுபெ ருந்துடவை குலவ வாழ்வாய்
தந்திமுக வைந்துகர பந்தமறு முந்தைநிலை தருகு வாயே. (௫௫)

ஆறாறு கடந்தவர்க ளோயாம லடைந்துநுக ரமுத ரூப
பாறுடு பறந்தலையி லேவேழ முகன்றொலைபு பணியு மீச
சேறாய பவஞ்சவல வாழாம லுவந்துனருள் சிறிய நாயேன்
மாறாமல ருந்தியுய வாதாடு மதங்கமுக வருளு வாயே. (௫௬)

திருக்கயிலை வீதிதொறு மிசைக்குடிலை யேவடிவின் விளங்கு மீரா
யிரத்தகைய கோடுடைய விறற்கொளயி ராவணவெள் ளிபந்தன் மீதே
யருட்பெருகி யேயொழுக லுறப்பவனி போதுநிற லமைந்து லாவோர்
மருப்புறும தாசலவெ னிருட்கெடநி னருளை வழங்கு வாயே. (௫௭)

பனவவடி வாயேகி மிதிலைபர சாயோது பவனை ஞான
சனகனென லோராமை யெனவவனை நானேபி ரமமெ னீயவ்
வனகபர மேல்யானொர் பனவனுண வீயாய்நி னகமெ னேயிந்
நினைவொழிகெ னுவாய்மை தனையருளு வாதாடு நிமல போற்றி. (௫௮)

வேறு.

என்று போற்றினோர், நின்று வேண்டலு,மொன்றுமாமுக,னன்று கூறுமால்
யோக நாதநீ, தாக மோடுசெய், பாக பூசையா, லோகை யுற்றனம். (௬௦)
சோக நீத்திவண், மோக மற்றநீ, தாக முற்றவா, றாகவுய்க்குதும். (௬௧)
பிறப்பி றப்புறுத், திறற்ற வாதநம், விறக்க ழற்குள்வாழ், வுறப்பு மின்பமே
மேவு கென்றொரு, தூவி மானமே, லோவி லாதுபஃ,றேவர் போற்றிட.
உலகெ லாங்கடந், திலகு தன்சுக, நலனெ லாநிறை,யுலகி லுய்த்தனன்.
அனைய யோகநா, தனும லவங்கரன், வினைய கற்றுபூங், கனைக ழற்கணே.
ஒருவி லாதுடன், வெருவிலாது வாழ், பொருவிலின்பமே, மருவினானரோ.
என்ற கத்திய, னன்று ரைத்தலு, மொன்று மோகையே, துன்றினார்தவர்.
என்ன மாதவர், முன்ன யப்புற, நன்ன ரோதினா, னன்ன சூதனே. (௬௮)

யோகநாதச் சருக்கம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் ௯௨௦

---

## கலாவதிச் சருக்கம்.

ஒப்புயர்வில் லாச்சிவனே யொப்பாய்நீ நமையென்ற
செப்புமுக மன்னுகாத் தேற்றமே யாதன்மல
யப்பொருப்பி னமர்ந்திமையத் தமர்சிவனோர் நிறை காட்டுந்
திப்பியவண் டமிழ்முனிவன் திருந்தியமா தலர்க்குரைக்கும். (௧)

சுருதிசிவா கமசைவத் தூநெறிமா தவமுனிவீர்
பரவுதமிழ்ச் சுருதிபுகழ் பல்லவனீச் சுரத்துடனே
விரவுறுசா யாவனமு மேவுமகி மைக்கிசையப்
புரையில்பல வளமோங்கிப் பொலிவதுபூம் புகார்நகரம். (௨)

எவ்வுலகும் பெருஞ்செல்வர்க் குவமையா வெடுத்தோது
மவ்வியல்பிற் றனதனுமிவ் வணிநகரின் வளநோக்கி
யிவ்விடைவந் திருப்பவிழைந் திறையருளாற் சுவேதவனத்
திவ்வியநா மத்துறினுஞ் செப்புவதென் னதன் பெருமை. (௩)

ஆயவளம் பதிசோழர்க் கிராசதா னிகளைந்துண்
மேயதொரு பெருஞ்செல்வ வியன்பதியா மிந்நகரி
னேயமிகு புல்லார ணியசோழ வேந்துபுரி
தூயதவத் தாலொருபொற் றொடிபிறந்தாள் படிவியப்ப. (௪)

இளம்பிறையின் வளர்ந்தனையா ளெக்கலையி னுட்பொருளு
முளம்புகுதத் தெளிந்தறிவி னொப்பொருவ ரிலாத்திறத்தால்
வளம்பெருகு கலாவதியென் மாண்பெயர்பெற் றுளனைய
விளம்புதிற னொன்றோபல் வியன்சிறப்பு மேவினாள். (௫)

வனப்புநிறை யாதியுவ மன்னகன்மா ணிழைமேனி
யினிற்றெய்வ கல்லார வியன்மணமெஞ் ஞான்றுமுளா
டனக்கினுயிர்த் துணையிமயத் தாய்மலர்ச்சே வடியேயென்
றுனித்தினமு மொருவாத வுண்மைவழி பாடுடையாள். (௬)

அத்தகைய கலாவதிதன் னன்னைமுக நோக்கியெனை
வித்தையினில் வென்றவனே விழைமணத்துக் குரியனென்றா
ளித்தகையோர்ந் தவ்வேந்த னிவளுருவோர் படத்தெழுதி
யெத்திசைய வேந்தர்க்கு மிவள்கருத்தும் வரைந்துய்த்தான். (௭)

படங்கண்ட வேந்தர்களப் பைந்தொடிதன் னெழில்வனப்பு
வடங்கொண்டு பிணித்தீர்ப்ப வந்துவா தினிலுடைந்து
கடங்கொண்ட களிற்றினம்பின் காறளர்ந்து தூங்கலென
விடங்கொண்ட போற்றத்த மிடஞ்சென்று புக்கனரால். (௮)

அன்னதுணர் கலிங்கநாட் டதிபனதி மாயைவல்லோன்
மின்னிவளை வஞ்சித்து வேறுமென விழைஇத்தொழுநோய்
மன்னியவோர் பூசுரனை வசித்துண்மை தெரித்துநான்
சொன்ன வழி செய்கெனவத் துரிசுளங்கொ ளான்மறையோன். (௯)

தொழுநோயே னுருக்குறைந்தேன் சுகுணவதி கலாவதிபால்
வழுவாய செயல்புரிதன் மரபலநான் முன்வினையா
லிழிவானேன் மேலும்வினை யியற்றியினுங் கீழிழித
லழகாமோ விறல்வேந்த வெனமறுப்ப வவனுரைப்பான். (௧௦)

பனவனினைக் கொடுஞ்சிறையிற் படுத்தியிடர் புரிவலெனு
முனிவுறவே தியனஞ்சி மொழிந்தவா செய்வலென
நனிமகிழ்வுற் றருமறையோய் நானுன்னைக் கொடுபோயவ்
வனிதைபாங் குய்ப்பனீ மவுனியா யமர்கென்று. (கக)

அனையனுருச் சுவணும்ப ராதிகளா லலங்கரித்துப்
புனைமணிவண் சிவிகையினிற் புகுவித்துப் புகார்சென்றவ்
வனிதையமர் பாங்கரினோர் மணியொளியா சனத்திருத்தித்
தனியரசர்க் குணர்த்தவவன் றனுமகட் கறிவித்தான். (கஉ)

அன்னதுணர் கலாவதியாங் கடுத்தெழினிக் குள்ளமர்ந்து
நன்னரினந் தணவீண்டு நாமிருவோம் புரிவாத
மின்னதெனை நின்வேட்கை யிசைத்தியெனா லுங்கலிங்க
மன்னனிறை தருநங்காய் மற்றிவரெங் குருமைந்தர். (கந)

அற்பவறி வினர்வறிதே யறைமொழிகட் கிறையருளார்
தற்பமுடன் சித்தியெலாந் தந்திருமுன் பணிபுரியப்
பொற்புறவா ளாவிருப்பர் புகன்மொழிகட் கெதிர்வாதம்
விற்பொலிதஞ் செயல்கொண்டே விளக்குவர்நீ காணென்றான். (கச)

அதுவினவு கலாவதிநன் றருட்சித்தி வல்லாரே
லிதுபொழுதென் னுடன்மணம்போன் றியன்மணமெண் டிசைகமழும்
புதுமலரிங் கிவர்கொணர்ந்தாற் பொருநிவரே யெனவென்ற
பதியெனமேற் கொள்வனெனப் பயின்றுளதன் மாயையினால். (கரு)

ஆயிடையு ளாரெவரு மறிதரவக் கலிங்கபதி
மீயுயர்வா னெறிச்செலுத்தி வேதியனை நிதிக்கிழவன்
மேயநகர்க் கல்லார வீகொணர்வித் தாங்களித்தான்
வாயதுகண் டாள்வியந்தாள் மகிழ்கூர்ந்தாள் கலாவதியே. (கசு)

சென்னியுமங் குள்ளாருஞ் செயற்கருமச் செயனோக்கி
யின்னமறை யோன்பதியா யெளிதுறவிக் கலாவதிதான்
முன்னரருந் தவம்புரிந்த முதுசிறப்பென் சொல்கேமென்
றுன்னரும்பே ருவகையுற்றா ருடனேயச் செம்பியர்கோன். (கஎ)

தூயநலன் முழுதார்ந்த சுபதினத்தம் மறையோற்கு
வாயவெழிற் கலாவதியை மணமுறையின் மகிழ்ந்தளிப்ப
வாயவளவ் வேதியனை யவண்சாயாக் கிரகத்துண்
மேய்வியல் புண்மைதெரீஇ விதிவலியீ தெனத்துணிந்தாள். (கஅ)

சிறிதுமனந் தளராது சிவைபதமே சிந்தனைசெய்
துறுதியருள் கெனவிரப்ப வுமையருளா லுயர்வானத்
தறிவுநிறை கலாவதிகே ளணியபெருந் தோட்டத்திம்
மறையவனோ டடுத்தெம்மை வழிபடுகென் றொருவாக்கு. (ககூ)

மனமுவகைக் கடற்படிய வந்தெழக்கேட் டின்புற்று
ணினையினுல கினிலெவரு நிறைகல்வி கேள்வியே
வினியதுணை யெனத்தெளிந்தீட் டினருய்வா னிவையொற்கத்
துனவருமூற் றாந்துணையென் றுரைதிருவாக் குண்மையன்றே. (௨0)

வேறு.

காய வாணியோ ரக்க லாவதி கைக்கொ ணாயகன் பக்க மாகவே
தூய வப்பெருந் துடவை புக்குடன் றொக்க பேருண் முக்க ணாயக
ணாய சுந்தரே சன்ம கிழ்ந்தம ரணிநி கேதன வணிய ளாகிமுன்
மேய தூலலிங் கம்மி றைஞ்சியுள் விழைவி னேகிமா முகனை வேண்டியே.

சுந்தரேசனைத்தொழுதுபோற்றிமேற் றனைந்துசென் றுல கங்கள்யாவையுந்
தந்த ளித்தினி தருள்ச வுந்தரத் தாய்து ணைப்பதஞ் சார்ந்து காதலின்
முந்து மந்தண ணாய நாயகன் முன்வ ணங்குறப் பின்வ ணங்கினள்
சிந்தை யன்புமே லுந்த நற்றுதி செய்து வேண்டின ளக்க லாவதி. (௨௨)

அனையள் சார்பினா லகில மீன்றரு ளன்னை சந்நிதி யடுத்த நீரினாற்
றனைநி கர்ப்பரு முணர்வு தித்தலுஞ் சாற்று மந்தணன் போற்றி நின்றனை
னினைய ரிவ்வகை யிடைய றாமலங் கினித மர்ந்துதம் வினைதொ லைந்துற
முனம லர்ந்தபோ தாய னத்தவ முனித டத்துநா டொறுமுன் மூழ்கியே.

புனிதை யொப்பிலா முலைப தத்தினிற் பூசை யாற்றுபு நேசமிக் கெழு [நின்
வினியவைந்தெழுத்தொளிர்பெண்பாற்கிசைந்திடவுருச்சகத்திரஞ்செபித்து
றனையை யற்பொடு னினிது தித்துள மவள்ப தத்தினி லூறநி றுத்தியே
வினைமுருக்கிநால்விதியின்மெய்த்தவம்விழைவின்முப்பதுதினமியற்றினர்

அன்னர்மெய்த்தவந்தன்னைநோக்கியவமலையொப்பிலாமுலையெமம்பிகை
நன்னர் சித்திரைப் பூர்வ பக்கமா நவமி தன்னிலோர் திவிய மானமேன்
மன்னு மைங்கரன் முருகன் பாங்குற வாமை யாதியெண் சத்தி சூழ்தரப்
பின்னை வாணியிந் திராணி போற்றுறப் பிறங்கு மாரருள் பெருகிப் பாய்தர.

இருவர் முன்னெழுந் தருளி நின்றன ளெல்லையில்லதோ ரின்பவெள்ளமே
மருவி யந்தணன் றானு மக்கலா வதியு மன்னைதாள் சென்னி வைத்துள
முருகி யன்புநீர் வெளியில் வந்தென வுமைய டிக்கணீ ரமைய வாட்டினர்
திருமு னின்றிரு கரமு மொன்றுறச் சென்னி கூப்பின ரின்ன கூறுவார்.

வேறு.

அணியே யகிலத் துயிர்க்கருள் செய்யு மதுலசிந்தா
மணியே யிருகண் மணியே மணிக்குள் வருஞ்சுடரே
பிணியே யொழித்தெமை யாட்கொள நேர்வந்து பேரருள்கூர்
குணியே திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௨௭)

படியேழ் புரக்கும் படியே யருளிற் படிவங்கொண்டாய்
யடியே முயநின் னடியே யருளி யடியிற்செய்த
கடியேய் வினைவன் கடியே யொழியக் கடிதருள்பூங்
கொடியே திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௨௮)

போதே யதனின் மணமே யெனவியற் பொற்பினுற்று
மாதே வனதிடத் தோர்பெண் ணுருவின் வயங்குகின்றாய்
தீதே யொழிந்துல குய்யலான் றிருவருள் செய்தற்கன்றோ
கோதாய் திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (உகூ)

ஒன்றா யொருமூன் றெனுஞ்சச் சிதானந்த வுண்மையுரு
வின்றே சுணரப்பொன் றேங்கல் பவளக்குன் றென்னவொளிர்
மன்றாடி கந்த னிடப்பா லமர்ந்த மரகதப்பைங்
குன்றே திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩0)

அன்பொர் சிறிதில மன்று யதூநின் னருளி னல்லா
லெம்பா லுறலெங் கறியாச் சிறிய மியல்பினிறை
யன்பே யருட்கொரு கைம்மா றுளதுகொ லியருள்பூங்
கொம்பே திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௧)

கழலே தொழுமடி யார்வினை வீட்டிக் கமலபத
நிழலே புகுந்தொரு வாவின்ப நந்தரு ணேரிழைசெந்
தழலே புரைதிரு மேனியத் தீசன் றனதிடப்பூங்
குழலே திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௨)

துங்கா ரமுதிது நேரிலெச் சீவருந் துய்ப்பரிதே
நங்காதற் சேயுண் டவர்க்குறு பாகத்தி னல்கவென்றே
யங்காழி வாழ்வுண வின்பால் வளநிறை யச்சுரந்த
கொங்காய் திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௩)

படைப்போன் முதலைவ ரைந்தொழி னின்னருட் பாண்மையினு
னடப்பான் மறைஞன்மணி யீசையு மைதிரு நாமகளென்
றிடப்பா லையர்களைஞ் சத்திக ணல்கி யியக்கு மன்னே
கொடுப்பா யருள்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௪)

மதியே திருமுக மம்மா மதியின் வழங்கமுதே
துதிகூர் கருணை யுலகம் பொதுவினிற் றுய்ப்பவரு
ணிதியே யெமக்குச் சிறப்ப ருளாகி நிறையவழங்
குதியோ திருப்பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௫)

நீறுகந் தக்க மணியைந் தெழுத்து நிகழ்தரப்பல்
பேறுகந் தேதொழு வார்க்கவர் வேண்டும் பெருவரநா
டோறுகந் தீந்தரு ளன்று யருள்க துனைவிடையோன்
கூறுகந் தாய் பெருந் தோட்டத் ததுல குசாம்பிகையே. (௩௬)

## வேறு.

என்றேவழுத் தினர்தாழ்ந்தன ரமையாள்சிலை யுமையா
ணன்றாரரு ளேக்கஞ்செய நவிலந்தணன் றொழுநோய்
பொன்றாமுழு தொழிந்தேயுருப் பொன்றேசினிற் பொலிந்தான்
றுன்றாகைம லிந்தான்மலைத் தொழுதோகைபின் னருளும். (௩௭)

மறையோய்நம தாதிபூசைமுன் னியமச்செயன் மகிழ்ந்தோ
மறையாகம முதற்பல்கலை வயங்கோர்ப்புனை மருவி
நிறைவாயநின் மனையாளொடு நிறைவாழ்வினிங் கமர்ந்தே
நிறையாரருட் சிவலோகமு நீர்சேர்குதிர் பின்னாள். (௩௮)

எனவோதுபு முனநாடொறு மினிதார்வமுள் ளுறவே
தனையேபர வுயர்மாதவத் தகைசார்வலி யதனால்
வினைவேரற வொளிர்பொற்றொடி தனைநோக்கியவ் விமலை
வனிதாய்நின மனசுக்கினை மகிழ்நன்னொடு மகிழ்ந்தே. (௩௯)

இருவீருமிங் மர்வாழ்வுறு மின்பம்பெரி தெய்தி
யொருவீரென வுலகோதுற வொருவாதியைந் தீற்றில்
வருவீர்சிவ புரத்தெம்பத மலர்நீழன்மெய் வாழ்வே
மருவீரென வருள்செய்தனண் மணிக்கோயில் புகுந்தாள். (௪0)

புகுந்தாளுமெ னீங்கார்சிவை பொற்சேவடி யிணையின்
மிருந்தேதொடர் பேரன்புறு விளைவாற்றிருத் தளியு
ளகந்தூயரவ் விருவோர்களு மணைந்தார்துணை விழிநின்
றுகுந்தாரையி னனைந்தார்பினு மோவாது பணிந்தார். (௪௧)

அன்னேயெமக் குன்னாரரு ளன்றித்துணை யின்றென்
ஞான்றும்வெளி வெளிவந்தெவ ரும்பெற்றிடற் கரிய
லின்னாரு டந்தாயிதற் கெளியேங்கள்செய் கைம்மா
றென்னேதிரு வடிக்கட்டொடர்ந் தின்பேதரு மன்பே. (௪௨)

என்றும்பெரு குறுமாவருள் கொன்றூதரித் திறைஞ்சித்
துன்றும்பிரி வாற்றாதுளந் துணைச்சேவடி மலரி
லொன்றும்படி வைத்தேயொரு வாறுங்குட னீங்கிச்
சென்றும்பரும் புகழ்காவிரிப் பூம்பட்டினஞ் சேர்ந்தார். (௪௩)

சேர்ந்தங்கிரு வோரும்மனை யறத்திற்கிசை செயன்முற்
றூர்ந்தன்பொடு நாளும்புரிந் தருணூல்கள்பற் பலவு
மோர்ந்தின்புமிக் கொளிர்மாசிவ நியமத்துறை யொழுக்கிற்
சார்ந்திங்ஙன நெடுநாளமர்ந் தனர்தாரணி வியப்ப. (௪௪)

மனைவாழ்விலிவ் வகைவாழ்ந்திரு வருமொப்பில முலையெம்
மனையாரரு ளாலேதிரு வடிநீழலின் படைந்தா
ரெனவோதினன் மலயாசல வெழின்மாதவ னென்றே
நனிமாதவர் களிகூர்தர நவின்றான் முனி சூதன்.(௪௫)

கலாவதிச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம். (௩௩௫)

# திருநீற்றுச் சருக்கம்.

மாதவன் சென்னியின் மலர்க்கை வைத்தொர்பான்
மாதவ னருவுரு வடிவ மாக்கியம்
மாதவப் பூசித்த மலய வண்டமிழ்
மாதவன் மாதவர் மகிழ வோதுமால். (௧)

அருமறை முனிவிருள் ளமையக் கேண்மினோ
திருமறை யாதியாத் திகழு நூலெலா
மொருமையின் விதந்தெடுத் துரைசெய் மேலது
பொருவரு நீரது பூதி யென்பதே. (௨)

பூதியென் பதப்பொருள் புகலிற் பற்பல
மேதகு மவற்றின்முன் விளங்கி நிற்பதா
மோதுமை சுவரிய மென்னு மொண்பொருண்
மாதரை சுவரிய மென்ற வாய்மையால். (௩)

பொதுவெனப் பிறர்க்குநீர் புந்தி கொள்ளன்மின்
னதுதன தாக்கொளு மண்ண லீசனே
யிதுபெயர் பிறர்க்குமா மென்னி லன்னர்பேர்
பதிமுத லடைய[illegible]த் தன்றிப் பற்றுறா. (௪)

அடையுறா தியல்பினி லமரு மீசப்பேர்
மடலவி ழிதழிவான் கங்கை மாமதிச்
சடையுமா பதியெனச் சாற்று மப்பதிக்
குடையதே வேறெவர் பொறுபப ருப்பெயர் (௫)

தருமறை யாண்டுமீ சான சத்தத்தா
னருமதி வேணியெங் நாதன் றன்னையே
புகலுமற் றமரரைப் புகன்ற தில்லையால்
நிகழுமீ தங்கையி னெல்லி யென்பதே. (௬)

மறைமுதற் கலையெலாம் வழுத்த லன்றியு
மறைவரிவ் வுலகரா லயங்க ளங்கங்கே
யுறைவர்பே ராலர னொருவன் கோயிலை
நிறையுமீ சன்றளி யெனநி கழ்த்துவார். (௭)

ஆதலா லீசப்பே ரரனுக் கல்லது
போதரா தேனையர் பாங்கிற் பொற்புறு
மீதொரா தெவர்களு மியைவ தன்றியே
மாதரான் மறுக்கொணா வழக்கிற் செய்யுளில். (௮)

அன்னது நிற்கவவ் வமல வீசப்பேர்
மன்னுதா துவின்பொருள் வாய்மை யாளுத
லென்னலெம் மதத்தரு மிசைந்த தாதலா
னன்னரி னுலகெலா மாளு நாயகன். (௯)

ஈசனே யென்பது திண்ண மித்தகு
மீசசம் பந்தமே யெடுத்து முன்னர்நாம்
பேசுமை சுவரிய மின்ன பெற்றியாற்
பேசுமப் பானதே பிறங்கு பூதிதான். (௰)

இத்தகு பெருஞ்சிறப் பெய்து பூதியை
யுத்தம மறைகளு முபப்பி ருங்கணப்
பத்தியும் பகரிதி காசப் பன்மையு
மொத்திட வெங்கணு மெடுத்து ரைக்குமால். (௧௧)

பாவன பற்பசா பாலமென் பொர்
மேவிய வுபநிட முற்று மேதகு
தூவிய னீற்றையே சொல்லு மாண்பினு
லோவற மறையந்த மற்று மோதுமால். (௧௨)

அன்றியு முலகெலா மருள்பெற் றுய்வுற
நன்றரு ளுருக்கொடு வந்த நால்வர்தந்
தென்றமிழ் மறை யெலாம் பின்னுஞ் சேர்தரு
மின்றமிழ் நூலெலா மெடுத்தி யம்புமால். (௧௩)

இவையலால் வைணவ ரினிது சென்னிமேற்
றிவளுறக் கொளுந்தமிழ் மறையுஞ் செப்புமா
லுவமையி லித்தகு முண்மை நோக்கியே
சிவனரு ணீற்றைமா லணி திறத்தினை. (௧௪)

பாரத மாதியும் பகரும் பாங்குற
நாரண னாதியர் நயக்கு நீற்றினை
யாரண முதலவ னருளும் பூதியின்
சீரினை யுள்ளவா செப்புவா ரெவர். (௧௫)

பூதியி னியலிருண் மலத்தைப் போக்கியே
மேதகு சிவத்துவ விளக்கஞ் செய்வதே
யாதலின் மலமற வகிலத் தேவரு
நேதக மேற்கொண்மா நியமித் தானரன். (௧௬)

இருண்மலஞ் சுட்டரு ளிலக்கு பூதியை
மருவுத லறிகுறி யாவ யக்குமாற்
றெருடரு கோமயஞ் சுட்டுச் சீவர்கள்
பொருவறப் பூசுமப் புனித பூதியே. (௧௭)

அன்னநீற் றினைச்சிவ னணியும் பெற்றிதா
னென்னவுந் தன்வயி னொடுங்க வென்றுந்தான்
மன்னொடுங் காதென்றும் வயக்கந் தேற்றலு
முன்னுற வாட்டுவோன் செயலு மொக்குமால். (௧௮)

உயிர்மலப் பிணிமட்டோ வுடலிற் பல்பிணிச்
செயிர்கடி பூதமே தாளத் திண்பிணி
யயர்முத லிடரெலா மகன்றின் பாரமுந்
நயனு ருயிர்க்கரு ணன்ம ருந்திதே. (க௯)

அனையவெண் பூதியவ் வமலற் பேணியே
புனைதரிற் பலிப்பதாம் புறம தத்தர்மற்
றனையர் மந்திரங்களு மிதுகைக் கோடலான்
மனனுறப் பலித்தனோர் வயங்கக் காண்டுமால். (௨0)

ஓதுமப் பூதிதா னுடலு யிர்ப்பிணிப்
பேதுற விரண்டையும் வீட்டிப் பிஞ்ஞகன்
பாதமே வுறப்புரி பண்பிற் றேர்கதை
மாதவிர் கேண்மென வழங்குங் கும்பசன். (௨௧)

மலர்தரு வளப்பெருந் தோட்ட மாநக
ரிலகவா ழொப்பிலா முலையி டத்தம
ரலகிலா வருளயி ராவ தேச்சுரன்
குலவுபங் குனிவிழாக் கொண்டு லாவரும். (௨௨)

அத்திரு விழாவிலைந் தாய நாளினில்
வித்தக மால்விடை விமல னூர்ந்தரு
ளுத்தம வுலாத்தரி சிக்க வுற்றனர்
பத்தியி னைவர்நாங் கூரிற் பார்ப்பனர். (௨௩)

ஐவரு மங்கணத் தீச னம்பொற்றாண்
மெய்வரு மன்பினின் விதியிற் போற்றியாங்
குய்வருள் சிவப்பிர சாத வொண்பொருட்
டிவ்வியநீ றுகைக் கொண்டு சென்றனர். (௨௪)

சென்னெறி மணிகன்னித் தீர்த்த வொண்கரை
யின்னிமிர் போதியி னிருந்த வைந்தொகை
வன்னிலைப் பிரமராக் கதத்துர் மண்ணைக
ளன்னரைப் பற்றியா ரஞர்வி ளைத்தன. (௨௫)

அஞ்சினர் நடுங்கின ரய்யகோ விவண்
நஞ்சணி கண்டனை நமந்து சேறலாற்
செஞ்சுட ரின்றியிவ் விரவிற் சென்றனம்
வஞ்சக வன்கடி வளைந்து பற்றின. (௨௬)

அவ்வயி ராவதே சன்ற னாரு
ளிவ்விடை யுதவில தென்னி லேழையே
மெவ்வகை யுய்துமென் றெணியத் தீச்சுரன்
றிவ்விய நாமமந் திரங்கள் செப்பினார். (௨௭)

அன்னரு ளொருவனவ் வமலன் கோயிலின்
முன்னுயப் பெற்றவம் மூதவெண் ணீற்றினை
யின்னதே காப்பது காப்பி தன்பெய
ரென்னலா லெனத்துணிந் தெடுத்துத் தூவினான். (உஅ)

தூவிய பூதியத் தூவி னான்முதன்
மேவிய வைவர்மேல் விரவிற் றன்றியு
மாவயிற் றீச்செய லாற்று மைந்தொகைப்
பாவவன் கடிகளின் மேலும் பட்டதால். (உ௯)

பனவர்மேற் படலுமுன் பிடித்த பற்றொரீஇ
மனம் வெரீஇ யொதுங்கிய மண்ணை தம்மினு
மனையநீ றுற்றதா லறிவு தோன்றலு
முனமுறு மயர்க்கிவை மொழிய லுற்றன. (௩0)

அருமறை யந்தணீ ரைவர் கேண்மினீர்
வருமா பினின்முனம் வந்து ளேமியாந்
திருமறை நெறியினிற் றிறம்பித் தீச்செயல்
வெருவுறப் பற்பல விளைத்த நீர்மையால். (௩க)

நம்பதி நாங்கையின் னண்ணு பல்லவன்
வெம்பிய வுளத்தினெங் களத்தை வீட்டினான்
வம்பினி லிறந்தன மற்றிச் செய்கையா
லிம்பரி னலகையா யிடாின் மூழ்கினம். (௩உ)

அவ்வெலா முரைப்பரி தடியிற் செய்தவெத்
திவ்விய தவங்கொலோ சேர்த்திநும்மையீண்
டிவ்வயி ராவத வீசன் பூதிநுங்
கைவ்வழி யெம்முடற் கதுவப் பெற்றனம். (௩௩)

அனையவெண் ணீற்றின்மாண் பறைதற் பாலதோ
வெனையரும் வல்லுன ரல்ல ரின்னினி
நினைபுநீர் செய்வதொன் றுண்டு நேயர்கா
ளினையுமிவ் வினைதபுத் தெம்மைக் காக்குதிர். (௩௪)

பிதிரரை நன்னெறிப் பெறுத்தன் மக்கடம்
முதுசெய லென்பது மொழிய வேண்டுமோ
கதுமென விப்பெருந் தோட்டக் கண்ணுளா
னிதமிகு சித்தபுங் கவனை யெய்திநீர். (௩ரு)

எம்மையிவ் வுருவிட ரிரித்தற் காயதோர்
செம்மைநீர் கேட்டிரேற் செப்பு முள்ளவா
றம்முறை செய்தெம தலக்கண் டீர்த்திரா
னும்மைவேண் டினமென நுவன்ற மண்ணைகள். (௩௬)

அதுவினா லையவரு மவலந் தீர்மினீ
ரிதுபொழு தேகிநும் மிடர்தொ லைத்துமேற்
கதிபுக வுய்ப்பதோர் கருமஞ் செய்துமம்
முதுவனை வினாவென மொழிந்து சென்றனர் (௩௭)

சென்றவ ரமலனத் தீசன் சேவடி
நன்றுளத் திருத்தியெந் நவையுந் தீர்ந்தரு
ளொன்றொரு யோகியா யுலகச் சார்பெலாம்
வென்றொளிர் சித்தபுங் கவனை மேவினார். (௩௮)

அவனடி பலமுறை யன்பிற் றாழ்ந்தனர்
கவலுள முகத்தினிற் காட்டி யவ்வெலாம்
பவியமோ டுரைத்தனர் வினாயப் பண்ணவன்
றவலற வவர்முக நோக்கிச் சாற்றுமால். (௩௯)

அந்தணீர் நும்முனோ ரலக்கண் டீர்க்கெனப்
புந்தியாற் சுந்தரே சுரனைப் போற்றிமுன்
சிந்துவின் மூழ்கிநீர் திருவெண் காட்டினின்
முந்துறு வடநிழற் சிராத்த முற்றிமேல். (௪௰)

ஆங்குறு கணேசபா தத்திற் பிண்டமுய்த்
தோங்கருட் பிரகசா யகியெம் முத்தமி
பாங்கனைச் சிதவனப் பரனைப் போற்றியே
நீங்குறு தடுத்தநா ளூணவு நீங்குமின். (௪௧)

பூருவ திக்கிற்போ தாய னேசனைச்
சாருமங் கியினிற்றன் றோன்றி யீசனை
பெருறு தென்றிசைக் கோத மேசனை
யோருந்தென் மேல்வலம் புரத்து வீசனை. (௪௨)

நவில்பா தீசியி னாக நாதனை
யிவர்தரு காற்றிசை மதங்க வீசனைத்
திவளுதீ சியினில்யோ கேச னைத்திற
லவிர்வட கிழக்கிலிவ் வத்தி யீசனை. (௪௩)

அருச்சனை விதிமுறை யாற்றி யன்பினாற்
கருத்தபி ராயதே சன்றன் கான்மலர்ப்
பொருத்துபு சந்நிதி புகூஉப்பஞ் சாக்கர
வுருச்செப மயுதநீ ருஞற்றல் வேண்டுமால். (௪௪)

இவ்வகை புரியினும் பிதிர்க்க ளெவ்வமீத்
தவ்வருட் கயிலைபுக் கமர்வ ரென்றனன்
செவ்விதி னவனடி பணிந்து சென்றவ
ரைவரு மவ்வகை மரபி னாற்றினார். (௪௫)

அரியவர் கோன்பயி ராவ தேச்சுரன்
றிருமுன முடித்தருள் பெற்ற சீர்மையாற்
பிரமராக் கதவுருப் பிதிர்க ணீங்கியே
சுரர்தொழக் கயிலையிற் றுன்னி வாழ்ந்தனர். (௪௬)

பெருந்தவம் புரிந்தவிப் பிரர்க ளைவரு
மருந்துணை வன்னயி ராவ தேச்சுரன்
மருந்துற ழாரருண் மாண்பி னாலெழி
றிருந்துசற் புத்திரச் செல்வ மாதிய. (௪௭)

இம்மையி னின்பெலா மெய்தி வாழ்ந்தன
ரம்மைவா னின்பமு மனுப வித்தன
ரும்மையின் வினையெலா மொருவப் பெற்றனர்
செம்மையிற் சிவபுரஞ் சென்று வாழ்ந்தனர். (௪௮)

இத்திற னொன்றுகொ லினைய பற்பல
மெய்த்தகு பூதியின் மேன்மை தேற்றுவ
வுத்தம நீறுதா ரணமொ ழிந்துசெ
யெத்திறச் செயலினும் பலனொன் றின்றரோ. (௪௯)

ஆதலிற் பூதிதா ரணத்த யர்ப்பிலார்
மேதைய ரெவ்வெவச் செயலும் விக்கின
நாதனை யிறைஞ்சியே நடத்து வோர்களும்
பூதிதா ரணமுதற் போற்றி யாற்றுவார். (௫௦)

ஐங்கர னருளுமென் றடிவ ணங்கியித்
துங்கநீ ரிடார்களாய்த் தொடங்கி னச்செயற்
பங்கமே புரியுமப் பரனு மாதலி
னங்கவ னருளுமிக் காப்பி னாகுமால். (௫௧)

எங்கணு மெவருந்த னிறைஞ்சி னேதொடங்
குங்கரு மம்முடிக் குதலைமேற் கொளும்
புங்கவன் றானுமிப் பூதி நோக்குமே
லிங்கிதன் பெருமையா ரியம்ப வல்லுநர். (௫௨)

என்றுமா மலயவெற் பிருக்கு மாதவ
னன்றுமா தவர்வினாய் நயக்க வோதினா
னொன்றிய சிந்தையீ ருணர்மி னென்றுநேர் (௫௩)
துன்றுமா முனிவர்க்குச் சூதன் சொற்றனன்.

திருநீற்றுச் சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் (௭௧௮)

# மூககவிச் சருக்கம்

சகத்தியன் மொழிக ளெல்லாந் தலைக்கொள வினிமை வாய்ந்த
சுகத்தியன் மொழிதான் மேன்மைத் தூயசெந் தமிழே யென்றம்
பகத்திய னுதலீ சன்பாற் பயின்றுல கெல்லா முய்ய
வகத்திய வியனூ றந்தோ னருந்தவர்க் கருளிச் செய்யும். (௧)

இந்திய நெறிக ணீத்தவ் விந்திய னெறிச்கொள் வேணி
நந்தியங் கழல்கள் பாச நந்திய வன்பர் சென்னித்
தந்திய லருளே நல்குந் தந்தியங் குரித்தோன் பாத
முந்திய வன்பிற் போற்று முதுதவ முனிவிர் கேண்மின். (௨)

அணிதிகழ் பெருந்தோட் டத்தி னணிமையோர் பதியில் வாழ்வோன்
கணியுருத் திரசன் மாவென் கவின்பெயர் மறையோன் றன்கண்
மணியென வருளாற் பெற்ற மைந்தர்க ளைவர் தம்மு
ணணியவக் கனிட்ட னீசா னப்பெயர் வகிக்கப் பெற்றோன். (௩)

அன்னவீ சானன் வாய்மை யருந்தவ நிந்த ஞாதி
முன்னுரை வாக்கின் றோட முதிர்வினைச் சார்பி னானே
வென்னுரை செய்கே மற்றை யின்குண மெல்லாம் வாய்ந்து
முன்னல்வாக் குரைக்கொ ணாம லூமையா யுற்றா னந்தோ. (௪)

தனையன தூமை நீங்கத் தந்தைமந் திரமுன் மூன்று
வினைநனி புரிந்து மூகம் விலகுறு மையினி னைந்து
முனைவினை தபுத்தி யார்க்கு முன்னிய நல்கு மங்கைக்
கனியயி ராவ தேசன் கழலெனக் கடைப் பிடித்தான். (௫)

அன்னதே துணிவாக் கொண்ட வத்தனத் தனயற் கொண்டு
பொன்னகர் சமழ்க்குஞ் செல்வப் புகழ்ப்பெருந் தோட்ட மேன்மை
முன்னினன் கடிது சென்று முன்னுறு முனிதீர்த் தத்தின்
மன்னுசங் கற்பம் பேசி மைந்தனோ டாடிப் பின்னர். (௬)

பூதிகண் டிகைகள் பூண்டு போற்றுறு நியம முற்றிச்
சோதியைந் தெழுத்து மெண்ணித் தூலலிங் கத்தைத் தாழ்ந்து
மூதெயி லத்தி சத்துண் முன்னியைங் கரனெம் பெம்மான்
பாதமுன் னிறைஞ்சி யுட்கோள் பகர்ந்திடர் பாற்றல் வேண்டி. (௭)

ஒப்பிலா முலையெம் மன்னை யொண்பதம் பணிந்து போற்றி
முப்புரம் பொடித்தும் மூவர் முருங்கிடா தமர்ந்த தொன்றோ
வெப்பகற் றருளா னந்த வெள்ளந்தோய்ந் தொளிர்பே ரின்பே
துப்புற வருளிச் செய்த தூயவத் தீச்சு ரன்றன். (௮)

திருமுணம் விரையச் சென்று திருவடி செல்வ னோடு
மொருமையி னிறைஞ்சி யுள்ளத் தூற்றெழு கவற்சி மல்கப்
பெருகுமன் புறநேர் போற்றிப் பிஞ்ஞகா பெருந்தோட் டத்தி
னருணிறை கடலே நாயே னலக்கண் டீர்த் தருடி யென்றான். (௯)

மைந்தனும் வாய்த்தொண் டாற்றும் மாண்பிலா மையினு ளுள்ளா
னைந்தனன் பெருந்தோட் டத்தி னுதனே நாயே னின்னை
முந்துநூ லோதி யோர்ந்து முதுக்குறை வுற்று வாக்காற்
சிந்தையி னினைந்தாங் கேத்துந் திறனிலாப் பாவி யானேன். (சo)

அருளயி ராவ தேசா வமலனே யடைந்தா ருள்ளந்
தெருளுற வின்னன் முற்றுந் தீர்த்து மேல் வரங்க ணல்கு
மொருபெருஞ் சுடரே நாயே னுறுகண்டீர்த் தருள்வா யென்றே
கருதினன் கண்ணீர் வாரக் கழலிணை பலகாற் றாழ்ந்தான். (சக)

இத்தகு நியதி நாளு மியலவிப் பெருந்தோட் டத்தி
லத்தனே டீசா னன்று னருளின்வாய் பேசுங் காறுந்
துய்த்திலே னென்று மென்னுந் துணிவுறு நியமம் பூண்டு
புத்தியாற் பணிந்து நாளும் போற்றியாங் கமர்ந்தான் மன்னோ. (சஉ)

அவ்வழித் திங்க ளோரா றகலவைப் பசிமா தத்திற்
றவ்வலில் பூர்வ பக்கத் தசமியிற் சுந்த ரேச
னெவ்வமீத் தருள்வான் வாமத் திமாசலை வீற்றி ருப்பத்
திவ்விய விடைமேற் கொண்டு சென்றெதிர் நின்ற னாங்கே. (சங)

கண்டுள மகிழ்ந்தீ சானன் கரஞ்சிரங் குவியக் கண்ணின்
மண்டுநீ ரருவி பாய வளருடல் புளகம் போர்ப்பப்
புண்டரீ கத்தா டாழ்ந்தான் பொள்ளென வுமையெம் பெம்மான்
மண்டுபே ரருளான் மூக மாறிவாக் கிறையாய்ப் போற்றும். (சச)

வேறு.

சங்கர புரகர வரகர சிவகர சாந்தவுமா
பங்கர பாலவி லோசன மோசன பாதகபூ
துங்கர தாருட சோம சடேசுர சூலதர
செங்கர பிரகது யான வத்தீசசி வாயநம. (சரு)

புராதன பராபர நிராகர சுராதிப பூசிதனே
கராசல சருமவே காசபு யாசல காமரிபோ
நிராமய புராதிப சராசன வராசல நிகமசுப
சிரோதய பிரகது யானவத் தீசசி வாயநம. (சசு)

கந்தக ணேசுர சனககிர் பாகர காலகர
சுந்தர நாயக வதுலகு சாம்பிகை தோய்வாம
கந்தர நிபமணி கந்தர வந்தித கணசால
சிந்தன பிரகது யானவத் தீசசி வாயநம. (சஎ)

சூகர மாயன கோசர பங்கய துங்கபத
சாகர மாகரு ணாகர நாயக சாம்பசிவ
மாகர வாரிச வாசன கோசர மதிநதிசார்
சேகர பிரகது யானவத் தீசசி வாயநம. (சஅ)

பாவன மாதவ பாரிட நாயக பூதபதே
பூவன மாமண மாமென வேதநிறை பூரணனே
தேவண நீறணி தேகசம் யாகமெய் தேற்றமுடிச்
சீவன பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (கக)

சீதர மானய னும்புய பூசித திவ்வியசீ
பாதச ரோருக நேமிசு தாயக பாரதிசார்
வேதன சேகர பேதக ராங்குளி மென்னகவேற்
சேதன பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (உ0)

அரியய னுதியர் வேய்தொடை தாமுணர்த் தூமையினல்
விரிமல ரிதழிகண் கூடிற யார்க்கும்வி ளக்குதலாற்
பிரணவப் பொருள்பிற ரலர்சிவ னெனெனப் பேசரனே
திருவளர் பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (உக)

பலந்தரு புன்மதப் பாழில்வீ ழாதுறப் பண்டுபுரி
தலந்தரு சைவநன் னெறிச்சரி யாதியிற் சார்ந்தவர்பாங்
குலந்தவர் பலந்தெற நிலந்தெதிர் புகுந்துணர் வுறுமுறையே
சிலந்தரு பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (உஉ)

ஏமசம் யாகச மீதலை தூர்வையி ரும்பைநதி
சோம துரோணகு ரண்டவில் வாதிது றந்நியவி
யோமச டாதர நாமபல் லாயிர யோகீச
தேமரு பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (உ௩)

ஈசச தாசிவ பாசவி நாசவி மாசலையார்
நேசசு யம்பிர காசந யந்தரு நீள்கருப
வாசசி தம்பர வாசந டேசவ டேசசிவ
தேசமர் பிரகதுய் யானவத் தீசசி வாயநம. (உ௪)

வேறு.

என்று துதித்தான் முகநோக்கி யெந்தை யயிரா வதநாத
னன்று மகிழ்ந்தோ மீசான நமைநீ துதித்த நுதிநோக்கித்
துன்றெந் நூலு மையமணுத் துணையு மறவுட் டுணிந்தோர்ந்து
நின்ற வியாழன் றனையொத்தாய் நீயென் றருளி மேனிகழ்த்தும். (உ௫)

வருதி யீசா னப்பெயரோய் வனப்பாற் கோடி மன்மதனைப்
பொருதி செல்வத் தாற்றனதற் புரைதி தீர்க்கா யுளும்பெறுதி
சுருதி யாக மந்நெறியின் துறைநின் றிகவாழ் வனைத்தெய்திக்
கருதி யீற்றி னம்பதமுங் கைக்கொண் டமர்தி யெனக்கரந்தான். (உ௬)

தன்னோர் வருமா ரருண்மணிவா சகவாழ் வாலோர் மூகைவிடை
முன்னே தரச்செய் யத்தீச முதல்வன் றனை நேர்புரிந்த.
தன்னே வுணர்ந்து மெய்ப்பொருளு மவனே யன்பர்க் கினிதருளு
மென்று விறைஞ்சி யிட்டசித்தி யெய்தப் பெறுூர்க்கென் னிசைப்பதுவே.

அலகி லின்பக் கடற்படிந்தாங் கனைய வீசா னன்றெழுது
தலைவ னயிரா வதேசனரு டன்னை யுன்னி யுன்னிமன
முலையின் மெழுகாய்ப் பெருந்தோட்ட மொருவ லாற்று ளொப்பில்லா
முலைகோ னடிக்கீழ் மனங்கிடப்ப முன்னி னன்றன் மூதூரில். (உ௮)

ஆங்க ணமருங் கல்விநிறை யறிவாற் சிறந்த வீசானன்
பாங்கு பலதேத் தினும்போயப் பார்த்தி பேசர் பண்டிதர்க
ணீங்க லரும்பே ருவகையுற நிறைநூற் பொருள்க ளெடுத்தோதி
யோங்கு பொருள்பற் பலவெறுப்ப வுதவக் கொடுதன் னூர்புக்கான். (உ௯)

இருவே றுலகத் தியற்கையென வியம்பு பனுவற் பொறட்கிலக்காய்
மருவா வீசா னன்னனைய வகைய கல்வி செல்வநிறை
பொருளா வுலகிற் பிறரெவரும் பொருவா நிலையா லெழில்குணத்தாற்
பெருகா நிற்கு நிலையுணர்ந்து பிறங்கு புகார்மா நகர்க்கரசன். (௩௦)

நாக வன்மா வென்பான்றன் னலங்கூர் சுதைகோ மளையொத்த
பாக முடையா ளாதலினப் பரவீ சான வேதியற்கே
தாக முறநாங் கொடுத்துமெனத் தானே வேண்டி மாபினளித்
தோகை யுறவம் மருகேதன் னமைச்சு மாக வுடன்கொண்டான். (௩௧)

மருக னாகி நனியுரிமை யமைச்சு மாகி வயங்குறுமப்
பொருவி றிறலீ சானனுமப் புவிவேந் தளித்த திறத்தினுஞ்சீர்
பெருகப் புரந்து வருநாளிற் பிறங்கு கல்வித் திறத்தினல்
விரவு சமயா தீதமாய் வேதா கமநூற் றுணிவினதாய். (௩௨)

சிவ ரெவர்க்கு மெஞ்ஞான்றுந் திரும்பா வீடு தருவதாய்ப்
பாவு சமய மெவற்றினுமு பாதி யிலதா யவைதன்கீழ்
மேவு முறையிற் சோபான வி௲த்தவாசத் தழிஇக் கொண்டு
தாவி லாது நின்றொளிர்சுத் தாத்து விதசித் தாந்தமென. (௩௩)

உலகெ லாமு முள்ளபடி யுணர்ந்து சென்னி மேற்கொள்ளுந்
திலக மாகுஞ் சைவநெறித் திறனே யாண்டுந் திகழவளர்த்
துலவு மேனை யுள்ளீடில் லுவலை மதங்க ளொழித்தென்றுந்
தலைவ னயிரா வதநாதன் சார்போர் சிறிது மறவானாய். (௩௪)

இம்மை நெடுநாட் கோமளையோ டின்புற் றமர்ந்து வினையுலப்பச்
செம்மை தருவான் சிவனடிக்கீழ்த் திகழ்பே ரின்புற் றமர்ந்தானென்
றெம்மை யருண்மா மலயமுனி யிசைப்ப மகிழ்ந்தார் மாதவரென்
றும்மைத் தவத்தா னுயர்சூத னுரைத்தா னுறுவ ருளங்களித்தார். (௩௫)

முககவிச்சருக்கம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௭௫௩.

# வாரணேசச் சருக்கம்.

கதிமதி யிதழி வேணி நாதனைப் போற்றும் பேற்றி
னதிகமெய் யடியார்ப் போற்றி ரகசியத் தவனே சொற்றான்
றுதிதர வெனவெண் ணொன்பான் றொண்டர்மான் மியவி லாசங்
கதிபெற வுலகு செய்த கனிதமிழ் முனிவன் கூறும். (௧)

திருந்துமா தவத்தீர் கேண்மின் றிருப்பெருந் தோட்டத் தென்றும்
பொருந்திவாழ் பரம்ப ரைச்சீர்ப் புனிதாத்து விதசித் தாந்த
வருந்துணைச் சைவ வேளாண் குலத்திலங் நாட்கார் காத்த
பெருந்துணை மரபில் வந்தோன் பெருஞ்செல்வ னொருவ னுள்ளான். (௨)

அன்னவன் கனக நாம னறத்துளில் லறமே யெனைத்
துன்னுமூ வர்க்கு நன்மைத் துணையெனு மெய்ந்நூ லோர்வா
னன்னிலை யறமே பூண்டவ் வறநெறி வழாம லோம்பி
மன்னயி ராவ தேசன் மலரடி வழுத்தி வாழ்வான். (௩)

குருவிலக் கணமுற் றோர்ந்த குரவனை வழிபட் டேத்தித்
தெருள்சிவ தீக்கை வாய்ந்து சிவார்ச்சனை நியமம் பூண்டு
மருளறு முளத்த னாகி வாழுநாள் வார ணேசன்
றிருவரு ளதனாற் பெற்றான் றிகழ்மணி யெனவோர் சேயை. (௪)

அன்னவன் குழவிக் காம்பே ரருளயி ராவ தேசன்
றன்னடி மறவா வாய்மைச் சார்பினால் வார ணேச
னென்னவைத் தழைத்தா னந்த விளஞ்சிசு தன்பா லீச
னின்னரு ளென்ன நாளு மெழின்மிக வளர்ந்த தம்ம. (௫)

வளர்தரு குமரன் பிள்ளை மைப்பரு வத்திற் றானே
பளகறு குரவன் றன்பாற் பலகலை யாய்ந்து தேர்ந்து
கிளர்திரு வருள்கை கூடக் கெழீஇயயி ராவ தேச
னளவறு மாண்பு தேர்ந்தாங் கவனடிக் கன்பே பூண்டான். (௬)

அத்தகு வார ணேச னடைந்துதன் குலாசான் றன்பாற்
பத்தியிற் றீக்கை பெற்றுப் பாசிவார்ச் சனைமேற் கொண்டு
நித்தலு மன்பு கூர நிகழ்த்துவான் றன்கு லத்தோர்
சித்திரப் பாவை யன்ன சேயிழை தன்னை வேட்டான். (௭)

அருந்ததி யனைய கற்பி னாயிழை யவளோ டில்லிற்
றிருந்துநூன் முறையின் வாழ்நாட் சினவிடை வார ணேசன்
முருந்தன முறுவ லொப்பி லாமுலை யுடனன் பால்வீற்
றிருந்தருள் சினக ரத்து ளென்றுஞ்சென் றுறுவா னோர்நாள் (௮)

அருளுமத் தீச னென்று மமர்ந்தரு ணிகேத னந்தான்
பொருளிலா ரில்லம் போலப் புனைதரப் பெறாம லந்தோ
தெருடரு மிடங்க ளெல்லாஞ் சீரண மாகக் கண்டு
மொருசிறு கவலு மின்றி யொழித்தனன் பன்னா ளையேன். (௯)

உலகெலா முடைமை யாக்கொண் டுயிரெலா மடிமை யாக்கொண்
டலகிலா வரங்க ணல்கு மண்ணனம் வார ணேசன்
கிலமதா மிடத்தி ருப்பக் கெழுமணி மாட மேவிப்
புலனெலா நுகர வாழ்ந்தேன் புன்மையே னென்செய் தேனே. (௧0)

அன்புளேன் போலப் பன்னா ளருச்சனை செபந்தி யான
மென்பன புரிந்தேன் யாரு மெனைநன்கு மதித்தற் கன்றிப்
பின்பய னுறற்கென் றுமோ பேதையேன் பிரான்பாற் செய்யு
மன்பெனும் பின்பு சாரு மந்தகற் கிசைப்ப தென்னாம். (௧௧)

புதிதினோர் சிவால யஞ்செய் புண்ணிய பலனிற் கோடி
யதிகமாம் புராத னத்தி னம்பழு தறத்தி ருத்து
மிதனினு நல்வாற் றானு மியற்றுதற் காற்ற லுள்ளார்
துதியுறப் புரிந்தி டாரேற் றுன்னுவர் சிவத்து ரோகம். (௧௨)

அன்னதா னீங்காத் துன்பே யடைவரப் பணிபு ரிந்தோர்
முன்னுறு மிட்ட சித்தி முற்றும்பெற் றொருவீட் டின்பும்
பின்னுறு வாரென் றோதும் பிரானருள் சிவாக மங்க
ளென்னநின் றுய்ந்தாய்ந் தேங்கி யிலங்குமத் தீச்சு ரன்றன். (௧௩)

திருமுனம் பணிந்து போற்றித் தேவதே வீச னேநின்
பெருநிகே தனங்கி லங்க ணீங்கிமுன் பெற்றி போலப்
பொருவிலா தொளிர்வா னாயேன் புதுக்குபு தரிசித் துய்வா
னருளுதி யென்ன வேண்டி யகன்றுதன் மனையிற் புக்கான். (௧௪)

அன்னதே கவலை யாப்பேழ் கணித்தமர்ந் தனனாங் கண்ண
றன்னடிக் கன்பர் துன்பஞ் சகித்திலான் கனமுந் தாழா
னின்னலங் குடனே மாற்றி யின்பருண் மென்ப தோர்ப்பா
னன்னரவ் வார ணேசன் கனவிடை நண்ணிக் கூறும். (௧௫)

வருதிநம் பான்மெய் யன்ப வயங்குநந் தளிபு துக்கக்
கருதிநீ வருந்து முள்ளக் கவற்சியை யொழிதி யீண்டுத்
தருதுமோர் முத்த மன்ன தாளத்தை நம்போற் பாவித்
தொருவற நாளும் பூசித் துறுதிநீ யுறுதி யீதே. (௧௬)

நின்னுளத் தெண்ணி யாங்கெந் நிகேதனம் புதுக்க லாதி
நன்னிலை புரிதற் காக நயந்திடு பொருள்க ளெல்லா
மிந்நிலை முத்த மொன்றே யென்றுநிற் களிக்குங் கோடி
யென்னவங் கைக்கொ டுத்தா னிலங்குமந் நித்தி லத்தை. (௧௭)

தன்றிரு வருளைத் தானே தவலறத் திரட்டி யீந்தா
னென்றறி வாளர் கூற யீந்தவந் நித்தி லத்தை
நன்றிரு கரத்தா லேற்று நமந்துளத் துவகை பொங்க
நின்றனன் வார ணேச னிமலன்மே லருளிச் செய்யும். (௧௮)

அன்பரீ யிணைய முத்த மருள்பொருள் கொண்டு கோயி
னன்புறப் புதுக்கி மேலு நயந்தபல் லறம்பு ரிந்து
பின்பெம துலகஞ் சார்ந்து பிரிவற வடிக்கீழ்ச் சார்பே
ரின்பமுற் றமர்வா யீற்றி லிம்முத்தங் கடலி லுய்த்தி. (௧௯)

தாரணி வியக்கு முத்தந் தருதலா ணம்பேர் முத்த
வாரணே சன்னென் றெங்கும் வயங்குக நினக்கு மைந்த
சீரருள் புரிந்த மேடத் திங்கண்முற் பக்கந் தன்னிற்
சாரிரண் டாந்தி திக்கட் சார்ந்தெமைப் பூசிப் போர்க்கு. (௨0)

தனதனிற் சிறந்த செல்வஞ் சந்ததி முதற்பே றெல்லா
மினிதருள் புரிது மென்றாங் கிறைமறைந் தருளி னனப்
புனிதனும் வார ணேசன் பொள்ளென விழித்துக் கையி
ணதிதிகழ் முத்துங் கண்டு நவிலரு முவகை கூர்ந்தான் (௨௧)

எந்தைநம் முத்த வார ணேசனீண் டெளிய னேற்குத்
தந்தபே றருளென் சொல்கேன் றாயினு மினியா னென்றே
முந்துநூ லுரைப் பதங்கை முத்தினுந் தெளிந்தே னென்றான்
அந்திவான் மதிமி லைச்சு மண்ணலைத் தொழுதான் பல்கால். (௨௨)

இந்துசே கரனேர் தந்த விந்தினு மொளிரு முத்தை
முந்துமான் மார்த்த லிங்க மாக்கொடு மூன்று போதும்
புந்திசெய் தன்பி னித்த பூசனை புரிந்து நாளுந்
தந்திர மரபி னைமித் திகங்களுஞ் சமைப்பான் மேலும். (௨௩)

பூசனை முடிவி லந்தப் புனிதவான் முத்த லிங்க
வாசனை நேர்நின் றன்பின் வழுத்துவான் வழுத்துங் காலை
தேசனை வருக்கு நல்குஞ் சிவனரு ளாலம் முத்தின்
னேசனை யாத ளிக்கு நிறைபெருள் கொண்டு வப்பான். (௨௪)

மறுவறு முளத்து வார ணேசன்மா நேச னெங்கு
நிறையயி ராவ தேச னிகேதனம் புதுக்க நூலின்
முறைதெரி சிற்பர்க் கொண்டு முன்புசீ ரணமா யுள்ள
குறைகளோர் சிறிது மின்றி முன்னிலுங் குலவச் செய்தான். (௨௫)

இத்தகு கோயிற் றென்மேற் கினிலமர்ந் தென்றும் வேண்டு
மெத்தகு பொருளு மன்பர்க் கினிதெளி துறுமா நல்கு
மெய்த்தகு திறல்வா தாடு விநாயகா லயமும் வாய்மைப்
பத்தியிற் புதுக்கி மேலும் பண்புற விளக்கி னனால். (௨௬)

ஆங்குள தீர்த்த மான வணிமலர்த் தடங்க ளெல்லாம்
பாங்குறத் திருத்திச் சூழும் படித்துறை யாதி பண்பி
னோங்குற விளக்கி மேலு முறுபணி பலவும் பாசத்
தீங்கறு வார ணேசன் றிருந்துறப் புரிந்து வந்தான். (௨௭)

விடைமதி யிரவித் திங்கள் விரவுநாண் மணிகன் னிப்போர்த்
தடையதிற் சுந்த ரேசன் றானுமை யுடனாய்ச் சார்ந்தாங்
குடையதன் னருளா னந்த வுததியி னனைய மூழ்த்துந்
திடனறி விக்குந் தீர்த்த விழாவணி சிறப்பச் செய்தான். (௨௮)

திருவரு ளதனான் மேடத் திங்களிற் பூர்வ பக்கப்
பிரதமை தொடங்கி யொன்பான் றினங்களு மெம்பி ராட்டி
யருடினம் பொழியு மொப்பி லாமுலைக் கணிவி ழாச்செய்
தொருவிலா னந்த வெள்ளத் துற்றனன் வார ணேசன். (௨௯)

அன்புசெய் தடுத்து வேண்டு மடியவர் வேண்டி யாங்கே
முன்புற வருள்வா தாடு முதல்வர்க்கா வணிமா தத்தி
லின்புறு பூர்வ பக்கச் சதுர்த்தியீ ரைந்து நாண்முன்
னன்புறத் தொடங்கிச் செய்யுந் திருவிழா நடத்தி னானால். (௩௦)

அருண்மிகு வார ணேச னங்குச்செய் திருத்தொண் டெல்லை
யுரைசெய்த லரிதா லந்த வுத்தமன் சுந்த ரேசன்
பொருவரு தளிமுன் றங்க பூசனை யென்று மேன்மேற்
பெருகுறக் கழனி யாதிப் பெருந்தனம் பிறங்க வைத்தான். (௩௧)

இவ்வகை வார ணேச னெழிற்றிருப் பணிகள் செய்தாங்
கவ்வயி ராவ தேச னருட்கழ லனும் போற்றித்
திவ்விய யோக ஞானச் செந்நெறி நின்று பன்னாள்
வவ்விய கன்ம சேட மாய்ந்தொளிர் விளக்கம் பெற்றான். (௩௨)

நின்மல முத்த வார ணேசனு மருளா லாங்குப்
பொன்மலர் விமான மேவப் புனிதனவ் வார ணேசன்
றன்மனை யோடி வர்ந்து தானருச் சித்து வந்த
சின்மய முத்த லிங்கந் திரைக்கட லுய்த்துச் செல்வான் (௩௩)

திவியகற் பகப்பூ மாரி சேனைலா நிறையப் பெய்தே
யுவகையாற் பாச வேகி யொளிர்சிவ லோக மெய்திச்
சிவனரு ளுருவம் பெற்றுத் தேவிசா ரூபம் பெற்ற
தவமுதிர் மனைவி பாங்காய்ச் சாரவின் புற்று வாழ்ந்தான். (௩௪)

என்னமா மலய வெற்பி னிருந்தவ முனிவர் வேந்தன்
சொன்னவா வினையுள் ளோகை துதையவிப் பெருந்தோட் டத்தின்
மன்னுசீர் மான்மி யங்கண் மகிழ்ந்துகேட் டெலெ டுத்த
நன்னலம் பெற்றோ மென்றார் நமந்தனர் முனிவ ரெல்லாம். (௩௫)

என்றுரை சூத னிந்த மான்மிய முழுது மேனு
மொன்றொரு சருக்க மேனு முரைக்குநர் கேட்டோர் கற்றோர்
துன்றிக போக முற்றுந் தோய்ந்துமேல் வீடுஞ் சார்வர்
நன்றென முனிவ ரோர்ந்து நவிலரு முவகை பூத்தார். (௩௬)

திருப்பெருந் தோட்டம் வாழி திகழ்திருக் கோயில் வாழி
யருட்பெருங் கடலா மொப்பி லாமுலை யம்மை வாழி
பொருட்பெருஞ் சுந்த ரேசன் பொற்கழல் வாழி தொண்டர்
தெருட்பெரும் பூதி கண்டி திருப்பஞ்சாக் கரமும் வாழி. (ௗஎ)

உலகெலாஞ் சுந்த ரேசற் குரியவிப் புராண மோதி
நலனுறப் பிறக்குஞ் சொல்லி நயந்துகே ழ்ழி வாழி
மலர்சரி யாதி வாழி மகேசுர பூசை வாழி
குலவுமிப் புராண மென்றுங் குவலயத் தினிது வாழி. (ௗஅ)

**வாரணேசச் சருக்கம் முற்றிற்று.**

**ஆகத் திருவிருத்தம் (எசுக)**

பெருந்தோட்டத்து அத்தீச்சுர புராணம்

முற்றிற்று.

காரைக்குடி :—“ ஞானம்பிகா ” ப்ரின்டிங் வொர்க்ஸ். 152-1000-17.